முழுப் பதிப்புரிமையுடையது

அந்தரங்கமானது

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

**க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை ~ 2022 (2023)**

# 23 - அரசியல் விஞ்ஞானம்

# புள்ளியிடும் திட்டம்



இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்திற்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக் கொள்ளப்படும் கருத்துக்களுக்கேற்ப இதில் உள்ள சில விடயங்கள் மாற்றப்படலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன.

**வினாப்பத்திரம்** I

A மற்றும் B ஆகிய இரு பகுதிகளைக் கொண்டது.

நேரம்: **02** மணித்தியாலங்கள்

**வினாப்பத்திரம் I இன் A பகுதி**

தெரிவு **05** இனைக் கொண்ட பல்தோர்வு வினாக்கள் **30** ஆகும். எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.

ஒரு வினாவிற்கு **02** புள்ளிகள் வீதம் மொத்தம் **60** புள்ளிகளாகும்.

**வினாப்பத்திரம் I இன் B பகுதி**

குறுவிடை வழங்கத்தக்க **20** வினாக்களைக் கொண்டது. எல்லா வினாக்களுக்கும் விடை எழுத வேண்டும்.
ஒரு வினாவுக்கு **02** புள்ளிகள் வீதம் **40** புள்ளிகளாகும்.

*** வினாப்பத்திரம் I இன் A பகுதியினதும் B பகுதியினதும் மொத்தப் புள்ளிகள் 100 ஆகும்.**

**வினாப்பத்திரம் II**

நேரம்: **03** மணித்தியாலங்கள்

இது **I, II, III** என மூன்று பகுதிகளைக் கொண்டது.

பகுதி I இல் இருந்து குறைந்தது ஒரு வினாவினையும், **II** இல் இருந்து குறைந்தபட்சம் இரு வினாக்களையும், பகுதி **III** இல் இருந்து குறைந்தபட்சம் ஒரு வினாவையும் உள்ளடக்கி 05 வினாக்களுக்கு விடை எழுத வேண்டும்.

பகுதி I - கட்டுரை மற்றும் அரை கட்டமைப்பு வகை வினாக்கள் **03** காணப்படும்.

பகுதி II - கட்டுரை மற்றும் அரை கட்டமைப்பு வகை வினாக்கள் **04** காணப்படும்.

பகுதி III- கட்டுரை மற்றும் அரை கட்டமைப்பு வகை வினாக்கள் **03** காணப்படும்

வினாப்பத்திரம் **II** இற்கான மொத்தப் புள்ளிகள் **100** ஆகும்.

இறுதிப் புள்ளிகளைக் கணித்தல்

வினாப்பத்திரம் I = 100

வினாப்பத்திரம் II = 100

இறுதிப் புள்ளிகள் $= \frac{200}{2} = 100$

## பரீட்சகர்களுக்கான அறிவுறுத்தல் :

இப் புள்ளியிடும் திட்டத்தினுள் **க.பொ.த (உயர் தரப் பரீட்சை - 2022 (2023)** நடைபெற்ற பரீட்சைக்கான இல. 23 அரசியல் விஞ்ஞானப்பாடத்திற்கு அமைவாக முதலாம் மற்றும் இரண்டாம் வினாத்தாள்களில் அடங்கும் வினாக்களுக்கான கட்டுப்பாட்டு பரிசோதனை சபையினால் தயாரிக்கப்பட்ட மாதிரி விடைத் தொகுதிகளே உள்ளடங்கியுள்ளன. இவ்விடைகள் உதவி பரிசோதகர்களுக்கு விடைகளை மதிப்பிடுவதற்கான ஒரு வழிகாட்டி மட்டுமே ஆகும்.

வினாத்தாள் II இற்கான விடைகளில் கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான அடிப்படை விடயங்கள் மாத்திரமே உள்ளடங்கியுள்ளது. இவ் விடயங்களுக்கு மேலதிகமாக பரிட்சார்த்திகள் மேலதிக விடயங்களை முன் வைத்திருப்பின் அதன் பொருத்தப்பாட்டினை கவனத்திற் கொண்டு அதற்கான புள்ளிகளை வழங்க பரிசோதகர் நடவடிக்கை எடுக்க வேண்டும். விடைகளுக்கான புள்ளிகளை வழங்கும்போது கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் குறித்து பரிசோதகர் விசேட அவதானத்தினைச் செலுத்த வேண்டும்.

(அ). வினாவினை சரியாக விளங்கிக் கொள்ளப்பட்டுள்ளதா? அறிமுகம் மற்றும் ஆரம்பித்தல் என்பவற்றின் மூலம் அதனை விளங்கிக் கொள்ள முடியும்.

(ஆ). வினாக்களுக்கு உரிய விடயங்களை சரியாகத் தெரிவு செய்துள்ளனரா? மற்றும் அவ்விடயங்களை சரியான முறையில் ஒழுங்கமைத்து முன்வைத்துள்ளனரா? என்பது தொடர்பாகவும்

(இ). விடயங்களை போதுமானளவு பகுப்பாய்வு செய்துள்ளனரா? என்பது பற்றியும்

(ஈ). இறுதி முடிவுக்கு வந்துள்ளனரா? மற்றும் இந்த இறுதி முடிவின் தர்க்கமுறை பொருத்தமுடையதா? என்பது பற்றியும்

பரீட்சார்த்திகள் விடையினுள் முன்வைக்கின்ற விடயங்கள் தொடர்பில் பிரச்சினைக்குரிய நிலைமை ஒன்று காணப்படுமாயின் அது தொடர்பில் பிரதான பரீட்சகரின் கவனத்திற்குக் கொண்டுவந்து தீர்மானம் ஒன்றினை மேற்கொள்ள வேண்டும்.

## வினாப்பத்திரம் - I

ஒட்டுமொத்த பாடத்திட்டமும் வினாத்தாளில் உள்ளடங்கும் வகையில் A, B என இரு பிரிவுகளைக் கொண்டது. A பகுதியில் 5 தெரிவுகளைக் கொண்டது.

B பகுதி குறு விடைகள் 02 வீதம் எதிர்பார்க்கப்படும் 20 வினாக்களைக் கொண்டது.

ஒட்டுமொத்த பாடத்திட்டம் தொடர்பில் பரீட்சார்த்தியின் விடய ரீதியான தெரிவினை பரிதோதிப்பது இப்பிரிவின் நோக்கமாகும்.

## வினாப்பத்திரம் - II

மூன்று பகுதிகளையும் 10 வினாக்களையும் கொண்டது.

பகுதி I - கட்டுரை மற்றும் அரைக் கட்டமைப்பு வகை வினாக்கள் 03 காணப்படும்.

பகுதி II - கட்டுரை மற்றும் அரைக் கட்டமைப்பு வகை வினாக்கள் 04காணப்படும்.

பகுதி III - கட்டுரை மற்றும் அரை கட்டமைப்ப வகை வினாக்கள் 03காணப்படும்.

பகுதி I அரசியல் விஞ்ஞான பாடத்தினுள் உள்ளடங்கியுள்ள கோட்பாடுகள் மற்றும் அவற்றின் நடைமுறைப் பயன்பாடுகள் தொடர்பில் பரீட்சார்த்திகளின் அறிவு, தெளிவினை பரிசோதிப்பதே வினாப்பத்திரத்தின் இப்பகுதியின் நோக்கமாகும். இதன்படி சில வினாக்களின் மூலம் கோட்பாட்டு ரீதியான எண்ணக்கருக்கள் தொடர்பாக நேரடியாக பரீட்சார்த்தியின் அறிவனை பரிசோதிப்பதோடு மேலும் சில வினாக்கள் மூலம் தெரிவு செய்யப்பட்ட நாடுகள் சிலவற்றின் ஊடாக கோட்பாடு மற்றும் நடைமுறை என்பவற்றிற்கிடையில் காணப்படும் தொடர்புகள் பற்றிய பரீட்சார்த்தியின் அறிவு மற்றும் தெளிவு என்பன பரிசோதிக்கப்படும்.

பகுதி II இன் நோக்கம் யாதெனில் இலங்கையில் பிரித்தானியர் காலணித்துவ காலத்தில் பிரித்தானிய ஆட்சியாளர்களால் நடைமுறைப்படுத்தப்பட்ட அரசியல், பொருளாதார மற்றும் சமூக மறுசீரமைப்பபுக்களின் தாக்கங்கள் மற்றும் அதன் பெறுபேறுகள் தொடர்பாக சுதந்திரத்திற்குப் பின்னரான காலத்தில் இலங்கையின் அரசியல் மற்றும் அரசியலமைப்பு வளர்ச்சிகள் தொடர்பில் பரீட்சார்த்திகளின் அறிவு மற்றும் தெளிவினைப் பரிசோதிப்பதாகும்.

பகுதி III இன் நோக்கம் யாதெனில் ஒப்பீட்டு அரசியலமைப்பு, சர்வதே அரசியலின் புதிய அசைவியக்க தளத்தில் இலங்கையின் வெளிநாட்டு கொள்கை தொடர்பாகவும், ஒட்டுமொத்த பாடத்திட்டத்தோடு தொடர்புடைய தனித் தலைப்புக்கள் சில தொடர்பில் பரீட்சாத்தியிடம் காணப்படும் அறிவு மற்றும் தெளிவினை பரிசோதிப்பதாகும்.

**பகுதி II இற்கான அறிவுறுத்தல்கள்**

இவ்வினாக்கள் மொத்தமாக 20 புள்ளிகளைக் கொண்டவை. புள்ளிகளை வழங்குகையில் பின்வரும் அறிவுறுத்தல்களைக் கவனமாகப் பின்பற்றவும்.

| | |
|---|---|
| (i) அறிமுகம் / விடைக்கான பிரவேசம் | - உயர்ந்தபட்சம் 02 புள்ளிகள் |
| (ii) முக்கிய விடயங்கள் / கருத்துக்கள், கலந்துரையாடல் | - உயர்ந்தபட்சம் 16 புள்ளிகள் |
| (iii) முடிவுரை | - உயர்ந்தபட்சம் 02 புள்ளிகள் |

மேற்கூறப்பட்டவாறு புள்ளிகளை வழங்குவதுடன் பின்வரும் வழிகாட்டற் குறிப்புக்களையும் கருத்திற் கொள்ளவும்.

(அ) **அறிமுகம் விடைக்கான பிரவேசம்:** ஒரு அல்லது இரண்டு பந்திகளில் அமையலாம். எவ்வாறாயினும் வினாவை வேறுவடிவத்தில் மீளஎழுதுவதாக அமையக்கூடாது. விடையின் உள்ளடக்கத்தை அறிமுகம் செய்வதாக அமைந்திருத்தல் வேண்டும். புள்ளிவழங்கும்போது தரப்பட்டுள்ள விடைக்குப் பொருத்தமான விடயங்கள் அறிமுகத்தில் எழுதப்பட்டுள்ளதா என்பதைச் சரிபார்த்து புள்ளி வழங்கவும். பலவீனமானதோர்/ பொருத்தமற்றதோர் அறிமுகத்திற்கு புள்ளிகள் வழங்குவதா இல்லையா என்பதைப் பரீட்சகர்கள் தீர்மானிக்கமுடியும். நல்ல, தரமான, போதியளவு, கருத்துக்களைக் கொண்டுள்ள அறிமுகம் / விடைக்கான பிரவேசம் ஆகியவற்றைக் கொண்ட விடைக்கே முழுமையான புள்ளிகளை வழங்க முடியும்.

(ஆ) **கலந்துரையாடல்:** ஒவ்வொரு விடைக்கான முக்கிய விடயங்கள்/ கருத்துக்களை புள்ளிவழங்கும் திட்டம் வழங்குகின்றது. பரீட்சகர்கள் புள்ளிவழங்கும் திட்டத்திலுள்ள விடயங்கள் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளதா, போதியளவு விவரிக்கப்பட்டுள்ளதா என்பதனை புள்ளி வழங்கும்போது சரிபார்த்தல் வேண்டும். வெறுமனே கருத்துக்களை மட்டும் (Points) குறிப்பிடுவது ஒருநல்ல விடையாகாது. பரீட்சார்த்திகள் தமது கலந்துரையாடலில் சுயாதீன அறிவினை மற்றும் அரசியல் விஞ்ஞான பாடத்துடன் தொடர்புடைய புதிய தகவல்களை முன்வைத்திருப்பார்களாயின் அதற்கு மேலதிக புள்ளிகள் வழங்கப்பட வேண்டும்.

(இ) முடிவுரை: இது வினாவை மீளஎழுதுவதன்று. ஒரு சிறந்த முடிவுரை பின்வரும் விடயங்களைக் கொண்டமைதல் வேண்டும்.

01 விடையில் வழங்கப்பட்டுள்ள விடயங்களின் சரியான சுருக்கம் ஒன்றினை முன்வைத்தல்

02 வழங்கப்பட்டுள்ள விடையின் பகுப்பாய்வு சுருக்கம் ஒன்றினை முன்வைத்தல்

03 பரீட்சார்த்தி விடையில் முன்வைத்துள்ள பிரதான வாதங்கள் இவ்வினா பற்றிய பரீட்சார்த்தியின் சுய அவதானிப்பு/ பகுப்பாய்வு வாதம் ஆகியவற்றை முன்வைக்கலாம்.

04. முடிவுரை ஒன்று அல்லது இரண்டு பந்திகளில் அமையலாம்.

சிலநேரங்களில் பரீட்சார்த்திகள் முடிவுரை என குறிப்பிடாமல் தமது விடையினை நிறைவு செய்திருக்க முடியும். இது குறித்து பரீட்சகர்கள் அவதானமாக இருக்க வேண்டும்.

# பகுதியளவிலான கட்டமைப்பு வினாக்கள்

இவ் வினாப்பத்திரத்தில் இரண்டு பகுதியளவில் கட்டமைக்கப்பட்ட வினாக்கள் உள்ளன. பரீட்சார்த்திகள் வழங்கப்பட்டுள்ள பல தெரிவுகளில் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளித்தல் வேண்டும்

பகுதியளவிலான கட்டமைக்கப்பட்ட விடைகளை மதிப்பிடுகையில் பின்வரும் வழிகாட்டலைப் பின்பற்றவும்.

i. பரீட்சார்த்திகள் ஒவ்வொரு தலைப்புக்கும் நீண்ட விடையை எழுதவேண்டும் என எதிர்பார்க்கப்படவில்லை. பொதுவாக சுருக்கமான விடையாக இருத்தல் வேண்டும். அதேவேளை தலைப்பின் அனைத்து பிரதான விடயங்களையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

ii. பகுதியளவிலான கட்டமைக்கப்பட்ட வினாவுக்கான விடை கட்டுரைவினாவினைப் போன்று பின்வரும் பகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும். அவையாவன

(i) அறிமுகம் விடைக்கான பிரவேசம் - உயர்ந்தபட்சம் 01 புள்ளி

(ii) தரவுகளை கருத்துக்களை அடிப்படையாகக் கொண்ட விவரிப்பு: உயர்ந்தபட்சம் 08 புள்ளிகள். கலந்துரையாடலுக்கு புள்ளி வழங்கும்போது விடையின் தரம், குறிப்பாக பாடம் தொடர்பான ஆழமானஅறிவு, சுயாதீனஅறிவு, விவரண மற்றும் பகுப்பாய்வுதிறன்கள், மொழிநடை மற்றும் முன்வைக்கும் திறன் என்பவற்றினைக் கருத்தில் கொள்ளவேண்டும்.

(iii) முடிவுரை – உயர்ந்தபட்சம் 01 புள்ளி

குறிப்பு : சில பரீட்சார்த்திகள் கட்டுரைவகை மற்றும் பகுதியளவில் கட்டமைக்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்கையில் அறிமுகம்/ விடைக்கான பிரவேசம், முடிவுரை ஆகியவற்றை வெளிப்படையாகக் குறிப்பிடாது எழுதியிருக்கலாம். தயுவுசெய்து அவை பற்றிக் கருத்திற் கொண்டு உரிய புள்ளிகளை வழங்கவும்

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது தெளிவான இலக்கத்தில் எழுதவும்.
3. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, சிற்றொப்பத்தை இடவும்.
4. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் □ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) ........................................................................ ✓ $\frac{4}{5}$
........................................................................
........................................................................

(ii) ........................................................................ ✓ $\frac{3}{5}$
........................................................................
........................................................................

(iii) ........................................................................ ✓ $\frac{3}{5}$
........................................................................
........................................................................

(03) (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

பல்தேர்வு விடைத்தாள் (துளைத்தாள்)

1. க.பொ.த.(உ.த) மற்றும் தகவல் தொழில்நுட்பப் பரீட்சைக்கான துளைத்தாள் திணைக்களத்தால் வழங்கப்படும். சரியாக துளையிடப்பட்டு அத்தாட்சிப்படுத்திய துளைத்தாள் தங்களுக்கு கிடைக்கப்பெறும். அத்தாட்சிப்படுத்திய துளைத்தாளைப் பயன்படுத்துவது பரீட்சகரின் கடமையாகும்.
2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறிப்பிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறிப்பிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறிப்பிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.
3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை ○ அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.

**கட்டமைப்பு கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக 2 இலக்கங்களில் பதியவும். வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதவும்.

**புள்ளிப்பட்டியல் தயாரித்தல்**

இம்முறை சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது. இது தவிர ஒவ்வொரு வினாப் பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும். பத்திரம் I றிகான பல்தேர்வு வினாப்பத்திரம் மட்டும் இருப்பின் புள்ளிகள் இலக்கத்திலும் எழுத்திலும் பதியப்பட வேண்டும்.

o o o

Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2022(2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சை, 2022(2023)
General Certificate of Education (Adv. Level) Examination, 2022(2023)

| | | |
|---|---|---|
| දේශපාලන විද්‍යාව I<br>அரசியல் விஞ்ஞானம் I<br>Political Science I | 23 T I | පැය දෙකයි<br>இரண்டு மணித்தியாலம்<br>*Two hours* |

சுட்டெண் : ..............................

**அறிவுறுத்தல்கள்:**
- இவ்வினாத்தாள் A, B ஆகிய இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது.
- பகுதி A பல்தேர்வு வினாக்கள் 30 இனையும் பகுதி B குறு வினாக்கள் 20 இனையும் கொண்டுள்ளன.
- சகல வினாக்களுக்குமான விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுக.
- ஒவ்வொரு வினாவுக்கும் இரண்டு புள்ளிகள் வீதம் மொத்தம் 100 புள்ளிகள் வழங்கப்படும்.

பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்

| பக்க இல. | வினா இல. | புள்ளிகள் |
|---|---|---|
| 1 | 1 - 2 | |
| 2 | 3 - 9 | |
| 3 | 10 - 16 | |
| 4 | 17 - 23 | |
| 5 | 24 - 30 | |
| 6 | 31 - 39 | |
| 7 | 40 - 47 | |
| 8 | 48 - 50 | |
| மொத்தம் | | |

| | கையொப்பம் | குறியீட்டெண் |
|---|---|---|
| 1 ஆம் பரீட்சகர் | | |
| 2 ஆம் பரீட்சகர் | | |
| மேலதிக பிரதம பரீட்சகர் | | |
| எண்கணிதப் பரிசோதகர் | | |
| பிரதம பரீட்சகர் | | |

## பகுதி A

- 1 தொடக்கம் 30 வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்குமான சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்து, அந்த இலக்கத்தினை அடைப்புக்குறிக்குள் உள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

1. அரசியல் விஞ்ஞானக் கற்கையானது
   (1) அரசியல் அதிகாரத்தினை எவ்வாறு துஷ்பிரயோகம் செய்வது என்பது தொடர்பாகக் கற்பதற்கு உதவுகின்றது.
   (2) ஒரு குறுகியகால வரலாற்றினைக் கொண்டது.
   (3) தத்துவார்த்த பரிசீலனைகளுடன் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
   (4) சமூகத்தில் அரசியல் அதிகாரத்தின் இருப்பினை விளங்கிக் கொள்வதற்கு அவசியமாகும்.
   (5) அரசியலில் ஈடுபடுதல் என்பதிலிருந்து வேறுபடுவதில்லை. (.......)

2. அரசியல் செயலென்பது
   (1) பிரஜைகள் ஆன்மீக வாழ்க்கையினைக் கொண்டு நடாத்த உதவுகின்றது.
   (2) போராட்ட இயக்கங்களில் இணைந்து கொள்வதனை உள்ளடக்குவதில்லை.
   (3) தேர்தல்களில் வாக்களிப்பதுடன் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
   (4) பிரஜைகளுக்கிடையில் காணப்படும் ஒரு சமூக பிரயோகமாகும்.
   (5) கட்சி அரசியலுடன் தொடர்புடைய செயற்பாடுகளுடன் வரையறுக்கப்பட்டுள்ளது. (.......)

3. அரசியல் பொருளாதார அணுகுமுறை தொடர்பான ஆரம்பகால முன்னிலை சிந்தனையாளர்களில் ஒருவர்
   (1) பிளேட்டோ
   (2) தோமஸ் ஹொப்ஸ்
   (3) அடம் ஸ்மித்
   (4) மக்கியாவல்லி
   (5) மொண்டெஸ்கியு (......)

4. பெண்ணியவாதிகளால் சமூக மற்றும் அரசியல் கோட்பாட்டிற்கு அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு புதிய எண்ணக்கருவானது,
   (1) பால்நிலை சமத்துவமாகும்.
   (2) வர்க்கப் போராட்டமாகும்.
   (3) வரையறுக்கப்பட்ட அரசாங்கமாகும்.
   (4) மக்கள் இறைமையாகும்.
   (5) மனித உரிமைகளாகும். (......)

5. நடத்தைவாதம் என்பது,
   (1) 18ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஐரோப்பாவில் வளர்ச்சியடைந்தது.
   (2) முதலாம் உலகப்போரின்போது அரசியல் விஞ்ஞானத்தின் பிரதான அணுகுமுறையாக அமெரிக்காவில் காணப்பட்டது.
   (3) அரசியல் விஞ்ஞானத்தில் விஞ்ஞானரீதியான திருப்பத்திற்கு வித்திட்டது.
   (4) சமூக வகுப்பு அரசியலில் எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகின்றது என்பதை கற்பதனை வலியுறுத்தியது.
   (5) அரசியல் விஞ்ஞானத்தில் நெறிமுறைசார் பரிசீலனைகளை ஊக்குவித்தது. (......)

6. அரசின் வகிபங்கில் அடங்குவது,
   (1) சமூக நோக்கங்களுக்குப் பொருத்தமான சூழ்நிலையினை உருவாக்குதலாகும்.
   (2) சமூகத்தில் சட்டத்தினையும் ஒழுங்கினையும் பேணுதலாகும்.
   (3) பொதுக்கொள்கையினை விமர்சனத்துக்கு உள்ளாக்குதலாகும்.
   (4) தேசியப் பொருளாதாரத்தினை நெறிப்படுத்தும் பணியினை முழுமையாக சந்தை சக்திகளுக்கு வழங்குதலாகும்.
   (5) பிரஜைகளின் சுதந்திரத்தினைக் கட்டுப்படுத்தும் வகையில் சட்டங்களை இயற்றுதலாகும். (......)

7. நவீன தேசிய அரசு,
   (1) வரையறுக்கப்பட்ட ஆள்புல பிரதேசத்தினைக் கொண்டதாகும்.
   (2) கோத்திர அரசின் தொடர்ச்சியான பரிணாம வளர்ச்சியாகும்.
   (3) ஒரு இனக்குழுவினை மாத்திரம் கொண்டதாகும்.
   (4) இறைமை அதிகாரம் மத்தியமயப்படுத்தப்படாத ஒரு அரசு முறைமையாகும்.
   (5) எப்பொழுதும் ஜனநாயகத்தன்மைக் கொண்டதாகும். (......)

8. சோசலிசம்,
   (1) தாராண்மைவாதத்துக்குள் வளர்ச்சியடைந்த ஓர் அரசியல் கோட்பாடாகும்.
   (2) 20ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் தோற்றம் பெற்ற அரசியல் சிந்தனையின் ஒரு பிரிவாகும்.
   (3) முதலாளித்துவ வர்க்கத்தின் ஆட்சியினை நியாயப்படுத்துவதாகும்.
   (4) முதலாளித்துவத்துக்கு மாற்றீடான பொருளாதார மற்றும் சமூக நோக்கினை முன்வைத்ததாகும்.
   (5) தனியார் சொத்துரிமையினை நியாயப்படுத்தும் ஒரு கருத்தியலாகும். (......)

9. சமஷ்டி அரசாங்க முறையின் சாதகமான பண்புகளுள் ஒன்று,
   (1) ஒரு நாட்டினுள் காணப்படும் பிரதேச வேறுபாடுகளை கூர்மைப்படுத்தலாகும்.
   (2) மத்திய அரசாங்கத்தினை பலவீனப்படுத்தலாகும்.
   (3) ஒருமைப்படுத்தப்பட்ட சட்ட முறைமைக்கான அடித்தளத்தினை இடுதலாகும்.
   (4) வேற்றுமையிலும் அரசியல் ஒற்றுமையினை ஊக்குவித்தலாகும்.
   (5) நிர்வாகப் பன்முகப்படுத்தல் முறைக்கு ஒப்பானதாகக் காணப்படுதலாகும். (......)

10. மோதல் நிலைமாற்றம் என்பது,
(1) மோதலில் சம்பந்தப்பட்ட தரப்பினர் அமைதிப் பேச்சுவார்த்தை வழிமுறையினை தெரிவுசெய்தலாகும்.
(2) மத்தியஸ்தம் செய்தல் மற்றும் சமாதான உடன்படிக்கையொன்றின் ஊடாக மோதலைத் தீர்த்தலாகும்.
(3) ஒரு தரப்பினருக்கு வெற்றிகிட்டும் வகையில் மோதலை முடிவுக்குக் கொண்டுவருதலாகும்.
(4) மோதலுக்கான தீர்வின்றி மோதலை நீடித்து நிலைக்கச் செய்தலாகும்.
(5) மோதலொன்றின் நலன், இலக்குகள் மற்றும் இயக்கத்தன்மை என்பன மோதல் செயன்முறையில் மாற்றமடைதலாகும்.
(......)

11. அரசு பற்றிய சமூக ஒப்பந்தக் கோட்பாட்டிற்கிணங்க அரசு என்பது,
(1) ஒரு தெய்வீக தோற்றமாகும்.
(2) ஒரு அடக்குமுறை நிறுவனமாகும்.
(3) ஒரு ஆணாதிக்க கருவியாகும்.
(4) சமூகத்தால் உருவாக்கப்பட்டதாகும்.
(5) சொத்துடைமைக் கொண்ட சமூக வகுப்பினர்களின் ஆயுதமாகும். (......)

12. தாராளவாத அரசியல் கோட்பாட்டிற்கிணங்க, பிரஜைகள் அரசுக்கு அடிபணிவது ஏனெனில்,
(1) அரசு பிரஜைகளின் உரிமைகளைப் பாதுகாப்பதனால் ஆகும்.
(2) அரசு வன்முறைக்கான ஏகபோக உரிமையினைக் கோருவதனால் ஆகும்.
(3) அரசு தேசத்தின் அபிலாசைகளை பிரதிநிதித்துவப்படுத்துவதனால் ஆகும்.
(4) அரசு சமூகத்தினைவிட மேலானது என்பதனால் ஆகும்.
(5) அவர்களுக்கு வேறு மாற்றுத் தெரிவுகள் இல்லாமையினால் ஆகும். (......)

13. குடியரசுவாத அரசியல் கோட்பாட்டிற்கிணங்க,
(1) பிரஜைகள் அரசியல் ரீதியாக செயலூக்கத்துடன் இருக்கவேண்டிய அவசியமில்லை.
(2) அரசியல் சமூகமொன்றில் இறைமை அதிகாரத்தின் உரித்தாளர்கள் மக்கள் ஆவர்.
(3) அரசின் அதிகாரத்தினை சவாலுக்குட்படுத்த முடியாது.
(4) ஆட்சியாளர்களுக்கு அரசியல் அதிகாரம் பிறப்புரிமையாகக் கிடைக்கப்பெறுகின்றது.
(5) பிரஜைகள் பொது நலன்களில் அன்றி தனிநபர் உரிமைகள் தொடர்பாக அக்கறை கொண்டவர்களாக இருக்க வேண்டும்.
(......)

14. பாராளுமன்ற அரசாங்க முறையின் பண்புகளில் ஒன்று
(1) பிரித்தானிய பாராளுமன்ற அரசாங்கத்தின் சம்பிரதாயத்திற்கிணங்க கட்டியெழுப்பப்பட்டதாகும்.
(2) அமைச்சரவை நிறைவேற்று அதிகாரத்தினைக் கொண்டிருப்பதில்லை.
(3) அரசாங்கத்தின் இருப்பு சட்டத்துறையின் ஆதரவில் தங்கியிருப்பதில்லை.
(4) அரசாங்கத்தின் தலைவர் மக்களால் நேரடியாகத் தெரிவு செய்யப்படுகின்றார்.
(5) சட்டத்துறைக்கும் நிறைவேற்றுத்துறைக்குமிடையில் அதிகார வேறாக்கம் காணப்படுவது கட்டாயமானது.
(......)

15. தாராள மதசார்பின்மைவாதத்திற்கிணங்க,
(1) அரசின் அனுமதியுடன் மாத்திரமே மதம் இருப்புக்கொள்ள முடியும்.
(2) மதச் சுதந்திரம் என்பது பிரஜைகளின் அடிப்படை உரிமையாகும்.
(3) மதம் சமூக அடக்குமுறைக்கான நிறுவனமாகும்.
(4) மதத்தினையும் அரசியலையும் ஒன்றிணைப்பது சமூக நன்மைக்கு ஏதுவாகும்.
(5) அரசு சமூகத்தின் பெரும்பான்மையினரின் மதத்துடன் தன்னை அடையாளப்படுத்திக் கொள்ள வேண்டும்.
(......)

16. பிரதிநிதித்துவ ஜனநாயகம்,
(1) மக்கள் தீர்ப்பு ஏற்பாடுகளுக்கு விசேட முக்கியத்துவத்தினை வழங்குகின்றது.
(2) புராதன கிரேக்க நகர அரசுகளில் காணப்பட்ட ஜனநாயக முறையாகும்.
(3) இலங்கைப் பாராளுமன்றத்துக்கு உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்காகப் பயன்படுத்தப்படும் முறையாகும்.
(4) மக்கள் நேரடியாக அரசாங்கத்தில் பங்கேற்பதற்கான முறையாகும்.
(5) தாராள அரசியல் கோட்பாட்டுக்கு அப்பால் வளர்ச்சியடைந்த முறையாகும். (......)

**17.** ஜனநாயக முறைமைக்குள் தடைகள் மற்றும் சமன்பாடுகள் முறை அவசியமானது,
(1) சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு ஆகும்.
(2) அரசியல் அதிகாரம் ஒரு தனி நிறுவனத்தில் குவிமையப்படுத்தப்படுவதனைத் தடுப்பதற்கு ஆகும்.
(3) பிரஜைகளின் அரசியல் பங்கேற்பினை ஊக்குவிப்பதற்கு ஆகும்.
(4) ஆட்சி செயன்முறையில் வெளிப்படைத் தன்மையினை உறுதி செய்வதற்கு ஆகும்.
(5) அரசாங்கம் பிரஜைகளுக்கு பொறுப்புக்கூறுவதனை ஊக்குவிப்பதற்கு ஆகும். (......)

**18.** பொதுக்கொள்கை செயன்முறையில் சிவில் சமூகத்தின் வகிபாகங்களில் அடங்குவது,
(1) கொள்கை உருவாக்கம் மற்றும் கொள்கை மீளாய்வு ஆகும்.
(2) கொள்கைச் செயன்முறையில் ஓரங்கட்டப்பட்ட சமூகக் குழுக்களின் நலன்களைப் புறக்கணித்தல் ஆகும்.
(3) கொள்கைச் செயன்முறையில் தனியார் நலன்களை ஊக்குவித்தல் ஆகும்.
(4) கொள்கை அமுலாக்கத்தில் பிரஜைகளின் பங்கேற்பினை அதைரியப்படுத்தல் ஆகும்.
(5) பொதுமக்களின் பிரச்சினைகளை கொள்கை நிகழ்ச்சி நிரலின் கவனத்திற்கு கொண்டு வருதல் ஆகும். (......)

**19.** சர்வதேச அரசியலில் அரசு - சாரா செயற்பாட்டாளரில் அடங்குவது
(1) தேசிய அரசுகள்
(2) சார்க் (SAARC) அமைப்பு
(3) நேட்டோ (NATO) அமைப்பு
(4) பல்தேசியக் கம்பனிகள்
(5) ஐக்கிய நாடுகள் சபை (......)

**20.** ஏதேச்சாதிகார (அனைத்தாண்மை) அரசாங்கமொன்றின் பிரதான பண்பில் அடங்குவது,
(1) அரசாங்கத்தின் சகல மட்டங்களிலும் அதிகாரம் பகிரப்பட்டிருத்தல் ஆகும்.
(2) உறுதியான தடைகள் மற்றும் சமன்பாடுகள் முறை அரசியலமைப்பில் காணப்படுதல் ஆகும்.
(3) அரசின் அதிகாரம் ஒரு தனிநபரிடம் குவிந்திருத்தல் ஆகும்.
(4) பொதுக் கொள்கை உருவாக்கத்தில் பொறுப்புக்கூறல் தத்துவத்தினை ஊக்குவித்தல் ஆகும்.
(5) ஜனாதிபதி மற்றும் பிரதமருக்குமிடையில் பொறுப்புக்கள் சமமாக பகிரப்பட்டிருத்தல் ஆகும். (......)

- 21 தொடக்கம் 25 வரையிலான வினாக்களுக்கு கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்களில் இருந்து சரியான கூற்றுத் தொகுதியினைக் கொண்ட விடையினைத் தெரிவுசெய்து அதன் இலக்கத்தினை அடைப்புக்குறிக்குள் உள்ள புள்ளிக்கோட்டில் எழுதுக.

21. 1931 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட டொனமூர் அரசியலமைப்பு சீர்திருத்தம்
(A) இலங்கைக்கு இனவாரி பிரதிநிதித்துவ முறையினை அறிமுகம் செய்தது.
(B) நிறைவேற்றுக் குழு முறையினை அறிமுகம் செய்தது.
(C) பிரதிநிதித்துவ ஜனநாயக முறையினை வலுப்படுத்தியது.
(D) பெண்களுக்கு வாக்குரிமையினை வழங்கியது.
(E) இலங்கையில் ஜனநாயக நிலைமாற்றத்திற்கான அடித்தளத்தினை இட்டது.
(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE (......)

22. இலங்கையின் சோல்பரி அரசியலமைப்பின் விசேட பண்புகளாக காணப்பட்டவை எவை?
(A) ஈரங்க சட்ட சபையொன்றினை அறிமுகப்படுத்தியமை
(B) நீதித்துறையின் சுயாதீனத்தன்மையினை உறுதிப்படுத்தியமை
(C) பொதுச் சேவையினை மந்திரி சபையின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தமை
(D) இலங்கையின் டொமினியன் அந்தஸ்திற்கிணங்க ஒரு அரசாங்க முறையினை உருவாக்கியமை
(E) வெஸ்ட் மினிஸ்டர் மாதிரிக்கு ஒப்பான அரசாங்க முறையொன்றினை ஸ்தாபித்தமை
(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE (......)

**23.** இலங்கையின் 1972ஆம் ஆண்டு அரசியலமைப்பின் விசேட பண்புகளாக அமைந்தவை எவை?
(A) பாராளுமன்றத்தில் மேல்சபை ஒன்றினை உருவாக்கியமை
(B) அரசின் தலைவர் பிரதமரால் நியமிக்கப்பட்டமை
(C) குடியரசுப் பண்புகளைக் கொண்ட அரசாங்க முறையினை அறிமுகம் செய்தமை
(D) அரசியலமைப்பில் அரச கொள்கை வழிகாட்டித் தத்துவங்களை உள்வாங்கியமை
(E) மக்களே அரசியலமைப்பினை உருவாக்குபவர்கள் என்பதனை ஏற்றுக்கொண்டமை
(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE (......)

24. இலங்கையின் 1978ஆம் ஆண்டு அரசியலமைப்பின் கீழ்,
(A) ஜனாதிபதி அமைச்சரவையின் தலைவராக நியமிக்கப்பட்டமை
(B) 'இலங்கை ஒரு ஒற்றையாட்சி அரசு' என்ற தத்துவத்தினை மீள உறுதிசெய்தது
(C) அரசியலமைப்பு ஒப்பீட்டளவில் அதிகம் நெகிழாத்தன்மை கொண்டமைந்தது
(D) பிரதமரின் அதிகாரங்கள் மற்றும் பணிகள் பலப்படுத்தப்பட்டது
(E) அடிப்படை உரிமைகளுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் வலுப்படுத்தப்பட்டது.
(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE (......)

25. இலங்கையின் 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்புக்கான 19ஆவது திருத்தம்
(A) நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைத்தது.
(B) பாராளுமன்றத்தின் அதிகாரங்களை பலப்படுத்தியது.
(C) ஈரங்க சட்டசபையொன்றினை மீள அறிமுகம் செய்தது.
(D) சுயாதீன ஆணைக்குழுக்களின் அதிகாரங்களை அதிகரித்தது.
(E) பாராளுமன்ற சபாநாயகரை அரசியலமைப்பு பேரவையின் தலைவராக்கியது.
(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE (......)

● 26 தொடக்கம் 30 வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றும் இரு கூற்றுக்களைக் கொண்டுள்ளன. பின்வரும் அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள (1), (2), (3), (4), (5) ஆகிய விடைகளில் இருந்து பின்வரும் இரு கூற்றுகளுக்கும் மிகச் சரியாகப் பொருந்தும் விடையின் இலக்கத்தினைத் தெரிவுசெய்து அடைப்புக்குறிக்குள் எழுதுக.

| இலக்கம் | முதலாவது கூற்று | இரண்டாவது கூற்று |
|---|---|---|
| (1) | உண்மை | உண்மை |
| (2) | உண்மை | பொய் |
| (3) | பொய் | உண்மை |
| (4) | பொய் | பொய் |
| (5) | உண்மை | உண்மையாக இருப்பதுடன் முதலாவது கூற்றை மேலும் விவரிக்கின்றது. |

| | முதலாவது கூற்று | இரண்டாவது கூற்று | |
|---|---|---|---|
| 26. | இலங்கையின் 1972 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் ஊடாக நீதித்துறை அரசியல் செல்வாக்கில் இருந்து விடுவிக்கப்பட்டது. | இலங்கையின் 1978 ஆம் ஆண்டு மூல அரசியல் யாப்பு சுயாதீன பொதுச்சேவை ஆணைக்குழுவொன்றினைத் தாபித்ததன் ஊடாக பொதுச் சேவையினை பலப்படுத்தியது. | (......) |
| 27. | 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பிற்கான 18வது திருத்தம் ஜனாதிபதியின் பதவிக் காலம் தொடர்பாகக் காணப்பட்ட மட்டுப்பாட்டினை நீக்கியது. | 18வது திருத்தம், பாராளுமன்றப் பேரவையில் சிவில் சமூகப் பிரதிநிதித்துவத்தினை அதிகரிப்பதற்கான ஏற்பாடுகளை வழங்கியது. | (......) |
| 28. | 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பிற்கான 17வது திருத்தத்தின் நோக்கங்களில் ஒன்று பொதுச் சேவையினை அரசியல் தலையீட்டில் இருந்து விடுவிப்பதாகும். | 17வது திருத்தத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட அரசியலமைப்புப் பேரவை 10 உறுப்பினர்களைக் கொண்டு காணப்பட்டது. | (......) |
| 29. | 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பிற்கிணங்க ஜனாதிபதிக்கு ஒரு பதில் ஜனாதிபதியினை நியமிக்க முடியும். | ஜனாதிபதிக்கு தனது கடமை, பொறுப்புக்களை தற்காலிகமாக நிறைவேற்ற முடியாத நிலை ஏற்படும்போது ஜனாதிபதியின் கடமை பொறுப்புக்கள் தொடர்ச்சியாக இடம்பெறுவதனை 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பு உறுதிசெய்கிறது. | (......) |
| 30. | 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் கீழ் பிரதமரின் அதிகாரங்கள் மற்றும் பணிகள் 1972 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் கீழான பிரதமரின் அதிகாரங்கள் மற்றும் கடமைகளுக்கு ஒப்பானதாகக் காணப்பட்டது. | 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் கீழ் பிரதமர் தனது பதவியினை இராஜினாமா செய்யும்போது அல்லது பதவியில் இருந்து நீக்கப்படும்போது அமைச்சரவையும் கலைந்து விடுகின்றது. | (......) |

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
**අ.පො.ස. (උ.පෙළ) විභාගය / க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2022 (2023)**

**විෂය අංකය / பாட இலக்கம்: 23**
**විෂයය / பாடம்: அரசியல் விஞ்ஞானம்**

**ලකුණු දීමේ පටිපාටිය / புள்ளி வழங்கும் திட்டம்**

**I පත්‍රය / பத்திரம் I**

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|
| 01. | 4 | 11. | 4 | 21. | 5 |
| 02. | 4 | 12. | 1 | 22. | 3 |
| 03. | 3 | 13. | 2 | 23. | 5 |
| 04. | 1 | 14. | 1 | 24. | 2 |
| 05. | 3 | 15. | 2 | 25. | 3 |
| 06. | 2 | 16. | 3 | 26. | 4 |
| 07. | 1 | 17. | 2 | 27. | 2 |
| 08. | 4 | 18. | 5 | 28. | 1 |
| 09. | 4 | 19. | 4 | 29. | 5 |
| 10. | 5 | 20. | 3 | 30. | 3 |

✪ **විශේෂ උපදෙස් / விசேட அறிவுறுத்தல் :**
**එක් පිළිතුරකට / ஒரு சரியான விடைக்கு ලකුණු 02 බැගින් / 02 புள்ளி வீதம்**
**මුළු ලකුණු / மொத்தப் புள்ளிகள் 2 × 30 = 60**

## பகுதி B

31. அரசியல் மற்றும் அரசியல் விஞ்ஞானம் என்பவற்றுக்கிடையிலான தொடர்பில் காணக்கூடிய **இரண்டு** அம்சங்களைப் பெயரிடுக.

(1) ..............................................................................................................

(2) ..............................................................................................................

32. அரசாங்க செயன்முறை பல பணிகளைக் கொண்டுள்ளது. அவற்றில் **இரண்டினைப்** பெயரிடுக.

(1) ..............................................................................................................

(2) ..............................................................................................................

33. அரசியல் கற்கைக்கான தத்துவார்த்த / நெறிமுறைசார் அணுகுமுறையின் முன்னோடி சிந்தனையாளர்கள் இருவரைப் பெயரிடுக.

(1) ..............................................................................................................

(2) ..............................................................................................................

34. நவீன ஆள்புல அரசுகள் நான்கு பிரதான அங்கங்களின் / மூலக்கூறுகளின் கீழ் ஒழுங்கமைந்துள்ளன. அவற்றில் **இரண்டினைப்** பெயரிடுக.

(1) ..............................................................................................................

(2) ..............................................................................................................

35. (1) அரசிடமுள்ள அதிகாரத்துவத்தினை விபரிக்கும் அரசியல் விஞ்ஞான எண்ணக்கரு எது?

..............................................................................................................

(2) "அரசு என்பது சமூகத்தில் காணப்படும் உயர் அதிகாரம் கொண்ட மற்றும் மேலான நிறுவனமாகும்" என அரசினை வரையறை செய்யும் அரசியல் கருத்தியல் எது?

..............................................................................................................

36. (1) 'பொது விருப்பம்' என்ற எண்ணக்கருவினை முன்வைத்த அரசியல் சிந்தனையாளரின் பெயர் என்ன?

..............................................................................................................

(2) பின் காலனித்துவ அரசு என்ற எண்ணக்கருவினை முன்வைத்த கோட்பாட்டாளர் யார்?

..............................................................................................................

37. அரசின் தோற்றம் பற்றிய சமூக ஒப்பந்தக் கோட்பாட்டினை முன்வைத்த இரு அரசியல் தத்துவவியலாளர்களைப் பெயரிடுக.

(1) ..............................................................................................................

(2) ..............................................................................................................

38. நிறைவேற்று அதிகாரம் ஒழுங்கமைந்திருக்கும் விதத்தினை அடிப்படையாகக் கொண்டு நான்கு அரசாங்க மாதிரிகள் காணப்படுகின்றன. அவற்றில் இரண்டினைக் குறிப்பிடுக.

(1) ..............................................................................................................

(2) ..............................................................................................................

39. (1) அரசு மதத்துடன் தன்னை அடையாளப்படுத்திக் கொள்ளக்கூடாது என்பதனைக் குறிப்பிடும் அரசியல் கருத்தியல் எது?

..............................................................................................................

(2) முதலாளித்துவத்தினை இல்லாதொழிப்பதனை வலியுறுத்தும் அரசியல் கருத்தியல் எது?

..............................................................................................................

40. (1) புராதன ஐரோப்பாவில் நேரடி ஜனநாயகம் எந்த நாட்டில் நடைமுறையில் இருந்தது?

(2) பிரித்தானியாவில் சர்வஜன வாக்குரிமை எந்த ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது?

41. (1) இந்தியாவின் சமஷ்டி அலகுகளை அடையாளப்படுத்தப் பயன்படுத்தப்படும் சொற்பதம் எது?

(2) சுவிட்சர்லாந்தின் சமஷ்டி அலகுகள் என்ன பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றது?

42. (1) சோல்பரி அரசியலமைப்பு இலங்கைக்கு ஓரங்க சட்டசபையினையா அல்லது ஈரங்க சட்டசபையினையா அறிமுகம் செய்தது?

(2) இலங்கைக்கு விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை எந்த அரசியலமைப்பின் கீழ் அறிமுகம் செய்யப்பட்டது?

43. இலங்கையின் 1978ம் ஆண்டு அரசியலமைப்பின் கீழ் ஜனாதிபதியின் அதிகாரங்களை அதிகரித்த இரண்டு திருத்தங்களைப் பெயரிடுக.

(1)

(2)

44. (1) வர்க்க முரண்பாடு என்பது சமூக வளர்ச்சியின் பிரதான இழு சக்தி என எந்த அரசியல் கோட்பாட்டில் குறிப்பிடப்படுகின்றது?

(2) மோதல் என்பது பல்வேறு சாதகமான (ஆக்கபூர்வமான) செயற்பாடுகளைக் கொண்டுள்ளது எனக் குறிப்பிட்ட சமூகவியலாளர் ஒருவரைப் பெயரிடுக.

45. இந்திய மதசார்பின்மைவாத எண்ணக்கரு இரண்டு அர்த்தங்களைக் கொண்டுள்ளது. அவை யாவை?

(1)

(2)

46. ஒரு அரசியல் இயக்கம் என்ற வகையில் தேசியவாதம் இரண்டு பிரதான வடிவங்களைக் கொண்டுள்ளது. அவை யாவை?

(1)

(2)

47. (1) தேசியவாதம் தொடர்பான *Imagined Communities* (*கற்பனை சமூகங்கள்*) என்ற நூலினை எழுதிய கோட்பாட்டாளரின் பெயரினைக் குறிப்பிடுக.

(2) பிரஜைகள் அரசியல் செயன்முறையில் செயலூக்கத்துடன் பங்குபற்ற வேண்டும் எனக் குறிப்பிட்ட புராதன அரசியல் சிந்தனையாளர் யார்?

**48.** இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையில் செல்வாக்குச் செலுத்தும் இரண்டு காரணிகளைக் குறிப்பிடுக.

(1) ..............................................................................................................

(2) ..............................................................................................................

**49.** (1) சுதந்திரத்துக்குப் பின்னரான இலங்கையில் குடியுரிமை / பிரஜாவுரிமைச் சட்டத்தினை அறிமுகம் செய்த அரசாங்கம் எது?

..............................................................................................................

(2) இலங்கையில் சிங்கள மொழியினை உத்தியோகபூர்வ அரச மொழியாக அறிமுகம் செய்த அரசாங்கம் எது?

..............................................................................................................

**50.** 2015 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த 'நல்லாட்சி' கூட்டணி அரசாங்கம் அறிமுகம் செய்த இரண்டு ஜனநாயக சீர்திருத்த முன்னெடுப்புக்களைப் பெயரிடுக.

(1) ..............................................................................................................

(2) ..............................................................................................................

❋❋❋

பகுதி – B

31) i. அரசியல் செய்தல் - நடைமுறை அரசியல்

ii. அரசியல் கற்றல்

32) சட்ட உருவாக்கம்/ நடைமுறைப்படுத்தல்/ கொள்கை உருவாக்கம்/ பொது மக்களுடன் தொடர்புகளைப் பேணுதல்/ ஏனைய அரசுகளுடன் தொடர்புகளைப் பேணல்/ சட்ட ஒழுங்கினைப் பேணுதல்/ முரண்பாட்டுத் தீர்வு/ பொருளாதார முகாமைத்துவம்

33) I. அரிஸ்டோடில்

II. பிளேட்டோ

34) வரையறுக்கப்பட்ட ஆள்புலம்/ ஆள்புலம்

இறைமை

தேசிய அடிப்படை/ தேசியத்துவம்

அரசாங்கம்

35) I. இறைமை

ii. பாசிசம்/ நாசிசம்

36) i. ருசோ

ii. ஹம்சா அலவி

37) தோமஸ் ஹொப்ஸ்/ ஹொப்ஸ்

ஜோன் லொக்/ லொக்

ருசோ

இமானுவேல் காண்ட்

38) பாராளுமன்ற அரசாங்கமுறை / மந்திரிசபை/ கபினட் / வெஸ்மின்ஸ்டர்

ஜனாதிபதி முறை

கலப்பு அரசாங்க முறை / அர்த்த ஜனாதிபதி முறை / பாதி ஜனாதிபதி முறை/ இரட்டை நிறைவேற்று முறை/ அரைகுறை ஜனாதிபதி முறை.

ஏதேச்சாதிகார அரசாங்கமுறை அல்லது அனைத்தான்மை அரசாங்க முறை

39) I. மதசார்பின்மைவாதம் / தாராள மதசார்பின்மைவாதம்

II. சோசலிசம் / கம்யூனிசம்/ மார்க்சிசம்

40) I. கிரேக்கம்/ கிரேக்க நகர அரசு

II. 1928

41) I. மாநிலங்கள்/ பிராந்தியங்கள்/ மாநில அரசு/ பிராந்திய அரசு

II. கன்டோன்கள்

42) I. ஈரங்க சபை

II. 1978/ இரண்டாம் குடியரசு யாப்பு/ ஜனநாயக சோசலிச குடியரசு யாப்பு

43) I. 18வது திருத்தம் / 18

II. 19வது திருத்தம் / 19

44) I. சோசலிசம்/ மார்க்சிசம்/ கம்யூனிசம்

II. லூயிஸ் கோசர்/ கோசர்/ ஜோர்ச் சிம்மெல்/ சிம்மெல்

45) I. அனைத்து மதங்களையும் பக்கச்சார்பின்றி கவனித்தல்/ அரசு மத அடிப்படையில் பாகுபாடு காட்டாமை (அறநெறி சார்பின்மை)

II. சகல மதங்களையும் சமமாக மதித்தல் - சகல மதங்களும் சமனானவை என்பதனை ஏற்றுக்கொள்ளுதல் (சர்வ அறநெறிகளினதும் சேர்க்கை)

46) I. தேசிய அரசு தேசியவாதம்

II. இனத்துவ தேசியவாதம்/ இன தேசியவாதம்

47) I. பெனடிக்ட் என்ரசன்/ என்ரசன்

II. அரிஸ்டோடில்

48) புவிசார் அரசியல்/ புவிசார் அமைவிடம்/ சமூக பொருளாதார காரணிகள்/ அரசியல் பொருளாதாரம்/ பதவியில் இருக்கும் அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரல்/ பிராந்திய மற்றும் சர்வதேச வலுச்சமநிலை/ மக்களின் எதிர்பார்ப்பு/ அரசியல் கருத்தியல்

49) I. ஐக்கிய தேசியக் கட்சி/ 1948ஆம் ஆண்டு அரசாங்கம்/ DS.சேனநாயக்க அரசாங்கம்

II. மக்கள் ஐக்கிய முன்னணி/ 1956ஆம் ஆண்டு அரசாங்கம்/ 1956ஆம் ஆண்டு பண்டாரநாயக்க அரசாங்கம்

50) தகவல் அறியும் உரிமைச்சட்டம்/ 19வது அரசியல் திருத்தம்/ அரசியலமைப்புப் பேரவை/ சுயாதீன ஆணைக்குழுக்கள்/ ஜனாதிபதியின் அதிகாரம் குறைக்கப்பட்டமை/ பாராளுமன்றத்தின் அதிகாரம் அதிகரிக்கப்பட்டமை

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2022(2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2022(2023)
General Certificate of Education (Adv. Level) Examination, 2022(2023)

දේශපාලන විද්‍යාව II
அரசியல் விஞ்ஞானம் II
Political Science II

**23 T II**

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள்:**
* இவ்வினாத்தாள் மூன்று பகுதிகளைக் கொண்டதாகும்.
* பகுதி I இலிருந்து குறைந்தபட்சம் ஒரு வினாவையும் பகுதி II இலிருந்து குறைந்தபட்சம் இரண்டு வினாக்களையும் பகுதி III இலிருந்து குறைந்தபட்சம் ஒரு வினாவையும் தெரிவுசெய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

1. அரசியலைக் கற்பதற்கான விஞ்ஞான அணுகுமுறையினை விபரிக்குக. (20 புள்ளிகள்)

2. 'அரசியல் கோட்பாடு' என்றால் என்ன என்பதனை விபரித்து, அரசியலைக் கற்பதில் 'கோட்பாடு' ஏன் முக்கியத்துவம் பெறுகின்றது என்பதனை ஆராய்க. (20 புள்ளிகள்)

3. (i) அமுக்கக் குழுக்கள் என்றால் என்ன என்பதனை விளக்குக. (10 புள்ளிகள்)
   (ii) நோக்கத்தின் அடிப்படையில் அரசியல் கட்சிகளுக்கும் அமுக்கக் குழுக்களுக்குமிடையிலான வேறுபாடுகள் எவை என்பதனை ஆராய்க. (10 புள்ளிகள்)

## பகுதி II

4. (i) இலங்கையில் 1833 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட கோல்புறுக் - கமரன் சீர்திருத்தத்தின் அரசியல் விளைவுகளைச் சுருக்கமாக குறித்துக் காட்டுக. (10 புள்ளிகள்)
   (ii) இலங்கையின் அரசாங்கம் மற்றும் அரசியலை ஜனநாயகப்படுத்துவதற்கு டொனமூர் சீர்திருத்தங்கள் வழங்கிய பங்களிப்பினை விளக்குக. (10 புள்ளிகள்)

5. சோல்பரி அரசியலமைப்பினை இல்லாதொழிப்பதற்கு ஏதுவாக அமைந்த காரணிகளை விளக்குக. (20 புள்ளிகள்)

6. சோல்பரி அரசியலமைப்புடன் ஒப்பிடும்போது, இலங்கையின் 1972 ஆம் ஆண்டு அரசியலமைப்பில் பாராளுமன்றம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பிரதான மாற்றங்களை விபரிக்குக. (20 புள்ளிகள்)

7. (i) இலங்கையின் 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பிற்கான 13 வது திருத்தத்தின் நோக்கங்களாக அமைந்தவை யாவை? (05 புள்ளிகள்)
   (ii) 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பில் கொண்டுவரப்பட்ட 18 வது மற்றும் 19 வது திருத்தங்களின் நோக்கங்கள் மற்றும் பிரதான பண்புகளை ஒப்பிடுக. (15 புள்ளிகள்)

## பகுதி III

8. (i) ஐக்கிய அமெரிக்க சமஷ்டி அரசாங்க முறையில் மத்திய அரசாங்கத்திற்கு உரித்தாகும் அதிகாரங்களை சுருக்கமாக விபரிக்குக. (10 புள்ளிகள்)

(ii) பிரித்தானியாவினுடைய ஒற்றையாட்சி அரசாங்க மாதிரி அண்மைக்காலங்களில் மாற்றத்திற்கு உள்ளாகியிருக்கும் விதத்தினை எடுத்துக்காட்டுக. (10 புள்ளிகள்)

9. (i) பொதுக் கொள்கையினைக் கற்பது ஏன் முக்கியத்துவம் பெறுகின்றது? (05 புள்ளிகள்)

(ii) பொதுக் கொள்கைச் செயன்முறையில்
(அ) சட்டத் துறையின் வகிபங்கு
(ஆ) சிவில் சமூகத்தின் வகிபங்கு, என்பனவற்றினை விளக்குக. (15 புள்ளிகள்)

10. பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் இரண்டுக்குச் சிறுகுறிப்பு எழுதுக.

(i) மோதல் தீர்வு செயன்முறை

(ii) இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை தொடர்பான விமர்சனங்கள்

(iii) உலக அரசியலின் புதிய போக்குகள்

(iv) ஜனநாயக ஆட்சிமுறையும் இலங்கையின் அனுபவங்களும்

(v) இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையின் அண்மைக்கால போக்குகள்

(10 × 2 = 20 புள்ளிகள்)

* * *

**1. அரசியலை கற்பதற்கான விஞ்ஞான அணுகுமுறையினை விபரிக்குக. (20 புள்ளிகள்)**

**நோக்கம்:**

அரசியலை கற்பதற்கான விஞ்ஞான அணுகுமுறை, அதன் தன்மை, அதன் பின்னணி, அதனுடைய அடிப்படை பண்புகள் மற்றும் நடத்தைவாத அணுகுமுறை தொடர்பாக பரீட்சாத்திகளின் அறிவு, அவற்றை விளக்கும் திறமை என்பவற்றினை மதிப்பிடுவதே இவ்வினாவின் நோக்கமாகும்.

**அறிமுகம் (02 புள்ளிகள்):**

1920 மற்றும் 1930 களில் அரசியல் விஞ்ஞானக் கற்கை சமூக விஞ்ஞானத்தின் ஒரு பகுதியாக மாறிய பின்னர் அரசியலை கற்பதற்கான விஞ்ஞான அணுகுமுறை வளர்ச்சி அடைந்தது. விஞ்ஞான அணுகுமுறையின் முன்னோடிகள் மரபு ரீதியான மற்றும் வரலாற்று ரீதியான அணுகுமுறைகளிலிருந்து வேறுபட்ட புதிய அணுகுமுறை ஒன்றினை உருவாக்க மேற்கொண்ட முயற்சியின் விளைவே இதுவாகும். இக்காலத்திலேயே ஏனைய சமூக விஞ்ஞான பாடங்களிலும் புதிய அணுகுமுறைகள் உருவாக்கப்பட்டன. அந்த வகையில் அரசியல் விஞ்ஞானக் கற்கைக்கான விஞ்ஞான அணுகுமுறையின் பிரதான துறையாக நடத்தை வாதம் காணப்பட்டது.

**அரசியல் விஞ்ஞான கற்கைக்கான விஞ்ஞான அணுகுமுறையும் அதன் தன்மையும்**

விஞ்ஞான அணுகுமுறை அரசியல் ஆய்வுகளுக்கு விஞ்ஞான முறைகளை பயன்படுத்தி அதன் மூலம் விஞ்ஞான தன்மையினை வழங்க முற்பட்டது. மேலும் இது இயற்கை விஞ்ஞான அணுகுமுறைகளை கையாண்டு அதனூடாக அரசியல் நிகழ்வுகளை விளங்கிக் கொள்ள முற்படுகின்றது.

இயற்கை விஞ்ஞானங்களில் பயன்படுத்தப்படுகின்ற நவீன விஞ்ஞான முறைகளை பயன்படுத்தி சமூக அல்லது அரசியல் விவகாரங்களை ஆய்வு செய்வது அவற்றுக்கு நவீன விஞ்ஞான தன்மையை வழங்குவது என்பன அக்காலத்தில் சமூக விஞ்ஞான துறைகளில் ஒரு பொதுவான போக்காக காணப்பட்டது.

**பின்னணி:**

அமெரிக்காவில் சில அரசியல் விஞ்ஞானிகள் அரசியல் விஞ்ஞான ஆய்வுகளை தூய விஞ்ஞானத்திற்கு நிலைமாற்றம் செய்யும் முயற்சியில் ஈடுபட்டார்கள். அவர்கள் தத்துவார்த்த மற்றும் வரலாற்று அணுகுமுறைகளை காலம் கடந்தவையாக குறிப்பிட்டதுடன் அவை நம்பதகுந்த மற்றும் புறவயம் சார்ந்து (Objective Knowledge) அறிவினை உற்பத்தி செய்யவில்லை என்ற விமர்சனத்தினையும் முன்வைத்தனர்.

சமூகம் மற்றும் அரசியல் தொடர்பாக உறுதியான அல்லது நம்பதகுந்த மற்றும் சரியான அறிவினைக் கட்டியெழுப்ப அரசியல் விஞ்ஞானிகள் இயற்கை விஞ்ஞானத்தில் பயன்படுத்தப்படுவது போன்ற, அனுபவ ரீதியான மற்றும் விஞ்ஞான ரீதியான நடைமுறைகளை பின்பற்ற வேண்டும் என்ற ஊகத்திலேயே இந்த முயற்சிகளை அமெரிக்க அரசியல் விஞ்ஞானிகள் மேற்கொண்டார்கள்.

இந்த வாதம் அல்லது கருத்து 1930 மற்றும் 1940களில் வளர்ச்சி அடைந்தது. பின்னர் உலகம் முழுவதும் பரவியதுடன், அரசியல் விஞ்ஞானத்தில் பிரதான அணுகுமுறையாக மாறியது.

**தத்துவங்கள்:**

அரசியல் விஞ்ஞான ஆய்வுகளின் நோக்கம் அனுபவரீதியான ஆய்வுகளின் ஊடாக தரவுகள், ஆதாரங்கள் மற்றும் தகவல்களைப் பெற்று அதன் அடிப்படையில் அறிவினை உற்பத்தி செய்வதாக அமைய வேண்டும். அனுபவ ரீதியான ஆய்வு முறைகள் அரசியல் விஞ்ஞானிகள் ஒரு குறிப்பிட்ட அரசியல் நிகழ்வு தொடர்பாக அளவுசார் தரவுகளை (Quantitative data) சேகரிப்பதற்கும் பகுப்பாய்வு செய்வதற்கும், அதன் ஊடாக குறித்த அரசியல் நிகழ்வு தொடர்பான போக்குகளை அவதானிக்கவும் உதவுகின்றது.

அரசியல் தொடர்பாக மேற்கொள்ளப்படுகின்ற சமூக- அரசியல் பகுப்பாய்வுகள், தரவுகள், ஆதாரங்கள் மற்றும் விஞ்ஞான ரீதியான ஆய்வினை அடிப்படையாகக் கொண்டு புறவயம் சார்ந்த (Objective Knowledge) அறிவினை உற்பத்தி செய்ய வேண்டும்.

விஞ்ஞான ரீதியாக கட்டியெழுப்பப்படுகின்ற அரசியல் விஞ்ஞான அறிவு புறவயம் சார்ந்து அமைவதற்கு அவை பெறுமான மதிப்பீடுகளில் இருந்தும்( Value Judgement), அரசியல் விஞ்ஞானிகளின் தனிப்பட்ட கருத்துக்களில் இருந்தும் விடுபட்டதாக அமைய வேண்டும்.

இவ் அணுகுமுறை இயற்கை விஞ்ஞானத்திலிருந்து அரசியல் விஞ்ஞானத்திற்கு வந்தது. இது மனித சமூகம் தொடர்பான ஆய்வுகளை நவீன சமூக விஞ்ஞானங்கள் ஊடாக தூய விஞ்ஞானத்திற்கு நிலைமாற்றம் செய்யும் ஒரு முயற்சியாகும்.

**விஞ்ஞான அணுகுமுறையும் நடத்தை வாதமும்**

நவீன அரசியல் விஞ்ஞானத்தின் பிரதான மரபாக நடத்தை வாதம் காணப்படுகிறது. அது அரசியலை விஞ்ஞான ரீதியாக கற்பதனை நோக்கமாகக் கொண்டது.

இதன் பிரதான நம்பிக்கை யாதெனில் அரசியல் விஞ்ஞான ஆய்வு அல்லது பரிசீலனை என்பது சமூகத்தின் தனிநபர்களின் அரசியல் நடத்தைகளை ஆய்வு செய்வதே தவிர, சமூக மற்றும் அரசியல் செயன்முறையில் ஈடுபடும் சமூகக்குழுக்களை அல்ல என்பதாகும்.

நடத்தைவாதத்திற்கிணங்க, தனிப்பட்டவர்களின் அரசியல் நடத்தைகளையே அனுபவ ரீதியாக ஆய்வு செய்ய முடியும். உதாரணமாக, தனிப்பட்ட வாக்காளர்களின் தேர்தல் நடத்தையினைக் குறிப்பிட முடியும். அனுபவ ரீதியாக கற்பதென்பது அவதானிப்பு மற்றும் பரிசோதனை முறைகளை குறித்து நிற்கின்றது. சமூக குழுக்களின் நடத்தைகளை, குறிப்பாக சமூக வகுப்பு மற்றும் இனக்குழு என்பவற்றினை அனுபவரீதியான அவதானிப்பு முறைகளை பயன்படுத்தி சரியான முறையில் கற்க முடியாது என்ற வாதத்தினை நடத்தை வாதம் முன்வைக்கின்றது.

**முடிவுரை:**

பரீட்சாத்திகள் விஞ்ஞான அணுகுமுறையினையும் நடத்தைவாதத்தினையும் தொடர்புபடுத்திய வகையில் முடிவுரை ஒன்றினை வழங்குவது பொருத்தமாகும். பரீட்சாத்திகள் நடத்தைவாதம் தொடர்பாக அதிகம் வலியுறுத்தி இருந்தால் அதற்கும் பொருத்தமான புள்ளிகளை வழங்கவும்.

**2. அரசியல் கோட்பாடு என்றால் என்ன என்பதனை விபரித்து, அரசியலை கற்பதில் கோட்பாடு ஏன் முக்கியத்துவம் பெறுகின்றது என்பதனை ஆராய்க.**

**(20 புள்ளிகள்)**

**நோக்கம்:**

இவ்வினாவானது பரீட்சாத்திகள் அரசியல் கோட்பாடு தொடர்பாக கொண்டிருக்கும் அறிவு மற்றும் அதன் தன்மை மற்றும் பயன்பாட்டினை விளக்கும் திறமையினை மதிப்பீடு செய்ய முற்படுகின்றது.

**அறிமுகம்:**

கோட்பாடு என்பது சமூக மற்றும் இயற்கை விஞ்ஞான கற்கை துறைகளுக்கு பொருத்தமான ஒன்றாகும். ஆயினும் அரசியல் கோட்பாடுகள் அரசியல் விஞ்ஞானத்துக்கே உரிய ஒன்றாக காணப்படுவதுடன், அது சமூக விஞ்ஞானத்தின் ஒரு பிரிவாகும். அரசியல் விடயங்களை பகுப்பாய்வு செய்வதற்கு வழிகாட்டுவதே கோட்பாட்டின் பிரதான பணியாகும். அரசியல் விஞ்ஞானத்தில் பல கோட்பாட்டு அணுகுமுறைகளும் கோட்பாடுகளும் காணப்படுகின்றன.

**உள்ளடக்கம்:**

சமூக மற்றும் அரசியல் விஞ்ஞானங்களில் கோட்பாடானது சமூக மற்றும் அரசியல் நிகழ்வுகளை விளக்கவும் பகுப்பாய்வு செய்யவும் பிரதான கருவியாக பயன்படுத்தப்படுகின்றது.

தூய விஞ்ஞானத்தில் கோட்பாடு என்பது ஒரு சுருக்கமான வாய்ப்பாட்டினை (சூத்திரத்தினை) அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்படும். அதனை விஞ்ஞான ரீதியான கூற்று எனலாம். அது மாறிகளுக்கிடையிலான காரண- காரிய தொடர்புகளை வெளிப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படும்.

ஆனால், அரசியல் விஞ்ஞானிகள் அரசியல் கோட்பாட்டினை அரசியல் நிகழ்வுகளில் அல்லது தோற்றப் பாடுகளுக்கிடையிலான உறவுகளில் காணப்படும் காரண- காரிய தொடர்புகளை விளக்குவதற்கு ஒரு கருவியாக பயன்படுத்துகிறார்கள். உதாரணமாக, பின்வரும் வினாக்களுக்கு விடையளிப்பதற்கு அரசியல் கோட்பாடு அவசியமாகும். (அ) ஏன் சமூகத்தில் முரண்பாடு ஏற்படுகின்றது? (ஆ) ஏன் பணக்கார குடும்பப் பின்புலத்தினைக் கொண்ட வேட்பாளர்களுக்கு வறிய மக்கள் வாக்களிக்கிறார்கள்? (இ) ஏன் நாடுகள் போருக்கு செல்கின்றன?

அரசியல் விஞ்ஞானத்தில் கோட்பாட்டுக்கு இரண்டு அர்த்தங்கள் உண்டு. அவை நெறிமுறை சார் கோட்பாடு மற்றும் விஞ்ஞான அல்லது அறிவியல் கோட்பாடு ஆகும்.

நெறிமுறை சார்ந்த கோட்பாடுகள் அரசியல் சிந்தனை மற்றும் அரசியல் தத்துவங்களுடன் தொடர்புடையது. பண்டைய கிரேக்கத்தில் தோற்றம் பெற்ற பழமை அரசியல் சிந்தனைகளுடன் தொடர்புடையது. பழமை அரசியல் சிந்தனைகளில் நெறிமுறை சார்ந்த அரசியல் கோட்பாடுகள் பின்வரும் தத்துவங்களை வலியுறுத்தின. அரசு, அரசியல் சமூகம், நீதி அல்லது சுதந்திரம், அரசியல் அதிகாரம் மற்றும் ஆளுகை முறை. நெறிமுறை சார்ந்த அரசியல் கோட்பாடு அரசியல் தொடர்பாக கேள்விகளுக்குட்படுத்த முடியாத, மறுக்க முடியாத, ஏற்றுக்கொள்ளப்பட்ட தத்துவங்களை முன்வைப்பதில் அக்கறை செலுத்துகின்றது.

அறிவியல் அல்லது விஞ்ஞான கோட்பாடு என்பது நவீன அரசியல் விஞ்ஞானத்தின் ஒரு பகுதியாகும். அது இயற்கை விஞ்ஞானத்தின் செல்வாக்கிலேயே தோற்றம் பெற்றது. அரசியல் விஞ்ஞானத்தில் அறிவியல் கோட்பாடுகள் 1930 களிலிருந்து கட்டியெழுப்பப்பட்டது. கோட்பாட்டின் வகிபங்கு யாதெனில், விஞ்ஞான மரபிற்கிணங்க உலகில் இடம்பெறுகின்ற விடயங்களை ஏன் அவ்வாறு அல்லது அவ்வழியில் இடம்பெறுகின்றன? என்பதனை விளக்குவதாகும். அத்தகைய கோட்பாடு ஒரு சட்டம் அல்லது பொது விதிக்கு இணையானது. விஞ்ஞானிகள் அத்தகைய பொது விதிகளை அறிவியல் ரீதியான ஆய்வுகளின் மூலம் கண்டுபிடிக்கின்றார்கள்.

நெறிமுறை சார்ந்த கோட்பாடுகள் என்பது மனிதர்கள் அரசியல் சமூகத்தின் உறுப்பினர்களாக இருப்பதனால் அவர்கள் அடைந்து கொள்ள எத்தனிக்கும் இறுதி இலக்கினை குறித்து நிற்கின்றது. உதாரணமாக, சமத்துவம், நீதி அல்லது சுதந்திரம் பொது உடமை, நல்வாழ்வு மற்றும் சமாதானம் ஆகிய கோட்பாடுகளைக் குறிப்பிடலாம். விஞ்ஞான ரீதியான கோட்பாடுகள் அரசியல் நிகழ்வுகள், செயன்முறை மற்றும் நடத்தைக் கோலங்களை விளக்குவதில் கவனம் செலுத்துகின்றது.

அரசியல் விஞ்ஞானம் பல கோட்பாட்டு மரபுகளை கொண்டுள்ளது. உதாரணமாக, தாராளக் கோட்பாடு, குடியரசுவாதம், மார்க்சியக் கோட்பாடு, பின்- மார்க்சியக் கோட்பாடு, நவீனத்துவ கோட்பாடு மற்றும் பெண்ணியல்வாதக் கோட்பாடு என்பவற்றினைக் குறிப்பிடலாம்.

முடிவுரை:

பரீட்சார்த்திகள் அரசியல் விஞ்ஞான ஆய்வுகளில் கோட்பாடுகள் எந்தளவுக்கு ஆதிக்கம் செலுத்துகின்றன. அவை அரசியல் ஆய்வுகளுக்கு எவ்வாறு விஞ்ஞானத்தன்மையினை வழங்குகின்றன, அதன் பயன்பாடு இன்று தவிர்க்க முடியாத ஒன்றாக மாறியுள்ளது என்ற அடிப்படையில் முடிவுரை எழுதியிருந்தால் புள்ளிகளை வழங்கவும்.

**3. (I). அழுக்கக் குழுக்கள் என்றால் என்ன என்பதை விளக்குக. (10 புள்ளிகள்)**

**(II). நோக்கத்தின் அடிப்படையில் அரசியல் கட்சிகளுக்கும் அழுக்க குழுக்களுக்கும் இடையிலான வேறுபாடுகள் எவை என்பதனை ஆராய்க. (10 புள்ளிகள்)**

**(I). அழுக்கக் குழுக்கள் என்றால் என்ன என்பதை விளக்குக. (10 புள்ளிகள்)**

**நோக்கம்:**

இவ்வினாவானது பரீட்சாத்திகள் அரசியல் கட்சி மற்றும் அழுக்கக் குழுக்கள் தொடர்பாக கொண்டிருக்கும் அறிவினையும் அவற்றுக்கிடையிலான வேறுபாட்டினை விளக்கும் திறமையினையும் மதிப்பிடுவதாக அமைந்துள்ளது.

03. (I). அழுக்க குழுக்கள் என்பவை பிரஜைகளால் ஒழுங்கமைக்கப்படுகின்ற குழுக்களாகும். அவை அரசாங்கத்தின் தீர்மானங்கள் அல்லது கொள்கைகள் மற்றும் சட்டங்கள் மீது அழுத்தம் கொடுக்கும் நோக்கத்தினை கொண்டவை. பரீட்சாத்திகள் அழுக்க குழுக்களுக்கு உதாரணங்களை வழங்க வேண்டும்.

நலன்பேண் குழுக்கள் மற்றும் பரப்புரை குழுக்கள் என்பன ஒரே மாதிரியான நோக்கங்களை அடைய பிரஜைகளால் உருவாக்கப்படுகின்றன. அரசியல் கற்கையில் அழுக்கக் குழுக்கள் முக்கியமானதாகும். அவை அரசியல் கட்சிகள் போன்று அரசாங்கத்தின் கொள்கைகள் மற்றும் சட்டவாக்கச் செய்முறையில் செல்வாக்கு செலுத்த முற்பட்டாலும் அரசியல் கட்சிகளில் இருந்து வேறுபட்டவை. அரசியல் கட்சிகளைப் போன்று அவை முறைசார் அமைப்புகளாகவும், அவை உறுப்புரிமை, தெரிவு செய்யப்பட்ட நிர்வாகிகள், அரசியலமைப்பு, நிதி மற்றும் தொடர்ச்சியான சட்டங்கள் ஆகிய நடைமுறைகளையும் கொண்டுள்ளன.

எவ்வாறாயினும் அழுக்க குழுக்கள் அரசியல் கட்சிகளிலிருந்து வேறுபட்டவை. அவற்றின் செயற்பாடுகள் மற்றும் நோக்கங்கள் வேறுபட்டவை. அவை சுயாதீனமாக செயற்படுவதுடன், அரசியல் கட்சிகள் செயற்படும் தளங்களிலும் இவற்றின் செயற்பாடுகளைக் காணமுடியும். மேலும் சில அழுக்க குழுக்கள் அரசியல் கட்சிகளுடன் மறைமுகமாக தொடர்புகளைப் பேணி வருகின்றன.

**(II). நோக்கத்தின் அடிப்படையில் அரசியல் கட்சிகளுக்கும் அழுக்க குழுக்களுக்கும் இடையிலான வேறுபாடுகள் எவை என்பதனை ஆராய்க? (10 புள்ளிகள்)**

அரசியல் கட்சிகள் அரசாங்கத்தினை அமைப்பதன் ஊடாக மற்றும் அரசாங்கத்தில் இணைத்துக்கொள்வதன் ஊடாக பொதுக் கொள்கைகள் மீது செல்வாக்கு செலுத்த எத்தனிக்கின்றன. அரசியல் கட்சிகளின் பிரதான நோக்கம் தேர்தல் செயல்முறை ஊடாக அல்லது அதற்கு அப்பால் சென்று அரசியல் அதிகாரத்தினைக் கைப்பற்றுவதாகும். அரசியல் கட்சிகள் மாத்திரமே இத்தகைய நோக்கத்துடன் செயற்படும் பிரஜைகள் குழு எனலாம்.

மாறாக, அமுக்க குழுக்கள் அரசாங்கத்தின் கொள்கைகள் மீது அரசாங்கத்திற்கு வெளியிலிருந்து அழுத்தம் கொடுக்கும் நோக்கத்தினைக் கொண்டவை.

அமுக்க குழுக்களின் நிகழ்ச்சி நிரல்கள் பொதுவில் ஒரு குறிப்பிட்டப் பிரச்சினையை அடிப்படையாகக் கொண்டு அமையும். உதாரணமாக, சுற்றாடல் பாதுகாப்பு அல்லது நுகர்வோர் உரிமைகள், மரண தண்டனையினை ஒழிப்பது, சிறைக்கைதிகளின் உரிமைகள் என்பவற்றினை குறிப்பிடலாம்.

ஆனால் அரசியல் கட்சிகளின் நிகழ்ச்சி நிரல்கள் பரந்துபட்டவை. அவை பல்வேறுபட்ட கருப்பொருட்களின் கீழ் தமது நோக்கங்களை வரையறுத்து செயல்படுபவை.

அரசியல் கட்சிகள் நேரடியாக தேர்தலில் பங்கேற்பவை. ஆனால் அமுக்கக் குழுக்களின் அரசியல் வேறுபட்டவை. அவை தேர்தலில் போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகளுக்கு மறைமுகமாக ஆதரவினை வழங்கலாம். சில சமயங்களில் கட்சி அரசியல் செயல்பாடுகளில் முற்றிலும் நடுநிலை வகிக்கலாம். அரசியலில் செயல் ஆர்வம் அற்று காணப்படலாம்.

அரசியல் கட்சிகள் சமூக வகுப்புகளின் அல்லது சமூகக் குழுக்களின் நலன்களை மற்றும் நிகழ்ச்சி நிரலை முன்னிலைப்படுத்தி செயற்படுகின்றன. அந்த வகையில், அமுக்கக் குழுக்களின் சமூக செயற்பாட்டு தளமானது அரசியல் கட்சிகளுடன் ஒப்பிடும்போது மிகவும் குறுகியதாகும். அரசியல் கட்சிகள் தமது ஆதரவு தளத்தினை அல்லது செயற்பாட்டு தளத்தினை நாட்டின் சகல பகுதிகளிலும் உள்ள மக்களிடம் பேணி வரும். ஆனால் அமுக்கக் குழுக்களானவை தமது உறுப்புரிமையினையே செயற்பாட்டு தொகுதியாக அல்லது தளமாக கொள்ளும்.

அரசியல் கட்சிகள் பொதுவில் தெளிவாக வரையறுக்கப்பட்ட அரசியல் கருத்தியல்களின் அடிப்படையில் செயல்படும் அல்லது அவை கருத்தியல் ரீதியான நிகழ்ச்சி நிரலைக் கொண்டிருக்கும். ஆனால் அமுக்கக் குழுக்கள் பொதுவில் கருத்தியல் ரீதியான திசைமுகப்படுத்தலை விரும்புவதில்லை.

**4. (I). இலங்கையில் 1833 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட கோல்புரூக் - கமரன் சீர்திருத்தத்தின் அரசியல் விளைவுகளை சுருக்கமாக எடுத்துக்காட்டுக. (10 புள்ளிகள்)**

**(II). இலங்கையின் அரசாங்கம் மற்றும் அரசியலை ஜனநாயகமயப்படுத்துவதற்கு டொனமூர் சீர்திருத்தங்கள் வழங்கிய பங்களிப்பினை விளக்குக. (10 புள்ளிகள்)**

**(I). இலங்கையில் 1833 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட கோல்புருக் - கமரன் சீர்திருத்தத்தின் அரசியல் விளைவுகளை சுருக்கமாக எடுத்துக்காட்டுக. (10 புள்ளிகள்)**

**நோக்கம்:**

பரீட்சாத்திகள் கோல்புருக்- கமரன் அரசியல் மறுசீரமைப்புக்களின் அரசியல் விளைவுகளை விபரிக்கும் திறமையினை மதிப்பிடுவதே இவ்வினாவின் நோக்கமாகும். பொதுவில் கோல்புருக்- கமரன் மறுசீரமைப்பு தொடர்பாக விடையளிக்கப்பட்டிருப்பின் முழுமையான புள்ளிகள் வழங்கப்படக்கூடாது.

**அறிமுகம்:**

1815 ஆம் ஆண்டு முழு நாட்டினையும் பிரித்தானியர்கள் கைப்பற்றியதன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட முதலாவது முழுமையான அரசியல், நிர்வாக மற்றும் சட்ட மறுசீரமைப்புக்கான முயற்சியே கோல்புருக்- கமரன் சீர்திருத்தமாகும். ஆணைக்குழு இலங்கையை பிரித்தானிய காலனித்துவத்துக்கு முழுமையாக நிலைமாற்றம் செய்ய எதிர்பார்த்தது. ஆகவே ஆணைக்குழுவின் பரிந்துரைகள் காலனித்துவ இலங்கையின் அரசியல்- பொருளாதார மற்றும் சமூகப் பரப்புகளில் பரந்தளவிலான தாக்கத்தினை ஏற்படுத்துவதனை நோக்கமாகக் கொண்டமைந்தது. அந்தவகையில் காலனித்துவ ஆட்சியாளர்களால் இலங்கையை பிரித்தானிய காலனித்துவத்துக்கு நிலைமாற்றம் செய்ய எடுக்கப்பட்ட முதலாவது முழுமையான தலையீடாக இது அமைந்தது.

உள்ளடக்கம் ( 8 புள்ளிகள்):

ஒருமைப்படுத்தப்பட்ட நிர்வாக முறையொன்றினையும் ஒருமைப்படுத்தப்பட்ட சட்ட மற்றும் நீதி முறையொன்றினையும் உருவாக்கியமையானது இலங்கையில் எதிர்காலத்தில் மத்தியமயப்படுத்தப்பட்ட அரசு ஒன்று உருவாகுவதற்கான அடித்தளத்தினை இட்டது.

இலங்கையில் காணப்பட்ட இன அடிப்படையிலான நிர்வாக அலகுகளை கோல்புறூக்- கமரன் ஆணைக்குழு இல்லாது செய்து முழு நிர்வாகத்தினையும் மத்தியமயப்படுத்தியது. அதன் மூலம் கரையோர சிங்களவர், கண்டிய சிங்களவர், தமிழ் பிரதேசங்கள் என்ற இனத்துவ நிர்வாக முறையினை இல்லாதொழித்து அதற்கு பதிலாக 5 புதிய நிர்வாக மாகாணங்களை உருவாக்கினார்கள். நாட்டில் அப்போது காணப்பட்ட இரட்டை சட்ட முறையினை இல்லாது செய்து ஒருமைப்படுத்தப்பட்ட சட்டமுறையினையும் உருவாக்கினார்கள்.

கமரனின் நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு பரிந்துரைகள் நீதிப்பட்டயம் (1833) என்ற பெயரில் அமுல்படுத்தப்பட்டன. நாட்டினை ஒன்றிணைக்க வேண்டுமாயின் சட்டம் சமூகத்தின் சகல வகுப்புகளுக்கும் ஒரே முறையில் பிரயோகிக்கப்பட வேண்டும் என அவர் வாதிட்டார்.

சட்டசபை ஒன்றினை தாபித்ததன் ஊடாக ஆளுநரின் சட்டவாக்க அதிகாரம் மட்டுப்பாடுகளுக்கு உட்பட்டது. இலங்கையில் பிற்பட்ட காலங்களில் மேற்கொள்ளப்பட்ட சட்டசபை சீர்திருத்தங்கள் கோல்புறூக் சட்டசபை மாதிரியினையே அடிப்படையாகக் கொண்டமைந்திருந்தது. இது இலங்கையில் முதன்முறையாக மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேனும் பிரதிநிதித்துவ முறையினை அறிமுகம் செய்ய வழிகோலியது.

நீதித்துறை மறுசீரமைப்பின் ஊடாக இலங்கையில் உயர் நீதிமன்றம் (உச்ச) மற்றும் மாவட்ட நீதிமன்றங்கள் உருவாக்கப்பட்டன. உயர் நீதிமன்றம் தபிக்கப்பட்டமையால் ஆளுநரின் நீதித்துறைசார் அதிகாரங்கள் முடிவுக்கு வந்தது. நீதித்துறை நிறைவேற்றுத்துறையில் இருந்து பிரித்தெடுக்கப்பட்டது. இது தனிநபர் உரிமை, சட்டத்தின் ஆட்சி, நீதித்துறை சுதந்திரம் போன்ற அம்சங்கள் நடைமுறைக்கு வருவதற்கு வித்திட்டது.

ஆளுநரின் தன்னிச்சியான அதிகாரங்கள் குறைக்கப்பட்டமை, ஆளுநருக்கு காலனித்துவ நிர்வாகத்தினை மேற்கொள்வதற்கு உதவி செய்வதற்காக சட்ட மற்றும் நிறைவேற்ற சபைகள் உருவாக்கப்பட்டமை என்பன காலவோட்டத்தில் இலங்கையில் பொறுப்புக் கூறும் அரசாங்கம் ஒன்று உருவாகுவதற்கு அடித்தளமிட்டது.

15 பேரைக் கொண்ட சட்ட சபையினை உருவாக்கியமை பாராளுமன்ற முறையினை நோக்கிய நீண்ட பயணத்துக்கு முதல் படியாக அமைந்தது. அது பின்னர் பிரதிநிதித்துவ அரசாங்கம் ஒன்றுக்கான ஆரம்ப செயல்முறையாகவும் அமைந்தது. உத்தியோகப்பற்றற்ற உறுப்பினர்கள் ஆளுநரின் செயற்பாடுகளை விமர்சிப்பதற்கான வாய்ப்பினைப் பெற்றனர். அது ஆளுநரின் அதிகாரங்கள் மீதான தடையாக அமைந்தது.

காலனித்துவ அரசாங்கத்தின் சட்டவாக்க செயன்முறையில் அங்கம் வகிப்பதற்கான கதவு உள்ளூர் பிரதிநிதிகளுக்கு திறந்து விடப்பட்டது. மூன்று உள்ளூார் பிரதிநிதிகளுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டமையே இதற்கு காரணமாக அமைந்தது.

இதன் அடிப்படையில் ஆளுநர் கரையோர சிங்களவர், பறங்கியர் மற்றும் தமிழர் சமூக பிரதிநிதிகளை சட்டசபைக்கு நியமித்தார். காலனித்துவ சட்டசபையில் இன அடிப்படையிலான பிரதிநிதித்துவத்திற்கான ஆரம்பமாக இது அமைந்தது (இனவாரி பிரதிநிதித்துவமுறை).

இலங்கையர்களுக்கு சிவில் சேவையில் இணைவதற்கான வாய்ப்பு மட்டுப்படுத்தப்பட்டளவிளேனும் வழங்கப்பட்டது. இதன் மூலம் படித்த இலங்கையர்களுக்கு காலனித்துவ நிர்வாகத்தில் இணையும் வாய்ப்பு கிட்டியது. கோல்புருக் ஆணைக்குழுவுக்கு பிரித்தானிய நிர்வாகப்பானியில் சில மாற்றங்களை ஏற்படுத்த விரும்பியமையே இதற்கான காரணமாகும்.

கோல்புருக்- கமரன் ஆங்கிலக் கல்வியினை இலங்கையில் விரிவுபடுத்தியது. இதனால் செல்வந்த குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் இங்கிலாந்துக்கு சென்று புகழ் பெற்ற பல்கலைக்கழகங்களில் கல்வி

கற்கும் வாய்ப்பினைப்பெற்றனர். இவர்கள் அக்காலத்தில் இங்கிலாந்தில் செல்வாக்குப் பெற்ற தாராளவாத சிந்தனைகள் மற்றும் சோசலீச சிந்தனைகளால் ஈர்க்கப்பட்டதுடன் இலங்கைக்கு வந்ததன் பின்னர் ஜனநாயகம், தனிநபர் உரிமைகள், மனித உரிமைகள், சமத்துவம் நீதி, தொழிலாளர் நலன், நவீன அரசாங்கம், அரசியலமைப்பு போன்ற சிந்தனைகளை இலங்கை சமூகத்தில் பரப்பியதுடன் அது தொடர்பாக தீவிரமாக செயற்பட ஆரம்பித்தார்கள். பிற்பட்டகாலத்தில் அரசியல் கட்சிகளின் உருவாக்கத்திற்கும் இத்தகைய முற்போக்குவாதிகள் காரணமாக அமைந்தார்கள்.

**முடிவுரை:** கோல்புருக்- கமரன் சீர்திருத்தங்கள் இலங்கையில் பிரித்தானியரின் காலனித்துவ ஆட்சியினை அரசியலமைப்பு மற்றும் நிர்வாக மாற்றங்கள் ஊடாக சக்திப்படுத்துவதற்கான முயற்சியினை எடுத்தன. இம்முன்மொழிவுகள் (பொருளாதாரம், கல்வி முறை மற்றும் சமூக மாற்றங்கள்) காலனித்துவ நலன்களை அடைந்துக்கொள்வதற்காக முன்வைக்கப்பட்டன. அதேவேளை இச்சீர்திருத்தங்கள் ஊடாக எதிர்பாராத சாதக விளைவுகளும் ஏற்பட்டன. நிலமானிய பொருளாதாரம் ஒழிக்கப்பட்டமையினைக் குறிப்பிடலாம்.

**(II). இலங்கையின் அரசாங்கம் மற்றும் அரசியலை ஜனநாயகமயப்படுத்துவதற்கு டொனமூர்சீர்திருத்தங்கள் வழங்கிய பங்களிப்பினை விளக்குக. (10 புள்ளிகள்)**

நோக்கம்:

இவ் வினாவானது பரீட்சாத்திகள் டொனமூர் அரசியல் சீர்திருத்தங்கள் எந்தளவுக்கு ஜனநாயகமாற்றத்திற்கு வித்திட்டது என்பதனை விபரிக்கும் மற்றும் மதிப்பீடு செய்யும் ஆற்றலை கொண்டுள்ளனர் என்பதனை வெளிக்கொண்டுவர முற்படுகின்றது.

அறிமுகம்:

1931 ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்ட டொனமூர் அரசியல் திட்டம் பொறுப்பாண்மை மற்றும் பொறுப்புக்கூறலை அடிப்படையாகக் கொண்ட அரசாங்கம் ஒன்றுக்கான அடித்தளத்தினை இட்டது. மேலும் கல்வி, சொத்து, பால்நிலை போன்ற எந்த வேறுபாடுகளுமின்றி சகல பிரஜைகளுக்கும் வாக்குரிமையினை வழங்கி காலனித்துவ அரசாங்கக் கட்டமைப்பினை ஜனநாயகப்படுத்தியதுடன் பிரஜைகளையும் சக்திப்படுத்தியது.

**உள்ளடக்கம்:**

பரீட்சாத்திகள் தமது விடையினை முதலில் டொனமூர் அரசியல் திட்டத்தின் பிரதான முன்மொழிவுகளை குறிப்பிட்டு அதன் பின்னர் அவை எவ்வாறு ஜனநாயக நிலைமாற்றத்திற்கு உதவின என்பதனை கலந்துரையாடலாம்.

**சர்வசன வாக்குரிமை:** 21 வயதுக்கு மேற்பட்ட ஆண்- பெண் இருபாலருக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டமையானது பிரஜைகளுக்கு பொறுப்பு கூறும் பிரதிநிதிகளைக் கொண்ட அரசாங்கம் ஒன்று உருவாகுவதற்கு வித்திட்டது. முக்கியமாக, பிரித்தானிய காலனித்துவ நாடுகளில் இலங்கைப் பெண்களுக்கே முதன் முதலில் வாக்குரிமை வழங்கப்பட்டது. இதன் மூலம் நீண்டகாலமாக

இலங்கையிலிருந்த இனவாரி பிரதிநிதித்துவம் இல்லாதொழிக்கப்பட்டதுடன், சாதாரண மக்கள் மத்தியில் அரசியல் பங்கேற்பு, அரசியல் நவீனத்துவம் என்பன மிக வேகமாக ஏற்பட்டன. பிரதான அரசியல் நீரோட்டத்தில் ஜனநாயகம் அல்லது பிரதிநிதித்துவ ஜனநாயகம், அரசியல் அபிவிருத்தி தொடர்பான கருத்தாடல்கள் அதிகரித்தன. அத்துடன் முதல் தடவையாக, சாதாரண மக்கள் தேர்தல் அரசியலில் தலையீடு செய்யும் அல்லது செல்வாக்குச்செலுத்தும் அல்லது அதன் முடிவுகளை தீர்மானிக்கும் சக்தியாக மாறினர்.

**அரச சபை:** சட்டசபை இல்லாதொழிக்கப்பட்டு அரச சபை என்ற பெயரில் புதிய சட்டசபையொன்று தாபிக்கப்பட்டது. அதன்படி அரச சபையில் 61 உறுப்பினர்கள் காணப்பட்டனர். அதில் 50 பேர் மக்களால் நேரடியாக தெரிவு செய்யப்பட்டார்கள். 8 பேர் ஆளுநரால் நியமிக்கப்பட்டார்கள். எஞ்சிய மூன்று பேர் பிரித்தானிய காரியதரிசிகளாக காணப்பட்டனர். அந்த வகையில் 1947 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட பாராளுமன்றத்துக்கான மாதிரி பாராளுமன்றமாக அரச சபை காணப்பட்டது.

**பிரதேசவாரி பிரதிநிதித்துவம்:** இனவாரி பிரதிநிதித்துவ முறை ஒழிக்கப்பட்டு முழு அளவிலான பிரதேசவாரி பிரதிநிதித்துவ முறை அறிமுகம் செய்யப்பட்டது. இலங்கை 50 தேர்தல் தொகுதிகளாக பிரிக்கப்பட்டு 50 பேர் அரச சபைக்கு தெரிவு செய்யப்பட்டனர்.

**நிறைவேற்று குழு முறைமை:** நிறைவேற்று குழு முறைமை அறிமுகம் செய்யப்பட்டமை பிறிதொரு முக்கியமான முன்மொழிவாகும். உள்ளூர் அரசியல் தலைவர்கள் கோரிய அமைச்சரவைக்கு பதிலாக நிறைவேற்று குழு முறையினை டொனமூர் ஆணைக்குழு அறிமுகம் செய்தது. 57 அரச சபை உறுப்பினர்கள் (சபாநாயகர் மற்றும் பிரித்தானிய காரியதரிசிகள் அல்லாது) 07 நிறைவேற்று குழுக்களாக பிரிக்கப்பட்டனர். இக்குழுக்கள் அரசாங்கத்தின் நிறைவேற்றுப் பணிகளுக்கு பொறுப்பாக இருந்தன. 07 குழுக்களின் தலைவர்களையும் மூன்று காரியதரிசிகளையும் உள்ளடக்கிய வகையில் அமைச்சர்கள் சபையொன்று தாபிக்கப்பட்டது. அந்தவகையில் அரசாங்கத்தின் நிறைவேற்றுப் பணிகள் கணிசமான அளவுக்கு உள்ளூர் தலைவர்களுக்கு வழங்கப்பட்டது. இதன் விளைவாக ஜனநாயக ரீதியாக தீர்மானம் எடுக்கும் செயல்முறையொன்று உருவாகியது. சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த பிரதிநிதிகளுக்கு அரசாங்கத்தின் தீர்மானம் எடுத்தல் செயல்முறையில் பங்கேற்கும் வாய்ப்புக்கிட்டியது. அரச சபையில் இருந்த பின்வரிசை அங்கத்தவர்களும் அரசாங்கத்தின் நிர்வாகத்தில் பங்கேற்க அல்லது அது தொடர்பான பயிற்சியினைப்பெறும் வாய்ப்பினைப் பெற்றனர்.

பரீட்சாத்திகள் மேற்கூறிய சீர்திருத்தங்களின் விளைவுகளை ஜனநாயகமயமாக்கத்துடன் தொடர்புபடுத்தி ஆராயலாம். அதனை பின்வருமாறு மேற்கொள்ளலாம்.

சர்வஜன வாக்குரிமையை வழங்கப்பட்டமை ஜனநாயக அபிவிருத்திக்கு மற்றும் நிலை மாற்றத்திற்கு பெரியளவிலான பங்களிப்பினை வழங்கியது. இலங்கையில் தேர்தல் ஜனநாயகத்தின் தோற்றத்திற்கு வித்திட்டது. இலங்கையின் அரசியல் முறைமையினை ஜனநாயகப்படுத்தியதுடன் மக்கள் தேர்தல் ஒன்றின் ஊடாக தம்மை ஆளும் தரப்பினருக்கு மக்கள் அதிகாரத்தை வழங்குவதே உண்மையான ஜனநாயகம் என்ற சிந்தனையினை சாதாரண மக்கள் மத்தியிலும் விதைத்தது. மறுபுறமாக, ஆளும் தரப்பினரும் மக்கள் தமக்கு ஆளும் அதிகாரத்தினை வழங்குவதனால் அவர்களுக்கு பொறுப்புடன் இருக்க வேண்டும் என்ற எண்ணத்தினை ஏற்படுத்தியது. அத்துடன் மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றாத பட்சத்தில் மக்களால் தான் நிராகரிக்கப்படலாம் என்ற அச்சத்தினையும் ஏற்படுத்தியது.

இவற்றின் காரணமாக மக்கள் பிரதிநிதிகள் ஜனநாயக நடைமுறைகளுக்கும் விழுமியங்களுக்கும் தம்மை பழக்கப்படுத்திக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது.

அரசியல் கட்சி முறையொன்று படிப்படியாக இலங்கையில் வளர்ச்சி அடைவதற்கு டொனமூர் அரசியல் திட்டம் வித்திட்டது. டொனமூர் காலத்திலேயே ஒரு முழுமையான அரசியல் கட்சியாக லங்கா சமசமாஜக் கட்சி (1935) உருவாகியது. அந்த வகையில் சர்வசன வாக்குரிமை மற்றும் பிரதேசவாரி பிரதிநிதித்துவம் என்பன அரசியல் கட்சிகளின் தோற்றத்திற்கு வழிசெய்தன.

சர்வசன வாக்குரிமை மற்றும் பொறுப்புக் கூறும் அரசாங்கம் என்பன சாதாரண மக்களை சக்திப்படுத்தியது. குறிப்பாக சமூகத்தில் காணப்பட்ட பலவீனமான குழுக்கள் அல்லது ஓரங்கட்டப்பட்ட மக்கள், சிறுபான்மையினர் தமது விடுதலை குறித்து சிந்திக்க ஆரம்பித்தார்கள். அது தொடர்பான கரிசனையொன்று அவர்கள் மத்தியில் ஏற்பட்டது. அத்துடன் தொழிலாளர் நலன்பேணும் சட்டங்கள் பல இக்காலத்தில் உருவாக்கப்பட்டதுடன் தொழிலாளர் உரிமை தொடர்பான சிந்தனை, எழுச்சி மற்றும் போராட்டம் என்பனவும் இடம்பெற்றன.

டொனமூர் யாப்பின் கீழ் நகர சபைகள் மற்றும் பட்டின சபைகள் உருவாக்கப்பட்டதுடன், உள்ளூராட்சி அரசாங்கம் (மாநகர சபை, நகர சபை, பட்டின சபை, கிராமிய சபை) சக்திப் படுத்தப்பட்டு உள்ளூர் ஜனநாயகத்திற்கான அடித்தளமிடப்பட்டது.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் மக்கள் நலம்பேணும் கொள்கைகளை அரச சபையில் உருவாக்கினார்கள். இக்காலத்தில் பல சேமநலத் திட்டங்கள் உருவாகின. அந்த வகையில் நவீன சேமநல (சமூக நல) அரசு ஒன்றுக்கான அடித்தளம் இடப்பட்டது எனலாம்.

நிறைவேற்றுக்குழு முறை மற்றும் அமைச்சர்கள் சபை என்பன ஜனநாயக நிலைமாற்றத்தில் பிறிதொரு முக்கிய அம்சமாகும். அவை உள்ளூர் தலைவர்களுக்கு நிர்வாக பயிற்சியினை வழங்கின. நவீன அமைச்சரவை ஒன்று எவ்வாறு செயல்படும் என்பது குறித்த அறிவும் பயிற்சியும் கிடைத்தது. இவற்றுக்கப்பால், இலங்கை அரசியல் தலைவர்கள் இதன் ஊடாக கூட்டுப்பொறுப்பு தத்துவம் குறித்து கற்றுக் கொண்டார்கள். இலங்கையில் நவீன அரசியல் அபிவிருத்தியில் இவை முக்கிய பங்களிப்பினை வழங்கின. மேலும் அனைத்து சட்டசபை உறுப்பினர்களும் நிறைவேற்று விடயங்களில் பங்கேற்கும் வாய்ப்பு வழங்கப்பட்டமையானது அவர்களின் அரசியல் தலைமைத்துவத்தை செம்மைப்படுத்துவதற்கு உதவியது.

சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு அரச சபையில் பிரதிநிதித்துவம் கிடைத்தமையானது அவர்களின் பிரச்சினைகளையும் அரச சபையில் முன்வைப்பதற்கான வாய்ப்பு கிடைத்தது. ஆயினும் தமது இன விகிதாசாரத்திற்கு ஏற்ற வகையில் பிரதிநிதித்துவம் கிடைக்கவில்லை என்ற ஆதங்கமும் அவர்கள் மத்தியில் காணப்பட்டது. 1936 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்ட அமைச்சரவையில் ஒரு சிறுபான்மையின பிரதிநிதியேனும் காணப்படவில்லை. இது அவர்கள் மத்தியில் மேலும் அதிருப்தியினை ஏற்படுத்தியது.

சிவில் சமூக அமைப்புக்களின் மற்றும் அவற்றின் செயற்பாடுகளின் விரிவாக்கம் டொனமூர் காலத்தில் இடம்பெற்ற இன்னொரு முக்கிய மாற்றமாகும். தேசிய அமைப்புகள், இடதுசாரி இயக்கங்கள், தொழிற்சங்க அமைப்புகள், பெண்கள் அமைப்புகள், மத அமைப்புகள், சமூக நல அமைப்புகள் என்பன

இக்காலத்தில் மிகவும் துடிப்பாக செயற்பட்ட சிவில் சமூக அமைப்புக்கள் ஆகும். இக்காலத்தில் ஜனநாயக களம் ஒன்று உருவாகியமையானது சிவில் சமூக செயற்பாட்டுக்கு பெரிதும் பங்களிப்பு செய்தது.

**முடிவுரை:**

டொனமூர் அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் இலங்கையில் அரசியல் நிலைமாற்றத்திற்கு ஜனநாயக ஆட்சிமுறை யொன்று உருவாகுவதற்கான அடித்தளத்தினை இட்டது. 1947 ஆம் ஆண்டுக்குப் பின்னர் நாம் அனுபவித்த தீவிர அரசியல் மாற்றங்களுக்கான ஆரம்பத்தினையும் டொனமூர் சீர்திருத்தங்கள் ஏற்படுத்தியது எனலாம். மேற்கூறியவாறு டொனமூர் அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் இலங்கையில் ஜனநாயக ஆட்சிக்கான அடித்தளத்தினை இட்டிருந்தாலும் இலங்கையில் ஒருபோதும் முழுமையான ஜனநாயக ஆட்சி இடம்பெற்றதில்லை. இதற்கு ஜனநாயக ஆட்சி நிறுவனங்களை அரசியல் உயர் குழாமினர் மற்றும் வர்த்தக வகுப்பினர் கைப்பற்றியுள்ளமை ஒரு முக்கிய காரணமாக குறிப்பிட முடியும்.

**5. சோல்பரி அரசியலமைப்பினை இல்லாதொழிப்பதற்கு ஏதுவாக அமைந்த காரணிகளை விளக்குக. (20 புள்ளிகள்)**

**நோக்கம்:**

சோல்பரி அரசியலமைப்பு இல்லாதொழிக்கப்பட்டமைக்கு ஏதுவாக அமைந்த காரணிகள், பின்னணி என்பவை தொடர்பாக பரீட்சார்த்திகள் கொண்டிருக்கும் அறிவினை மதிப்பிட முற்படுகின்றது.

அறிமுகம்:

சோல்பரி அரசியலமைப்பு தொடர்பாக ஒரு சுருக்கமான அறிமுகத்தினை வழங்க வேண்டும். உதாரணமாக, சோல்பரி அரசியலமைப்பு டொனமூர் அரசியல் அமைப்பில் காணப்பட்ட குறைபாடுகளை களைவதற்காக 1947 ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்டது. சோல்பரி யாப்பு இலங்கைக்கு டொமினியன் அந்தஸ்தினை வழங்கியதுடன், பிரித்தானிய பாராளுமன்ற சம்பிரதாயத்தினை அடிப்படையாகக் கொண்ட வெஸ்மின்ஸ்டர் அரசாங்க முறை ஒன்றினையும் அறிமுகம் செய்தது. ஆயினும் இலங்கையின் தேசியவாத அமைப்புகள் மற்றும் இடதுசாரி அமைப்புகள் சோல்பரி யாப்புக்கு எதிராக மேற்கொண்ட பிரச்சாரங்கள் மற்றும் இலங்கை முழு இறைமையுடைய குடியரசாக மாற்றப்பட வேண்டும் போன்ற கோரிக்கைகள் 1970 ஆம் ஆண்டு சோல்பரி யாப்பு இல்லாதொழிக்கப்படுவதற்கு காரணமாயிற்று.

**உள்ளடக்கம்:**

இப்பகுதியில் பரீட்சாத்திகள் சோல்பரி யாப்பு இல்லாதொழிக்கப்பட்டமைக்கான பிரதான காரணங்களை ஆராய வேண்டும்.

இலங்கை தொடர்ந்தும் பிரித்தானிய முடியின் ஆளுகைக்கு உட்பட்ட நாடாக இருக்கக் கூடாது என்ற அபிப்பிராயம் நாட்டில் பரந்த அளவில் கட்டியெழுப்பப்பட்டது.

மேலும் சோல்பரி யாப்பு இலங்கைக்கு முழு அளவிலான சுதந்திரத்தினை வழங்கவில்லை என்ற பிரசாரமும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டது.

சோல்பரி யாப்பின் கீழ் தாபிக்கப்பட்ட பாராளுமன்றத்திற்கு சட்ட இறைமை காணப்படவில்லை. உதாரணமாக, சிறுபான்மையினர் பாதுகாப்புக்கான ஏற்பாடுகளைக்கூட (29 (2)) திருத்துவதற்கான அதிகாரம் பாராளுமன்றத்திற்கு காணப்படவில்லை. மேலும், இலங்கை பாராளுமன்றத்திற்கு அரசியல் அமைப்பில் திருத்தங்களை மேற்கொள்ளவோ அல்லது புதிய யாப்பினை ஏற்றுக் கொள்ளவோ தெளிவான அதிகாரம் வழங்கப்படவில்லை. அதேபோல் சட்டத்துறை அதிகாரங்கள் பிரித்தானிய முடி அல்லது மகா-தேசாதிபதி, ஜனப்பிரதிநிதிகள் சபை மற்றும் செனட் என்பவற்றுக்கிடையில் பகிரப்பட்டமையானது பாராளுமன்றத்தின் சுயாதீனத்தன்மை மற்றும் சட்டவாக்க அதிகாரத்தின் மீது பெரியளவிலான மட்டுப்பாட்டினை விதித்தது.

1947 ஆம் ஆண்டு இலங்கை சுதந்திர சட்டத்தின் படி (Ceylon Independence Act of 1947) இலங்கை அரசாங்கம் கேட்டுக் கொள்ளும் பட்சத்தில் பிரித்தானிய பாராளுமன்றம் இலங்கைக்கான சட்டங்களை உருவாக்கும் அதிகாரத்தினை கொண்டிருந்தது.

இடதுசாரி கட்சிகளும் ஏனைய குடியரசுவாதிகளும் செனட் சபைக்கு அரைவாசி உறுப்பினர்களை பிரித்தானிய முடியின் ஏக பிரதிநிதியான மகா - தேசாதிபதி நியமிப்பதனை பிரித்தானிய காலனித்துவ ஆட்சியின் இறுதி சான்றடையாளமாக கொண்டுள்ளனர் என்ற விமர்சனத்தினை முன்வைத்தார்கள். செனட் சபை உருவாக்கப்பட்ட காலத்திலிருந்து ஐக்கிய தேசிய கட்சி ஆதிக்கம் செலுத்திவந்துள்ளது என்று பிறிதொரு விமர்சனமும் முன்வைக்கப்பட்டது.

1970 ஆம் ஆண்டு மே மாதம் இடம்பெற்ற தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மற்றும் இடதுசாரி கட்சிகளின் கூட்டான ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்தாலும், செனட் சபை தொடர்ந்தும் எதிர்க்கட்சியின் செல்வாக்கிலேயே காணப்பட்டது என்பதனை ஐக்கிய முன்னணி அரசாங்கம் அடையாளம் கண்டது. இலங்கையினை முழுமையான குடியரசாக மாற்ற வேண்டும் என்ற பிரசாரம் இக்காலத்தில் தீவிரம் பெற்றது. அதற்கான நியாயத்தினை இலங்கையின் தேசியவாதிகளும் இடதுசாரிகளும் பின்வருமாறு முன்வைத்தார்கள். சோல்பரியாப்பு இலங்கைக்கு முழுமையற்ற சுதந்திரத்தினையும் இறைமையற்ற பாராளுமன்றத்தினையும் வழங்கியது. பிரித்தானியே முடி தொடர்ந்தும் அரசின் தலைவராக இருக்கின்றார். மேலும் செனட்சபை இலங்கைக்கு பொருத்தமில்லை எனவும் பிரித்தானிய பிரிவு கவுன்சில் இறுதி மேன்முறையீட்டு நீதிமன்றமாக இருக்கக் கூடாது போன்ற விடயங்களை முன்வைத்தனர்.

மேலும், சோல்பரி அரசியல் யாப்பு காலனித்துவ பொருளாதார முறை, சட்ட மற்றும் நீதிமுறையில் இருந்து பெரியளவில் வேறுபடவில்லை. தீவிர மாற்றம் எதனையும் ஏற்படுத்தவில்லை என்ற விமர்சனமும் முன்வைக்கப்பட்டது.

சிங்கள மொழிக்கும் பௌத்த மதத்திற்கும் முன்னுரிமை வழங்கும் புதிய அரசியலமைப்பொன்று உருவாக்கப்பட வேண்டும் என்ற பிரசாரமும் இக்காலத்தில் முன்னெடுக்கப்பட்டது.

செனட் சபைக்கான நியமன உறுப்பினர் (Appointed MPs) முறையினை இடதுசாரிகள் எதிர்த்ததுடன் **சோல்பரியாப்பில்** அடிப்படை உரிமைகள் அத்தியாயம் ஒன்று உள்வாங்கப்படவில்லை என்ற விமர்சனத்தினையும் முன்வைத்தனர்.

சோல்பரி யாப்பின் கீழ் உருவாக்கப்பட்ட சுதந்திர சிவில் சேவையும் விமர்சனத்திற்கு உள்ளாகியது. அக்காலத்தில் அரசியல் தலையீடுகள் இன்றி சுயாதீனமாக சிவில் சேவை காணப்பட்டது. இதன் காரணமாக அரசியல்வாதிகளுக்கு தமது நிகழ்ச்சி நிரல்களை முன்னெடுக்க முடியவில்லை. சிவில் சேவை அதிகாரிகள் அரசியல் கட்டுப்பாட்டினை விரும்பவில்லை. அக்காலத்தில் சிவில் சேவை உயர் குழாத்தினரின் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்தது. இதனை மாற்ற வேண்டும் என்று கருத்தினை S. W. R. D. பண்டாரநாயக்க முன் வைத்தார். மக்களுக்கு சேவை செய்யக்கூடிய வகையில் சிவில் சேவை மாற்றி அமைக்கப்பட வேண்டுமாயின் அதனை அரசியல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர வேண்டும் என்றார். அதேபோல் நீதிச்சேவை ஆணைக்குழு மீதும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இப்பின்புலத்திலேயே சோல்பரி அரசியலமைப்பினை திருத்துவதற்கான இரண்டு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

பிரதமர் S. W. R. D. பண்டாரநாயக்க தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசாங்கம் 1957 நவம்பர் 2ஆம் திகதி இணை- பாராளுமன்ற குழு ஒன்றினை சோல்பரி யாப்புக்கான திருத்தங்களை முன்வைப்பதற்காக தாபித்தது. இக்குழு 1959 பெப்ரவரி 6 ஆம் திகதி தனது அறிக்கையினை முன்வைத்தது. இதில் இலங்கை ஒரு குடியரசாக மாற்றப்பட வேண்டும் எனவும் சோல்பரி யாப்பில் அடிப்படை உரிமை அத்தியாயம் ஒன்றினை உள்வாங்க வேண்டும் எனவும் குறிப்பிட்டது. இவ் முன்மொழிவுகள் தொடர்பாக இக்குழுவில் இருந்த அனைத்து தரப்பினரிடமும் ஒத்த கருத்து காணப்பட்டது. ஆயினும் 1959 செப்டம்பர் 26 ஆம் திகதி பண்டாரநாயக்க சுட்டுக்கொலை செய்யப்பட்டபின்னர் அரசியலமைப்பு திருத்த முயற்சிகள் நீடிக்கவில்லை.

பின்னர் 1965 ஆம் ஆண்டு ஐக்கிய தேசிய கட்சி ஒரு பாராளுமன்ற இணை குழுவினை தாபித்து இலங்கையினை குடியரசாக்குவதற்கான வழிமுறைகளை ஆராய பணித்தது. ஆயினும் எதிர்க்கட்சியிலிருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி முற்றிலும் புதிய யாப்பு ஒன்றினை முன்மொழிந்தார்கள். அதனால் அரசியலமைப்பினை திருத்துவதற்கு UNP எடுத்த முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை.

**முடிவுரை:**

உள்ளூர் தேசியவாத சக்திகளும் இடதுசாரி இயக்கங்களும் தொடர்ச்சியாக முன்வைத்த எதிர்ப்புகள் சோல்பரிஅரசியலமைப்பு இல்லாதொழிக்கப்படுவதற்கு பிரதான காரணமாக அமைந்தது என்பதனை பரீட்சாத்திகள் முன்வைக்க முடியும். இவ் அரசியல் யாப்பில் சில குறைபாடுகள் காணப்பட்டாலும், அது சில முக்கியமான ஜனநாயகக் கூறுகளைக் கொண்டிருந்தது என்பதனை மறுக்க முடியாது. அந்த வகையில் பாராளுமன்ற அரசாங்க முறைக்கு அவசியமான அமைச்சர்கள் சபை, ஈரங்க சட்டசபை, கூட்டுப்பொறுப்பு ஆகியவற்றினை அறிமுகம் செய்தது, சிறுபான்மையினர் உரிமைக்காப்பீடுகள் அறிமுகம் செய்யப்பட்டமை, அரசியலமைப்பின் விசித்திரமான பண்பாக அமைந்தது. அத்துடன் சுயாதீன பொதுச்சேவை மற்றும் நீதிச்சேவை ஆணைக்குழுக்கள் தாபிக்கப்பட்டமையானது இத்துறைகளில் தேவையற்ற அரசியல் தலையீட்டினை தவிர்க்க உதவியது. இவை அனைத்தும்

முதலாம் குடியரசு யாப்பில் தலைகீழாக மாற்றப்பட்டதுடன் பொதுச்சேவை எல்லையற்ற அரசியல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதுடன் சிறுபான்மையினர் உரிமைக்காப்பீடுகளும் இல்லாதொழிக்கப்பட்டன.

**6. சோல்பரி அரசியலமைப்புடன் ஒப்பிடும் போது இலங்கையின் 1972ம் ஆண்டு அரசியல் அமைப்பில் பாராளுமன்றம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பிரதான மாற்றங்களை விபரிக்குக.**

**(20 புள்ளிகள்)**

**நோக்கம் :-** சோல்பரி மற்றும் முதலாம் குடியரசு யாப்பின் கீழ் தாபிக்கப்பட்ட சட்டத்துறை தொடர்பாக பரீட்ச்சார்த்திகள் கொண்டிருக்கும் அறிவினை மற்றும் அவ்விரு சட்டத்துறைகளையும் ஒப்பீடு செய்யும் திறனை மதிப்பிடுவதே இவ்வினாவின் நோக்கமாகும். பரீட்சார்த்திகள் இவ்விரு அரசியலமைப்பிலும் அறிமுகம் செய்யப்பட்ட சட்டத்துறையின் பின்புலம் தொடர்பாக குறிப்பிட வேண்டும். இவ்விரு அரசியலமைப்புகளும் எத்தகைய பின்புலத்தில் கொண்டுவரப்பட்டன என்பது தொடர்பாகவும் குறிப்பிட முடியும். மேலும் இவ்விரு அரசியல் அமைப்பிலும் தாபிக்கப்பட்ட சட்டத்துறைகளின் ஒற்றுமை, வேற்றுமைகளையும் ஆராய்வதே இவ்வினாவின் நோக்கமாகும்.

**அறிமுகம்**

அறிமுகத்தில் சுருக்கமாக இவ்விரு அரசியல் அமைப்புக்களும் எத்தகைய பின்புலத்தில், எத்தகைய நோக்கத்துக்காக கொண்டுவரப்பட்டன, அவை எவ்வாறு சட்டத்துறையினை செம்மைப்படுத்தின என்பதனை குறிப்பிட வேண்டும். உதாரணமாக சோல்பரி யாப்பு காலனித்துவ ஆட்சியாளர்களிடமிருந்து அரசியல் அதிகாரத்தினை உள்ளூர் உயர்குழாத்தினரின் கருத்தொருமைப்பாட்டுடன் கூடிய வகையில் அரசியலமைப்பு சட்டகம் ஒன்றின் ஊடாக நிலைமாற்றம் செய்தது. சோல்பரி அரசியலமைப்பு இலங்கையில் புதிய அரசியல் ஒழுங்கு மற்றும் அரசாங்க முறையினை தாபிப்பதில் முக்கிய பங்காற்றியது. மறுபுறமாக, முதலாம் குடியரசு யாப்பு சோல்பரி அரசியல் யாப்பில் அறிமுகம் செய்யப்பட்ட அரசியல் ஒழுங்கினை/ சட்டகத்தினை இல்லாமல் செய்து புதிய அரசியல் ஒழுங்கினை உருவாக்கியது. முதலாம் குடியரசு யாப்பு காலனித்துவத்துக்கு எதிரான நோக்கங்களையும் காலனித்துவ சட்ட மரபினை இல்லாது செய்வதனையும் நோக்காகக் கொண்டிருந்தது.

**உள்ளடக்கம்**

சோல்பரி யாப்பின் கீழ் பாராளுமன்றம் மூன்று நிறுவனங்களைக் கொண்டு காணப்பட்டது. பிரித்தானிய முடி (மகாதேசதிபதி) மக்கள் பிரதிநிதிகள் சபை மற்றும் செனட் சபை என்பனவாகும். இதனை 1972ஆம் ஆண்டு முதலாம் குடியரசு யாப்பு மாற்றியதோடு தேசிய அரசுப் பேரவையினை சட்டத்துறை சார்ந்த உயர் அதிகாரம் படைத்த நிறுவனமாக மாற்றியது.

அரசியலமைப்பின் 5ம் பிரிவு “தேசிய அரசுப்பேரவை குடியரசின் அரச அதிகாரத்தின் மீயுயர் நிறுவனமாக காணப்படும்” என குறிப்பிட்டது. அரசியலமைப்பின் 44வது பிரிவு “தேசிய அரசுப் பேரவையின் சட்டவாக்க அதிகாரம் உச்சளவான அதிகாரம்” என குறிப்பிட்டது. 48ம் பிரிவு “தேசிய அரசுப்பேரவை நிறைவேற்றுகின்ற சட்டங்களின் செல்லுபடியாகும் தன்மை அல்லது அரசியலமைப்புத்

தன்மை தொடர்பாக கேள்வி கேட்க/ விசாரனை செய்ய நீதி மன்றத்திற்கோ அல்லது வேறு எந்த நிறுவனங்களுக்கோ அதிகாரம் இல்லை'' என குறிப்பிட்டது.

**அரசியலமைப்பின் மூலம் :-** சோல்பரி அரசியலமைப்பு சிறிய வேறுபாட்டுடன் வெஸ்மின்ஸ்டர் மாதிரியினை அடிப்படையாகக் கொண்டு காணப்பட்டது. மாறாக முதலாம் குடியரசு வெஸ்மின்ஸ்டர் மாதிரியில் இருந்து பெரியளவில் வேறுபட்டது. அது கலப்பு அரசியலமைப்பு முறையினைக் கொண்டிருந்தது. குறிப்பாக, வெஸ்மின்ஸ்டர் பண்புகளையும் குடியரசுவாதப் பண்புகளையும் ஒன்றிணைத்ததாக காணப்பட்டது.

முதலாம் குடியரசு யாப்பில் காணப்பட்ட குடியரசுப் பண்புகளாக பின்வருவனவற்றை குறிப்பிட முடியும்.

ஜனாதிபதி அரசின் தலைவராக காணப்பட்டார். பாராளுமன்றத்தின் சட்டவாக்க இறைமை என்ற தத்துவம் அறிமுகம் செய்யப்பட்டது. நீதிமன்றத்தால் கூட கேள்விக்குட்படுத்த முடியாத ஒரு சட்டத்துறை காணப்பட்டமையானது ஒரு புறம் பாராளுமன்ற இறைமையினையும் மறுபுறமாக மக்களின் இறைமை அதிகாரத்தின் விரிவாக்கத்தினையும் குறித்து நின்றது.

**சட்டத்துறையின் கட்டமைப்பு**

- ✓ சோல்பரி மாதிரி - ஈரங்க சட்டசபையைக் கொண்டிருந்தது.
- ✓ முதலாம் குடியரசு மாதிரி – ஓரங்க சட்டசபையைக் கொண்டிருந்தது.
- ✓ சோல்பரி மாதிரி – பாராளுமன்றத்தின் சட்டவாக்க அதிகாரத்தினை மட்டுப்படுத்தியது.
- ✓ முதலாம் குடியரசு மாதிரி – பாராளுமன்றத்துக்கு முழு அளவிலான சட்டவாக்க இறைமையினை வழங்கியது.
- ✓ சோல்பரி மாதிரி - பாராளுமன்றம் மக்களால் தெரிவு செய்யப்பட்ட மற்றும் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டு காணப்பட்டது. (செனட்)
- ✓ முதலாம் குடியரசு மாதிரி – பாராளுமன்றம் மக்களால் நேரடியாக தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களை மாத்திரமே கொண்டிருந்தது.
- ✓ சோல்பரி யாப்பின் கீழ் தாபிக்கப்பட்ட சட்டத்துறையானது பிரித்தானிய பாராளுமன்ற சம்பிரதாயம் மற்றும் சிந்தனைகளை அடிப்படையாகக் கொண்டமைந்தது. சட்டத்துறையானது சாதாரண மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டிருக்க வேண்டும் என்ற நோக்கில் அங்கு பொது மக்கள் சபை உருவாக்கப்பட்டது. அதனையே இலங்கையில் ஜன பிரதிநிதிகள் சபை எனும் பெயரில் உருவாக்கினார்கள். அதேபோல் மேல் சபை ஒன்று தாபிக்கப்பட்டு அதில் நில உடைமையாளர்கள்/ நில பிரபுக்கள், செல்வந்தர்கள், உயர்குழாம் வகுப்பினர் போன்றோருக்கு அங்கத்துவம் வழங்க பிரபுக்கள் சபை ஒன்று உருவாக்கப்பட்டது. அதனை இலங்கையில் செனட் சபை என்ற பெயரில் உருவாக்கினார்கள். அந்தவகையில் பிரித்தானிய மரபினை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட சோல்பரி பாராளுமன்றம் சமூகத்தில் நிலவிய வகுப்பு அல்லது வர்க்க வேறுபாடுகளை பிரதிபலித்தது எனலாம். சோசலிச சித்தாந்தத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட முதலாம் குடியரசு யாப்பு சட்டசபையினை கட்டமைப்பதில் பிரித்தானியர்கள் கையாண்ட காலனித்துவ வர்க்க அணுகுமுறையினை நிராகரித்து தனி சபையினைக் கொண்ட சட்டத்துறையினை உருவாக்கி

அதில் சாதாரண மக்கள் நேரடியாக தேர்தல் ஒன்றின் மூலம் தெரிவு செய்யும் பிரதிநிதிகளுக்கு முன்னுரிமை வழங்கியது.

- ✓ முதலாம் குடியரசு யாப்பின் கீழ் மக்களின் இறைமை அதிகாரம் பிரயோகிக்கப்பட்ட பிரதான அரச நிறுவனமாக தேசிய அரசுப் பேரவை காணப்பட்டது. ஆனால் சோல்பரி அரசியல் யாப்பில் மக்கள் இறைமை மற்றும் சட்டத்துறை என்பவற்றுக்கிடையில் தொடர்பு காணப்படவில்லை. சோல்பரி அரசியலமைப்பின் 7வது பிரிவிற்கிணங்க பிரித்தானிய முடி பாராளுமன்றத்தின் ஒரு பகுதியாக காணப்பட்டார். இது பாராளுமன்றம் மக்கள் இறைமையினை முழுமையாக/ சுயாதீனமாக பிரயோகிப்பதில் மட்டுப்பாட்டினை ஏற்படுத்தியது. அந்தவகையில் சோல்பரி பாராளுமன்றத்தினைப் போல் அன்றி, முதலாம் குடியரசு யாப்பின் கீழான சட்டத்துறை சட்டவாக்கத்தின் மீயுயர் அதிகாரத்தினை அனுபவித்தது எனலாம்.
- ✓ சோல்பரி பாராளுமன்றம் 5 வருட பதவிக்காலத்தினையும் தேசிய அரசுப்பேரவை 6 வருட பதவிக்காலத்தினையும் கொண்டிருந்தது.
- ✓ சோல்பரி யாப்பின் கீழ் சட்டங்களுக்கு இறுதி அங்கீகாரத்தினை மகாதேசதிபதி வழங்கினார். 1972ம் ஆண்டு அரசியல் யாப்பின் கீழ் சட்டங்களுக்கான இறுதி கையொப்பத்தினை சபாநாயகர் வழங்கினார்.
- ✓ தேசிய அரசுப் பேரவைக்கு கடந்த காலத்தில் இடம்பெற்ற ஒரு செயற்பாடு/ தவறு/ குற்றம் தொடர்பாக சட்டங்களை இயற்ற முடியும். ஆனால் அந்த அதிகாரம் சோல்பரி பாராளுமன்றத்திற்கு காணப்படவில்லை. இதனை கடந்த காலத்தினை பாதிக்கும் சட்டம் என குறிப்பிடலாம் (Restrospective Laws).
- ✓ சோல்பரி பாராளுமன்றம் இயற்றும் சட்டங்களை குறிப்பாக சட்டமாக்கியப் பின்னர் சவாலுக்குட்படுத்த முடியும். காரணம் உயர் நீதிமன்றத்துக்கு நீதிப்புனராய்வு அதிகாரம் காணப்பட்டமையாகும். ஆனால் முதலாம் குடியரசு யாப்பில் நீதிமன்றங்களுக்கு இவ்வதிகாரம் காணப்படவில்லை. அரசியலமைப்பு நீதிமன்றம் ஒன்று காணப்பட்ட போதும் அது மிகவும் பலவீனமானதாகவே காணப்பட்டது. அதனையும் கட்டுப்படுத்தும்/ மீறிச்செல்லும் அதிகாரத்தினை தேசிய அரசுப் பேரவை கொண்டிருந்தது.

முடிவுரை

சோல்பரி மற்றும் முதலாம் குடியரசு யாப்புக்களில் சட்டத்துறைகளுக்கிடையிலான வேறுபாடுகளுக்கு காரணமாக அமைவது இரு வேறுபட்ட அரசியல் அமைப்பின் அடிப்படைகளும் அவை பின்பற்றிய சித்தாந்தங்களுமே என்பதனை பரீட்சார்த்திகள் முடிவுரையில் முன்வைக்க வேண்டும். முதலாவது மாதிரி வெஸ்மின்ஸ்டர் முறையினையும், இரண்டாவது மாதிரி வெஸ்மின்ஸ்டர் மற்றும் குடியரசுவாத சித்தாந்தங்களையும் அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டன. சட்டத்துறைகளினது வேறுபாடுகளை (i) சட்டவாக்க அதிகாரம், (ii) அமைவு சேர்க்கை, (iii) உறுப்புரை, (iv) அரசியலமைப்பு சித்தாந்தம் மற்றும் அவற்றின் மூலம் என்பவற்றின் ஊடாக விளங்கிக் கொள்ள முடியும் என்பதனைக் குறிப்பிடலாம்.

**7. (i) இலங்கையின் 1978ம் அரசியலமைப்பிற்கான 13வது திருத்தத்தின் நோக்கங்களாக அமைந்தவை யாவை. (05 புள்ளிகள்)**

**(ii) 1978ம் ஆண்டு அரசியலமைப்பில் கொண்டுவரப்பட்ட 18வது மற்றும் 19வது திருத்தங்களின் நோக்கங்கள் மற்றும் பிரதானப் பண்புகளை ஒப்பிடுக. (15 புள்ளிகள்)**

**(i). இலங்கையின் 1978ம் அரசியலமைப்பிற்கான 13வது திருத்தத்தின் நோக்கங்களாக அமைந்தவை யாவை. (05 புள்ளிகள்)**

- 13வது திருத்தத்தின் முக்கிய நோக்கம் அரசியல் சார்ந்தது ஆகும். அரசாங்கத்திற்கும் தமிழ்த் தேசியவாதப் போராளிக் குழுக்களுக்கும் இடையில் யுத்த நிலைக்குச் சென்ற இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியலமைப்பு ரீதியான அரசியல் தீர்வை வழங்குவதற்கு அது முயன்றது.

- 1978 ஆம் ஆண்டின் இரண்டாவது குடியரசு அரசியலமைப்பு இலங்கை குடியரசு "ஒரு ஒற்றையாட்சி" என்று குறிப்பிடுகின்றது. 1980 களில் அதிகாரப் பகிர்வுக்கான முயற்சிகள் மற்றும் தீர்க்கப்படாத விடயங்கள் என்பன தமிழ் தேசியவாத இயக்கங்களை ஆயுத மோதலுக்கும், பின்னர் அரசுக்கும் தமிழ் போராளிக் குழுக்களுக்கும் இடையில் உள்நாட்டுப் போருக்கும் வழி செய்தது.

- இந்திய அனுசரணையுடன் இடம்பெற்ற திம்பு பேச்சுக்கள் தமிழ் தேசியவாத குழுக்களின் கோரிக்கைகளுக்கான தீர்வாக பிராந்திய சுயாட்சியின் அடிப்படையிலான தீர்வு ஒன்று ஏற்படுவதற்கு வழிவகுத்தன. இலங்கை மோதலில் இந்தியாவின் தலையீடு இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வுக்காக இந்திய மற்றும் இலங்கை அரசாங்கங்களுக்கும் தமிழ் தேசியவாத குழுக்களுக்கும் இடையில் கலந்துரையாடல்களை எளிதாக்கியது. இந்த செயன்முறை 1987 இல் இரு அரசாங்கங்களுக்கிடையேயான இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் உச்சக்கட்டத்தை அடைந்தது. இலங்கையின் இரண்டாவது குடியரசு அரசியலமைப்பின் 13வது திருத்தம் இந்த உடன்படிக்கையில் இருந்து வெளிப்பட்ட அரசியல் முன்மொழிவாகும்.

- 13வது திருத்தத்தின் நோக்கங்கள் இலங்கைத் தமிழ் சிறுபான்மையினரின் இருவிதமான குறைகளை நிவர்த்தி செய்வதாகும். முதலாவது சம மொழி உரிமையை உறுதிப்படுத்துவது. அதன்படி தமிழ் மொழி அரசின் உத்தியோகபூர்வ அலுவலக மொழியாக்கப்பட்டது. இரண்டாவது மாகாணங்களுக்கு அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்கும் திட்டத்தை நாடு தழுவிய அளவில் அறிமுகப்படுத்துவது. இதற்காக ஒன்பது புதிய மாகாண சபைகள் உருவாக்கப்பட்டு அதிகாரப் பகிர்வு திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

- இவ்வாறாக 13வது திருத்தத்தின் நோக்கமானது மூன்று விடயங்களில் இருந்தது: (அ) இலங்கையின் இனப்பிரச்சினையை அரசியல் ரீதியாகவும் பேச்சுவார்த்தை மூலமாகவும் தீர்ப்பது, (ஆ) இலங்கைத் தமிழ் சமூகத்திற்கு அதிகாரப் பகிர்வு மற்றும் மாகாண சபைகள் மூலம் பிராந்திய சுயாட்சி முறையை வழங்குதல் மற்றும் (இ) அரசியல் வழிமுறைகளால் இன மோதலை முடிவுக்குக் கொண்டுவருதல்.

**(ii). 1978ம் ஆண்டு அரசியலமைப்பில் கொண்டுவரப்பட்ட 18வது மற்றும் 19வது திருத்தங்களின் நோக்கங்கள் மற்றும் பிரதானப் பண்புகளை ஒப்பிடுக. (15 புள்ளிகள்)**

**அறிமுகம் (2 புள்ளிகள்)**

1978ம் அரசியலமைப்பின் 18வது மற்றும் 19வது திருத்தங்கள் இலங்கையில் ஜனாதிபதியின் அதிகாரங்கள் மற்றும் அதிகார உறவுகளில் முக்கியமான மாற்றங்களை ஏற்படுத்தின. இரண்டு திருத்தங்களும் ஜனாதிபதியின் அதிகாரங்கள் மற்றும் நிறைவேற்று ஜனாதிபதி முறைமை தொடர்பாக இரண்டு மாறுபட்ட அணுகுமுறைகளைக் கொண்டிருந்தன. 18வது திருத்தம் ஜனாதிபதியின் அதிகாரங்களை அதிகரிக்க முற்பட்டாலும் 19வது திருத்தத்தின் நோக்கம் அந்த அதிகாரங்களை குறைத்து 17வது திருத்தத்தின் கீழ் கொண்டுவரப்பட்டதைப் போன்று ஒரு ஜனநாயகக் கட்டமைப்பிற்குள் மீண்டும் சமநிலைத் தலையீடுகளை அறிமுகப்படுத்துவதாகும்.

**அரசியலமைப்பின் 18வது மற்றும் 19வது திருத்தங்களின் நோக்கங்களின் ஒப்பீடு.**

- அப்போதைய அரசாங்கத்தால் 18வது திருத்தத்தை அறிமுகப்படுத்திய போது அறிவிக்கப்பட்ட நோக்கம் "பொருளாதார வளர்ச்சிக்கு முன்னுரிமை" வழங்குதல் ஆகும். இந்த பொருளாதார அபிவிருத்தி இலக்கு என்பது சமநிலைத் தலையீடுகள் அல்லது ஜனாதிபதியின் அதிகாரங்களுக்கு கட்டுப்பாடுகள் இல்லாமல் ஒரு பலமான நிறைவேற்று ஜனாதிபதி முறையை உருவாக்குவதை நியாயப்படுத்தும் ஒரு முயற்சியாக மட்டுமே காணப்பட்டது. ஜனநாயக அடிப்படையான சமநிலைத் தலையீடுகள் ஜனாதிபதியை பலவீனப்படுத்தும் தடைகளாக கருதப்பட்டன. நாட்டின் பொருளாதார அபிவிருத்தியை விரைவுபடுத்துவதற்கு அதிக அதிகாரங்கள் மற்றும் பொறுப்புக்கூறல் இல்லாத ஒரு பலமான ஜனாதிபதி அவசியமானதாகக் கருதப்பட்டது.

- 18வது திருத்தத்தின் மூலம் செய்யப்பட்ட மாற்றங்களுக்கு மாறாக 19வது திருத்தம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைத்தது. இது நிறைவேற்று ஜனாதிபதிக்கான சமநிலைத் தலையீடுகளை வலுப்படுத்த முயன்றது. நிறைவேற்று அதிகாரத்தை சரிபார்ப்பதிலும் சமநிலைப்படுத்துவதிலும் சட்டமன்றத்தின் முக்கிய பங்கை எடுத்துரைப்பது, அரசாங்கத்தின் நிறைவேற்று மற்றும் சட்டமன்ற நிறுவனங்களுக்கு இடையே அதிகாரங்களைப் பிரித்தல் மற்றும் சமநிலைப்படுத்தல் ஆகியவை திருத்தத்தின் முக்கிய நோக்கங்களாகும்.

- நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரங்களை பலப்படுத்துவது 18வது திருத்தத்தின் பிரதான அரசியல் நோக்கமாகும். இதன்படி 18வது திருத்தம் ஜனாதிபதிக்கான இரண்டு பதவிக் கால மட்டுப்பாட்டை நீக்கியதுடன் அரசியலமைப்பு பேரவையின் அதிகாரங்கள் மற்றும் செயற்பாடுகளை நீக்கி அதற்குப் பதிலாக ஒரு பாராளுமன்ற சபையை ஸ்தாபித்தது. அரசியலமைப்புப் பேரவை மற்றும் 17வது திருத்தத்தின் கீழ் நிறுவப்பட்ட சுயாதீன ஆணைக்குழுக்கள் என்பன ஜனாதிபதியின் அதிகாரங்களுக்கு தடையாக இருந்தது. 18வது திருத்தத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட பாராளுமன்ற சபை ஜனாதிபதியின் விருப்புரிமைகளில் தலையிடாது என எதிர்பார்க்கப்பட்டது.

- அரசியலமைப்பின் 17 வது திருத்தம் ஆளுநர் சபை மற்றும் பொது நிறுவனங்களின் முக்கிய பதவிகளுக்கு உறுப்பினர்களை நியமிக்கும் ஜனாதிபதியின் அதிகாரத்தை முன்னர் குறைத்தது. அது

அரசியலமைப்பு பேரவை மற்றும் சுயாதீன ஆணைக்குழுக்களையும் நிறுவியது. எனவே 17வது திருத்தச் சட்டத்தை ஒழிப்பது 18வது திருத்தத்தின் முக்கிய நோக்கமாக இருந்தது.

- 19வது திருத்தம் 18வது திருத்தத்தால் உருவாக்கப்பட்ட "நிறைவேற்று சர்வாதிகார ஆட்சியில்" இருந்து தெளிவாக வேறுபட்டிருந்தது.

- இவ்வாறு 19வது திருத்தத்தின் நோக்கங்களாக பின்வருவன காணப்பட்டன. அவையாவன

18வது திருத்தத்தை ரத்து செய்தல்.

ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைத்தல்

பிரதமர் பதவியை வலுப்படுத்துதல்

ஜனநாயக ஆட்சிக் கொள்கைகளை மீண்டும் அறிமுகப்படுத்துதல்

17வது திருத்தத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட சுயாதீன ஆணைக்குழுக்களை புத்துயிர் பெறச் செய்தல் என்பனவாகும்.

**அரசியலமைப்பின் 18வது மற்றும் 19வது திருத்தங்களின் முக்கிய அம்சங்கள் தொடர்பான ஒப்பீடு**

**ஜனாதிபதிக்கான பதவிக்கால மட்டுப்பாடு**

- அரசியலமைப்பின் பிரிவு 31(2)ஐ நீக்குவதன் மூலம் 18வது திருத்தம் ஒரு தனிநபர் ஜனாதிபதி பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படும் காலங்களின் எண்ணிக்கையின் மட்டுப்பாட்டை நீக்கியது. 19வது திருத்தம் நிறைவேற்று ஜனாதிபதி முறையின் விதிமுறைகள் மற்றும் பதவிக்காலங்களில் மட்டுப்பாடுகளை மீண்டும் கொண்டு வந்தது. இதன்படி ஜனாதிபதியின் பதவிக்காலம் 6 ஆண்டுகளில் இருந்து 5 ஆக குறைக்கப்பட்டுள்ளது. (19வது திருத்தத்தின் சரத்து 3, அரசியலமைப்பின் உறுப்புரை 30(2)).

- 19வது திருத்தம் ஒரு நபர் ஜனாதிபதியாக பதவி வகிக்கக்கூடிய இரண்டு தவணை மட்டுப்பாடுகளை மீண்டும் அறிமுகப்படுத்தியது. இதனால் இரண்டு முறை ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டவர் மூன்றாவது முறையாக போட்டியிட தகுதியற்றவர் ஆவார். (19வது திருத்தத்தின் 'சரத்து 4, அரசியலமைப்பின் பிரிவு 31(2)).

**நிறைவேற்று அதிகாரத்தின் மீது பாராளுமன்றக் கட்டுப்பாடு.**

- அரசியலமைப்பு பேரவையை பாராளுமன்ற சபையாக மாற்றியமைத்து 17வது திருத்தத்தின் மூலம் உருவாக்கப்பட்ட ஜனாதிபதியின் அதிகாரங்கள் மீதான மட்டுப்பாடுகளைக் குறைக்க 18வது திருத்தம் முக்கியமான மாற்றங்களைச் செய்தது.

- அரசியலமைப்பின் 41A முதல் 41H வரையிலான பிரிவுகளை நீக்குவதன் மூலம் 18வது திருத்தம் பாராளுமன்ற சபையை உருவாக்கியது.

    - ❖ **சபையின் கட்டமைப்பு-** 1. பிரதம மந்திரி 2. சபாநாயகர் 3. எதிர்க்கட்சித் தலைவர் 4. பாராளுமன்ற உறுப்பினராக இருக்கின்ற பிரதமரின் நியமனதாரர் 5. பாராளுமன்ற உறுப்பினராக இருக்கின்ற எதிர்க்கட்சித் தலைவரின் நியமனதாரர்

- ❖ ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் ஜனாதிபதியால் நியமிக்கப்பட வேண்டும்.

• 19வது திருத்தம் அரசியலமைப்பு பேரவையை மீண்டும் அறிமுகப்படுத்தியது - அரசியலமைப்பு பேரவை 7 பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் 3 சிவில் சமூக உறுப்பினர்களையும் கொண்டிருந்தது. அரசியலமைப்புப் பேரவையின் பரிந்துரையின் பேரில் மட்டுமே பின்வரும் ஆணைக்குழுக்களுக்கான உறுப்பினர்களை ஜனாதிபதியால் நியமிக்க முடியும்.

- ❖ தேர்தல் ஆணைக்குழு
- ❖ பொதுச் சேவை ஆணைக்குழு
- ❖ தேசிய பொலிஸ் ஆணைக்குழு
- ❖ இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
- ❖ இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்யும் ஆணைக்குழு
- ❖ நிதி ஆணைக்குழு
- ❖ எல்லை நிர்ணய ஆணைக்குழு
- ❖ தேசிய கொள்முதல் ஆணைக்குழு
- ❖ கணக்காய்வாளர் சேவை ஆணைக்குழு
- ❖

**ஜனாதிபதியின் அதிகாரம் மற்றும் அமைச்சரவை குழுவின் அதிகாரங்கள்.**

• 18வது திருத்தம் பாராளுமன்ற சபையின் அவதானிப்புகள் எதுவுமின்றி அரசாங்கத்தின் முக்கிய நியமனங்களை மேற்கொள்ள ஜனாதிபதிக்கு அதிகாரம் வழங்கியது. உறுப்புரை 41A(6)இன்படி குடியரசுத் தலைவர் நாடாளுமன்றக் குழுவின் அவதானிப்புகளைக் கோரும் போது அவதானிப்புகள் ஒரு வாரத்திற்குள் தெரிவிக்கப்பட வேண்டும். சபை தனது அவதானிப்புகளை ஒரு வாரத்திற்குள் தெரிவிக்கத் தவறினால் நியமனங்களைச் செய்வதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரம் உண்டு.

• இது பொதுச் சேவை ஆணைக்குழு நியமனங்களை ஜனாதிபதியின் விருப்பத்திற்கு உட்பட்டதாக மாற்றியது. ஜனாதிபதியினால் பொதுச் சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்களும் அதன் தலைவரும் நியமிக்கப்பட வேண்டும்.

• 55வது சரத்தை ரத்து செய்வதன் மூலம் பொதுச் சேவையின் மீது அமைச்சரவைக்கு அதிக அதிகாரம் காணப்படல் - (அ) நியமனங்கள், பதவி உயர்வு, இடமாற்றம், ஒழுங்கு கட்டுப்பாடு மற்றும் பணிநீக்கம் உள்ளிட்ட அரச அலுவலர்கள் தொடர்பான கொள்கைகளின் அனைத்து விடயங்களையும் அமைச்சரவை வழங்குவது மற்றும் தீர்மானிப்பது என்று திருத்தம் வழங்கியது. (ஆ) அனைத்து துறைத் தலைவர்களின் நியமனம், பதவி உயர்வு, இடமாற்றம், ஒழுக்கக் கட்டுப்பாடு மற்றும் பதவி நீக்கம் ஆகியவை அமைச்சரவைக்கு வழங்கப்பட வேண்டும். (இ) அரசமைப்புச் சட்டத்தின் விதிகளுக்கு உட்பட்டு அரச அதிகாரிகளின் நியமனம், பதவி உயர்வு, இடமாற்றம், ஒழுக்கக் கட்டுப்பாடு மற்றும் பணிநீக்கம் ஆகியவை பொதுச் சேவை ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

• 18வது திருத்தம் பொலிஸ் ஆணைக்குழு மற்றும் தேர்தல் ஆணைக்குழுவின் அதிகாரங்களை கட்டுப்படுத்தியது. இது தேசிய பொலிஸ் ஆணைக்குழு காவல்துறைக்கு எதிரான பொதுமக்களின் புகார்களை விசாரிப்பதை மட்டுப்படுத்தியது.

• 19வது திருத்தம் ஜனாதிபதியின் விருப்பத்தின் பேரில் பாராளுமன்றத்தை கலைக்கும் அதிகாரத்தை நீக்கியது - பாராளுமன்றத்தின் முதல் கூட்டத்திலிருந்து பாராளுமன்றத்தை கலைக்குமாறு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்கள் தீர்மானம் நிறைவேற்றினால் அல்லது நான்கரை வருடங்கள் முடிவடைந்த எந்த நேரத்திலும் ஜனாதிபதியால் பாராளுமன்றத்தை கலைக்க முடியும். (19வது திருத்தத்தின் 'சரத்து 17, அரசியலமைப்பின் பிரிவு 70(1)).

• இது ஜனாதிபதி மற்றும் அமைச்சரவை குழு மீதான சமநிலைத் தலையீடுகளாக பின்வரும் விதிகளை அறிமுகப்படுத்தியது.

❖ பிரதமரை நீக்கும் ஜனாதிபதியின் அதிகாரத்தைத் தடுத்தல் - பிரதமரை தனது விருப்பப்படி நீக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இல்லை. (19வது திருத்தத்தின் பிரிவு 9, அரசியலமைப்பின் பிரிவு 46(2))
❖ அமைச்சரவை அமைச்சர்களை நீக்குவதற்கான கட்டுப்பாடுகள் - எந்தவொரு அமைச்சரவை அமைச்சர், அமைச்சரவை அல்லாத அமைச்சர் அல்லது பிரதி அமைச்சரையும் நியமிக்கும் போது அல்லது பதவியிலிருந்து நீக்கும் போது பிரதமரின் ஆலோசனையின் பேரில் ஜனாதிபதி செயல்பட வேண்டும். (19வது திருத்தத்தின் பிரிவு 9, அரசியலமைப்பின் 43(2), 44(1), 45(1) மற்றும் 46(3)(ஏ)).
❖ பாராளுமன்றத்தை கலைப்பதற்கான ஜனாதிபதியின் கால அவகாசம் 1 வருடத்தில் இருந்து நான்கரை வருடங்களாக நீடிப்பு.
❖ பாராளுமன்றத்தின் ஆயுட்காலம் 6 ஆண்டுகளில் இருந்து 5 ஆக குறைக்கப்பட்டது (19வது திருத்தத்தின் சரத்து 15, அரசியலமைப்பின் பிரிவு 62(2)).
❖ சட்டத்தால் வழங்கப்பட்ட தகவல்களை அணுகுவதற்கான உரிமையைச் சேர்த்தல் (19வது திருத்தத்தின் பிரிவு 2, அரசியலமைப்பின் பிரிவு 14A).
❖ இரட்டைக் குடியுரிமை - திருத்தத்தின்படி இரட்டைக் குடியுரிமை பெற்றவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு தகுதியற்றவர்கள்.

**முடிவுரை (2 புள்ளிகள்)**

18வது மற்றும் 19வது திருத்தங்கள் 1978 அரசியலமைப்பின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட இலங்கையின் ஜனாதிபதி முறையின் பரிணாம வளர்ச்சியின் இரண்டு கட்டங்களை பிரதிநிதித்துவப்படுத்தியது. முன்னர் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதற்கு வலுவான வாதம் இருந்தது. ஆனால் 18வது திருத்தம் அந்த அணுகுமுறைக்கு எதிராகச் சென்று ஜனாதிபதியின் அதிகாரங்களை மேம்படுத்தியது. சில ஆண்டுகளின் பின்னர் ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைப்பதற்கான வாதம் மீண்டும் உயிர்ப்பிக்கப்பட்டது. 19 வது திருத்தம் அதன் விளைவாகும். எவ்வாறாயினும் 19 வது திருத்தம் குறுகிய காலத்திற்கு நடைமுறையில் இருந்தது. 2020ம் இல் அது இல்லாதொழிக்கப்பட்டது. நிறைவேற்று ஜனாதிபதி முறைமை இலங்கையின் அரசியலில் தீர்க்கப்படாத பிரச்சினையாக தொடர்வதையே இது காட்டுகிறது.

## பகுதி III

**8. (i). ஐக்கிய அமெரிக்க சமஸ்டி அரசாங்க முறையில் மத்திய அரசாங்கத்திற்கு உரித்தாகும் அதிகாரங்களை சுருக்கமாக விபரிக்குக. (10 புள்ளிகள்)**

**(ii). பிரித்தானியாவினுடைய ஒற்றையாட்சி அரசாங்க மாதிரி அன்மைக்காலங்களில் மாற்றத்திற்கு உள்ளாகியிருக்கும் விதத்தினை எடுத்துக் காட்டுக. (10 புள்ளிகள்)**

**(i). ஐக்கிய அமெரிக்க சமஸ்டி அரசாங்க முறையில் மத்திய அரசாங்கத்திற்கு உரித்தாகும் அதிகாரங்களை சுருக்கமாக விபரிக்குக. (10 புள்ளிகள்)**

**நோக்கம்:**

இந்த வினாவானது மத்திய அரசின் அதிகாரங்களுடன் விசேடமாகத் தொடர்புபடுத்தி அமெரிக்காவின் சமஸ்டி முறைமை பற்றிய மாணவர்களின் அறிவை மதிப்பிட முயல்கிறது.

**உள்ளடக்கம்:**

- ஐக்கிய அமெரிக்காவில் ஒரு சமஸ்டி அரசாங்கம் உள்ளது. சட்டமியற்றுதல், நிறைவேற்றுதல் மற்றும் நீதித்துறை அதிகாரங்கள் மத்திய அரசு மற்றும் பிராந்திய அரசுகளுக்கு இடையே பகிர்ந்து அளிக்கப்பட்டிருக்கின்றன. இந்த அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டாலும் ஐக்கிய அமெரிக்காவின் ஒரு பலமான மத்தியையும் ஒரு பலமான மாநில அரச முறைமையையும் சமஸ்டி கட்டமைப்பிற்குள் நிர்வகிப்பதற்கு அரசியலமைப்பின் மூலம் மத்திய அரசுக்கு பரந்த அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

- அரசியலமைப்பின் சரத்து I (பிரிவு 8) சமஸ்டி அரசாங்கத்திற்கு சொந்தமான குறிப்பிட்ட விசேட அதிகாரங்களை விவரிக்கிறது. இந்த அதிகாரங்கள் "பட்டியலிடப்பட்ட அதிகாரங்கள்" என்று குறிப்பிடப்படுகின்றன. பொதுவாக சமஷ்டி சட்டங்களின் மேலாதிக்கம், போர், பாதுகாப்பு தொடர்பான பொறுப்புகள், பிராந்தியங்களுக்கு இடையேயான ஒழுங்கு விதிகள், சர்வதேச வர்த்தகம், வரிவிதிப்பு மற்றும் செலவுகளை ஒழுங்குபடுத்துதல் போன்ற அதிகாரங்கள் மத்திய அரசாங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ளன.

- அதன்படி அரசியலமைப்பு சமஸ்டி அரசாங்கத்தின் சட்டமன்ற, நிர்வாக மற்றும் நீதித்துறை அதிகாரங்களை வெளிப்படையாக பட்டியலிடுகிறது. அவை பின்வருமாறு

  i. வரிகளை வசூலிக்கவும், கடன்களை செலுத்தவும், அமெரிக்காவின் சார்பாக கடன் வாங்கவும், அமெரிக்காவின் பொதுவான பாதுகாப்பு மற்றும் பொது நலனுக்காக வழங்கவும் அதிகாரம் கொண்டுள்ளது.

  ii. வெளிநாடுகளுடனும், யூனியன்களுடனும், இந்திய பழங்குடியினருடனும் வர்த்தகத்தை ஒழுங்குபடுத்துவதற்கு அதிகாரம் கொண்டுள்ளது.

  iii. பணத்தை அச்சிடுதல், பணத்தின் மதிப்பை ஒழுங்குபடுத்துதல், எடைகள் மற்றும் அளவீடுகளின் தரநிலையை சரிசெய்தல் போன்றவற்றை மேற்கொள்வதற்கு அதிகாரம் கொண்டுள்ளது.

iv. ஐக்கிய அமெரிக்காவின் பத்திரங்கள் மற்றும் நாணயங்களை போலியாக மாற்றுவதற்கு எதிராக தண்டனையை வழங்குவதற்கான அதிகாரம் கொண்டுள்ளது.

v. தபால் நிலையங்களை நிறுவுதல்.

vi. அறிவியல் மற்றும் பயனுள்ள கலைகளின் முன்னேற்றத்தை ஊக்குவிக்க ஆசிரியர்கள் மற்றும் கண்டுபிடிப்பாளர்களுக்கு அந்தந்த எழுத்துக்கள் மற்றும் கண்டுபிடிப்புகளுக்கான பிரத்தியேக உரிமையைப் பாதுகாத்தல்.

vii. உச்ச நீதிமன்றத்தை விட கீழான தீர்ப்பாயங்களை அமைத்தல்.

viii. கடற்கொள்ளைகள், பெருங்கடலில் செய்யப்படும் குற்றங்கள் மற்றும் சர்வதேச சட்டங்களுக்கு எதிரான குற்றங்களை வரையறுத்து தண்டனை வழங்குதல்.

ix. நிலம் மற்றும் கடலைக் கைப்பற்றுவது தொடர்பான போர்களை அறிவிக்கவும், விதிகளை உருவாக்கவும் அதிகாரம் கொண்டிருத்தல்.

x. படைகளை தரம் உயர்த்தவும் அவற்றுக்கு ஆதரவளிக்கவும் அதிகாரம் கொண்டிருத்தல்.

xi. கடற்படையை பராமரித்தல்.

xii. யூனியனின் சட்டங்களைச் செயல்படுத்த, கிளர்ச்சிகளை நசுக்க மற்றும் வெளிநாட்டு படையெடுப்புகளைத் தடுக்க அதிகாரம் கொண்டிருத்தல்.

- இவ்வாறு அமெரிக்கா பிராந்திய அரசாங்கங்களுக்கு சுயாட்சியுடன் கூடிய ஒரு சமஸ்டி அரசியலமைப்பினைக் கொண்டிருந்தாலும் அமெரிக்க அரசியலமைப்பு அதன் சமஸ்ட்டிக் கொள்கைகளுக்கு பாதகமில்லாமல் பலம் வாய்ந்த மத்திய அரசாங்கத்தையும் உருவாக்கியுள்ளது.

**(ii). பிரித்தானியாவினுடைய ஒற்றையாட்சி அரசாங்க மாதிரி அன்மைக்காலங்களில் மாற்றத்திற்கு உள்ளாகியிருக்கும் விதத்தினை எடுத்துக் காட்டுக. (10 புள்ளிகள்)**

நோக்கம்:

இவ்வினாவின் நோக்கம் பிரித்தானிய அரசாங்கத்தினுடைய ஒற்றையாட்சி இயல்பின் அண்மைக்கால மாற்றத்தைப் பற்றிய மாணவர்களின் புரிதலை மதிப்பிடுவதாகும்.

**உள்ளடக்கம்:**

- ஐக்கிய இராச்சியம் இங்கிலாந்து, ஸ்கொட்லாந்து, வேல்ஸ் மற்றும் வட அயர்லாந்து ஆகிய நான்கு உப -தேசிய அலகுகளை உள்ளடக்கியிருந்தாலும் அது ஒரு ஒற்றையாட்சி மற்றும் மத்தியமயப்படுத்தப்பட்ட அரசாங்க முறையைக் கொண்டுள்ளது. இங்கிலாந்தின் அரசியல் மற்றும் இராணுவ மேலாதிக்கத்தின் விளைவாக அவை ஐக்கிய இராச்சியம் ஆனது.

- இங்கிலாந்து ஒரு மத்தியமயப்படுத்தப்பட்ட அரசாக இருந்தாலும் அது அரசியல் ரீதியாக ஒருங்கிணைக்கப்பட்ட அரசாக இருக்கவில்லை. ஸ்கொட்லாந்து, வேல்ஸ் மற்றும் வட அயர்லாந்தில சுதந்திரத்திற்கான தேசியவாத இயக்கங்கள் இருந்தன. பிராந்திய தேசியவாதத்தின் எழுச்சி காரணமாக பிரித்தானியாவின் அரசியல் முறை ஒரு ஒற்றையாட்சி அரசில் இருந்து அரைகுறை சமஸ்டி அரசாக மாற்றப்பட்டது. இது ஸ்கொட்லாந்து, வேல்ஸ் மற்றும் வட அயர்லாந்தில் வெவ்வேறு அளவிலான

பிராந்திய சுயாட்சியை அனுபவிக்க உதவுகிறது. பிரித்தானிய அரசியல் முறையில் இந்த பெரிய மாற்றம் 1998 இல் நிகழ்ந்தது.

- ஸ்கொட்லாந்து, வேல்ஸ் மற்றும் வட அயர்லாந்திற்கான அதிகாரப் பகிர்வு இங்கிலாந்தின் ஒற்றுமையையோ அல்லது வெஸ்ட்மின்ஸ்டர் பாராளுமன்றத்தின் இறையாண்மையையோ பாதிக்காது. இருப்பினும் அரசியல் யதார்த்தங்கள் இங்கிலாந்தில் அரைகுறை சமஸ்டி முறையின் வளர்ச்சி இடம் பெறுவதானை வெளிக்காட்டுகின்றன.

- எனவே பிரித்தானியா இன்று சமச்சீரற்ற பரவலாக்கப்பட்ட அரசியல் முறையாகக் காணப்படுகின்றது. இது இங்கிலாந்துடன் அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்ட ஸ்கொட்லாந்து, வேல்ஸ் மற்றும் வட அயர்லாந்து ஆகிய மூன்று அரசாங்கங்களைக் கொண்டுள்ளது. பிரித்தானிய பாராளுமன்றம் முழுமையான இறையாண்மையைத் தக்க வைத்துக் கொண்டாலும் ஸ்கொட்டிஸ் பாராளுமன்றம், வேல்ஸ் மற்றும் வட அயர்லாந்தின் சட்டமன்றங்கள் 1999ம் ஆண்டு அதிகாரப் பகிர்வுக்குப் பின்னர் பல்வேறு அளவிலான சட்டமியற்றும் அதிகாரங்களைப் பெற்றுள்ளன.

- அதிகாரப்பகிர்வு மூலம் மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகள் சமச்சீர் அல்லது சமமானவை அல்ல. எனவே பகிர்ந்தளிக்கப்பட்ட மூன்று சட்டமியற்றும் அமைப்புகளின் அதிகாரங்கள் இயல்பிலும் நோக்கத்திலும் வேறுபடுகின்றன. வேல்ஸ் மற்றும் வட அயர்லாந்தின் சட்டசபைகளின் அதிகாரங்களை விட ஸ்கொட்டிஸ் பாராளுமன்றம் அதிக அதிகாரங்களைக் கொண்டுள்ளது. அலகுகளுக்கிடையே பகிர்ந்தளிக்கப்பட்ட அதிகாரத்தின் இந்த சமமற்ற பங்கீடு 'சமச்சீரற்ற அதிகாரப் பகிர்வு' என்று அழைக்கப்படுகிறது.

- இவ்வாறு கடந்த காலத்தில் ஒரு ஒற்றையாட்சி மற்றும் மத்தியமயப்படுத்தப்பட்ட அரசாக இருந்த இங்கிலாந்து தற்போது பல்தேசிய சமூகமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. எனவே பிரித்தானியப் பாராளுமன்றம் ஒரு அதிகாரப்பகிர்வு அரசியல் முறைமையை நிறுவியுள்ளது, இது பாரம்பரிய ஒற்றையாட்சி அரசியலமைப்பு மாதிரியிலிருந்து விலகுவதனைக் காட்டுகின்றது. இது (அ) பிரித்தானிய சமூகத்தின் இன மற்றும் கலாச்சார பன்முகத்தன்மை மற்றும் (ஆ) அந்த இன பன்மைத்துவத்தை பிரதிபலிக்கும் வகையில் ஒற்றையாட்சி அரசை சீர்திருத்த வேண்டியதன் அவசியத்தையும் அங்கீகரிக்கிறது.

**9. (I). பொதுக் கொள்கையினை கற்பது ஏன் முக்கியத்துவம் பெறுகின்றது? (05 புள்ளிகள்)**

**(II). பொதுக் கொள்கை செயல்முறையில் சட்டத்துறையின் வகிபங்கு மற்றும் சிவில் சமூகத்தின் வகிபங்கினை விளக்குக? (15 புள்ளிகள்)**

**(I). பொதுக் கொள்கையினை கற்பது ஏன் முக்கியத்துவம் பெறுகின்றது? (05 புள்ளிகள்)**

**நோக்கம்** :- நவீன அரசுகளில் மற்றும் ஜனநாயகத்தில் பொதுக்கொள்கை கற்கையின் முக்கியத்துவம் என்ன என்பது தொடர்பாக பரீட்சார்த்திகள் கொண்டிருக்கும் புரிதலை மதிப்பிடுவதே இவ்வினாவின் நோக்கமாகும்.

நமது நாளாந்த வாழ்வில் நாம் எதிர்கொள்கின்ற பல பிரச்சனைகளுக்கு நிரந்தரமான தீர்வு அவசியமாக உள்ளது. பிரஜைகளைப் பாதிக்கின்ற பொதுப் பிரச்சினைகளுக்கு வினைத்திறன் மிக்க மற்றும் உறுதியான பொதுக் கொள்கைகள் மூலம் தீர்வு எதிர்பார்க்கப்படுகின்றது. பொதுக் கொள்கைகள் என்பவை பொது பிரச்சனைக்கான தீர்வினை வழங்குவதற்காக அரசாங்கத்தால் உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுவதாகும். பொதுக்கொள்கையினை கற்பதானது பொதுப்பிரச்சனைகள் எவை, பொதுக்கொள்கைகள் அவற்றை எவ்வாறு தீர்க்க முற்படுகின்றன, எவ்வாறு எத்தகைய கொள்கைகள் உருவாக்கி நடைமுறைப்படுத்தப்படுகின்றன, அவற்றின் வெளியீடுகள், குறைபாடுகள், எவ்வாறு சிறந்த பொதுக்கொள்கைகள் உருவாக்கப்பட்டு வினைத்திறன் மிக்க வகையில் நடைமுறைப்படுத்த முடியும் என்பது குறித்த தெரிவினைப் பெற்றுக்கொள்ள முக்கியமானதொரு கற்கையாக காணப்படுகின்றது.

பொதுக்கொள்கையினை கற்பதன் முக்கியத்துவத்தினை மூன்று அடிப்படையில் முன் வைக்கலாம்.

**விஞ்ஞான ரீதியான நோக்கு :-** பொதுக்கொள்கையினை கற்பதன் மூலம் பொதுக்கொள்கையினை அல்லது கொள்கை செயன்முறையினை பாதிக்கும் காரணிகளையும் அவற்றின் விளைவுகளையும் எம்மால் விளங்கிக் கொள்ள முடியும். பொதுக்கொள்கைகள் பொதுவாக பல்வேறு சமுதாயங்கள் ஊடாட்டம் கொள்ளும் சமூகத்தின் செல்வாக்குக்கு உட்படுவதுடன் அத்தகைய சமூகத்திலேயே அவை அமுல்படுத்தப்படுகின்றன. பொதுக் கொள்கை செயல்முறையில் அரசு, சமூகம் மற்றும் சந்தை சக்திகள் தொடர்ச்சியான தொடர்பினை கொண்டிருப்பதுடன் அவை கொள்கைகள் மீது நிச்சயமான பரஸ்பர தாக்கங்களையும் ஏற்படுத்துகின்றன. பொதுக்கொள்கைகளை விஞ்ஞான ரீதியாக கற்பதன் மூலம் மேற்கூறிய குழப்பகரமான உறவு நிலையினை விளங்கிக் கொள்ள முடியும். அரசு, சமூக மற்றும் சந்தை சக்திகள் தொடர்புபடும்போது பன்முகப் பிரச்சினைகளை தீர்க்க முடிவதுடன் இம்மூன்று சக்திகளும் பொதுப்பிரச்சனைகளுக்கு தீர்வினை தேடுவதில் செல்வாக்கு செலுத்துவதனையும் பரஸ்பரம் தங்கியிருப்பதனையும் அவதானிக்க முடியும்.

**அரசியல் ரீதியான நோக்கு :-** பொதுப்பிரச்சினைகளை தீர்ப்பதில் எந்தெந்த மட்டங்களில் அரசாங்கம் தலையீடு செய்கின்றது என்பதனை அடையாளம் காணவும் விளங்கிக்கொள்ளவும் இது உதவுகின்றது. நவீன அரசுகளில் அதிகாரம் பரவலாக்கப்பட்டிருந்தாலும் அவை வேறுபட்ட மட்டங்களில் அரசாங்கக் கட்டமைப்பினை ஸ்தாபித்துள்ளன. ஒவ்வொரு மட்டத்திலும் ஒழுங்குபடுத்தப்பட்ட வகையில் பொதுக்கொள்கைகள் அமுல்படுத்தப்படுகின்றன. அந்தவகையில் பொதுக்கொள்கையினை கற்பது அரசாங்கத்தின் வேறுபட்ட மட்டங்கள், செயற்பாட்டாளர்கள், முகவர் நிறுவனங்கள், அவை பொதுக்கொள்கை செயன்முறையில் வகிக்கும் பாத்திரம், விடயதானங்கள் என்பவற்றினை விளங்கிக் கொள்ள உதவுகின்றது.

**நடைமுறை நோக்கு :-** எம்மில் பலருக்கு உலகினை நல்ல நிலைக்கு மாற்ற வேண்டும் என்ற கனவு உண்டு. ஆனால் அது மிகவும் சவால் மிக்கது. அத்தகைய மாற்றங்களை அமுல் செய்ய எத்தகைய திறமைகள் எமக்கு அவசியம், அதனை எங்கு ஆரம்பிப்பது என்பன சவால் மிக்க விடயங்களாகும். அந்த வகையில் பொதுக்கொள்கையினை கற்பது எம்மை அறிவால், திறன்களால் மற்றும் விழுமியங்களால் சக்திப்படுத்துவதுடன் அவை சிவில் செயற்பாட்டுக்கு அல்லது பங்கேற்புக்கு பிரதான கருவிகளாகக் காணப்படுகின்றன எனலாம். அவை பொதுப்பிரச்சினைகளை அடையாளம் காண, பகுப்பாய்வு செய்ய, சாத்தியமான தீர்வுகளைத் தேட, அதற்கான அழுத்தங்களை பிரயோகிக்க உதவும்.

**(II). பொதுக் கொள்கை செயல்முறையில் சட்டத்துறையின் வகிபங்கு மற்றும் சிவில் சமூகத்தின் வகிபங்கினை விளக்குக? (15 புள்ளிகள்)**

**நோக்கம்** :- பொதுக்கொள்கை செயல்முறையில் சட்டத்துறை மற்றும் சிவில் சமூகத்தின் வகிபங்கு தொடர்பாக பரீட்சார்த்திகள் கொண்டிருக்கும் அறிவினை மதிப்பீடு செய்ய இவ்வினா முற்படுகின்றது.

**(1) சட்டத்துறையின் வகிபங்கு**

**அறிமுகம் (02 புள்ளிகள்)**

நவீன அரசுகளில் சட்டத்துறையே பொதுக்கொள்கை உருவாக்கத்தில் பிரதான நிறுவனமாக காணப்படுகின்றது. பொதுக்கொள்கை செயல்முறைக்கு சிவில் சமூகம் உதவுகின்றது. மக்கள் இறைமையூடாக கிடைத்த அதிகாரத்தினைப் பயன்படுத்தி சட்டத்துறை பொதுக்கொள்கை உருவாக்க செயற்பாட்டில் ஈடுபடுகின்றது. சட்டத்துறை சட்டங்களை உருவாக்குவதனையே பொதுக்கொள்கைகள் என்ற பெயரில் மேற்கொள்கின்றது. சிவில் சமூக அமைப்புக்கள் பொதுக்கொள்கை தொடர்பான பரப்புரை மூலம் மக்களை ஒன்று திரட்டல், ஒழுங்குபடுத்தப்பட்ட வகையில் அழுத்தம் கொடுத்தல் போன்ற உபாயங்கள் ஊடாக பொதுக்கொள்கை மீது செல்வாக்கு செலுத்துகின்றன.

சட்டத்துறையில் பொதுக்கொள்கைகளை அமுல்படுத்துவதற்கான நிதியினை ஒதுக்கீடு செய்தல், கொள்கை அமுலாக்கச் செயன்முறையினை கண்காணித்தல் அல்லது மேற்பார்வை செய்தல் மற்றும் கொள்கைகளை முடிவுறுத்தல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுகின்றன. பொதுக்கொள்கை சிறப்பாக உருவாக்கப்பட்டு அவை சரியான முறையில் அமுல்படுத்தப்படாவிட்டால் அது தொடர்பான விமர்சனங்கள் சட்டத்துறை மற்றும் அதன் உறுப்பினர்களை நோக்கியே முன்வைக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கதாகும். சட்டத்துறையால் மேற்கொள்ளப்படும் இத்தகைய செயல்பாடுகளை பின்வரும் சட்டத்துறை பணிகள் ஊடாக மேலும் விளங்கிக் கொள்ள முடியும்.

**சட்டத்தினை உருவாக்குதல்** :- இப்பணியினை மக்கள் வழங்கிய ஆணையினை அடிப்படையாகக் கொண்டு மக்கள்/ பொது பிரச்சினைகளை தீர்க்கும் நோக்குடன் மேற்கொள்கின்றது. சட்டவாக்க அதிகாரம் அரசின் இறைமை அதிகாரத்தில் இருந்து கிடைக்கப்பெறுகின்றது.

**பிரதிநிதித்துவம் செய்தல்** :- சட்டசபை உறுப்பினர்கள் பொதுக்கொள்கை உருவாக்க செயன்முறையில் பிரஜைகளின் தேவைகள், நலன்கள் மற்றும் விருப்பங்களை பிரதிநிதித்துவம் செய்வர். சட்டசபை உறுப்பினர்கள் ஆட்சியில் இருக்கும் அரசாங்கத்திடம் பொதுக்கொள்கை உருவாக்கம் தொடர்பாக பேரம் பேசுவர். மக்கள் நலன்களை பாதிக்கும் கொள்கைகளை எதிர்த்தல், விமர்சித்தல், மக்களுக்கு அறிவூட்டல் போன்ற பணிகளிலும் ஈடுபடுவர்.

**கொள்கைகளுக்கு சட்ட அந்தஸ்தினை வழங்குதல்** :- சட்டசபை ஒரு குறிப்பிட்ட பொதுப்பிரச்சினையினை சரியாக அடையாளம் கண்டு, அதனை ஆராய்ந்து, நிபுணர்களின் உள்ளீடுகள்/ தகவல்களைப் பெற்று அதற்கு கொள்கைகள் மற்றும் சட்ட வடிவத்தினை வழங்கி அங்கீகரித்தல், அமுல்படுத்தல் போன்ற பணிகளை மேற்கொள்கின்றன. பொதுக்கொள்கைகளுக்கு சட்ட வடிவத்தினை/ அங்கீகாரத்தினை வழங்கும் அதிகாரத்தினை சட்டசபையானது மக்கள் ஆணையிலிருந்து பெறுகின்றது. அதன் மூலம் பொதுக்கொள்கை ஒன்று இறுதி வடிவத்தினைப் பெறுகின்றது.

**நிதி ஒதுக்கீடு** :- பொதுக்கொள்கைகள் ஊடாகப் பொதுப்பிரச்சனைகளை தீர்ப்பதற்கு நிதி பெரிதும் அவசியமாகும். அந்தவகையில் நாட்டின் பொது நிதிக்கு பொறுப்பான நிறுவனமாக சட்டசபை காணப்படுவதால், பொதுக்கொள்கை அமலாக்கத்துக்கு அவசியமான நிதியினை ஒதுக்கீடு செய்யும் அதிகாரம் சட்டசபைக்கு உண்டு. பொது நிதி தொடர்பான நம்பிக்கைப் பொறுப்பு சட்டமன்றத்திடம் காணப்படுகின்றது. அரசாங்கத்தின் நிதிக்கொள்கை மற்றும் பாதீட்டு செயன்முறைகள் ஊடாக பொதுக்கொள்கை அமுலாக்கத்துக்கான நிதி ஒதுக்கீடு செய்யப்படுகின்றது.

**மேற்பார்வைப்பணி** :- பொதுக்கொள்கை அமுலாக்கம், அவற்றுக்கு செலவு செய்யப்பட்ட நிதியின் வினைத்திறன் அரசாங்கத்தின் நிகழ்ச்சித்திட்டங்களை மேற்பார்வை செய்தல்/ கண்காணித்தல், மீளாய்வு செய்தல் என்பன சட்டத்துறையின் மேற்பார்வைப் பணிகளாகும். அத்துடன் மேற்கூறியவாறு அரசாங்கத்தின் கொள்கைகள்/ சட்டங்கள்/ நிதி செலவீனம் என்பவற்றை மீளாய்வு செய்வதன் ஊடாக அரசாங்கத்தின் செயற்பாடுகள் வெளிப்படைத்தன்மை கொண்டதாக, பொறுப்புடன், தொடர்ச்சித்தன்மையுடன் மற்றும் இருக்கின்ற சட்ட ஒழுங்குகளுக்கு இணங்க காணப்படுகின்றனவா என்பதனை உறுதி செய்யவும் இத்தகைய மேற்பார்வை பெரிதும் அவசியமாகும்.

தற்கால உலகில் பொதுக் கொள்கை உருவாக்கத்தில் சட்டத்துறையில் வகிபங்கு குறைந்து செல்லும் ஒரு போக்கினையும் அவதானிக்க முடியும். இத்தகைய போக்குக்கு பல காரணங்கள் செல்வாக்கு செலுத்துகின்றன.

**(1) அரசியல் கட்சி முறையின் விரிவாக்கம்** :- கட்சிமுறை விரிவாக்கத்தின் காரணமாக வாக்காளர்கள் ஒரு சில (குறுகிய நலன்களை அடிப்படையாக கொண்ட) குறிப்பிட்ட கொள்கைகளை உருவாக்குவதற்காக அரசியல் கட்சிகளுக்கு வாக்களிக்கின்றார்கள். தேர்தல் பிரச்சாரங்களில் போது அரசியல் கட்சிகள் வழங்கும் வாக்குறுதிகளும் இதற்கு காரணமாகும். இதனால் சட்டசபையில் பெரும்பான்மை ஆசனங்களையும் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட நிகழ்ச்சி நிரல்களையும் கொண்டிருக்கும் கட்சிகள் கொள்கை உருவாக்க செயல்முறையில் ஆதிக்கம் செலுத்துகின்றன.

சமூகப் பிரச்சினைகள் மிகவும் குழப்பம்/ சிக்கல் நிறைந்ததாக காணப்படுவதனால் பொதுக்கொள்கைகளை செம்மைப்படுத்துவதற்கு சட்டத்துறைக்குள்ள கொள்திறனும் குறைவடைந்துள்ளது. இதன் மூலம் சட்டத்துறையின் வகிபங்கு/ பணிகள் கொள்கைகள் நிபுணர்களால் மேற்கொள்ளப்படுகின்றது. ஆகவே சட்டத்துறை கொள்கை நிபுணர்கள் மற்றும் பணியகவர்க்கம் உருவாக்கிய பொதுக்கொள்கைகளுக்கு அனுமதி வழங்கும் இறப்பர் முத்திரையாக சட்டத்துறை மாறியுள்ளது.

சட்டத்துறை உறுப்பினர்கள் அல்லது கொள்கை வகுப்பாளர்கள் கொள்கை தொடர்பான பரந்த திசைகளை காட்டும் பணியினை மாத்திரமே மேற்கொள்கின்றனர். இறுதியில் எது நடைமுறைப்படுத்தப்படுகின்றதோ அதுவே பொதுக்கொள்கையாக மாறுகின்றது. பொதுக்கொள்கைகளை அமுலாக்கம் செய்கின்ற பணியினை மேற்கொள்ளும் பணியகவர்க்கத்தினரும் பொதுக்கொள்கைகளை செம்மைப்படுத்துவதில் செல்வாக்கு செலுத்துகின்றனர். இதனை பொதுக் கொள்கை உருவாக்கம் மற்றும் அமுலாக்கம் என்பவற்றில் தெளிவாக காண முடியும்.

அந்தவகையில் தற்காலத்தில் கொள்கை அமுலாக்கத்துக்கு பொறுப்பான நிறைவேற்றுத்துறையும் பொதுக்கொள்கை உருவாக்கத்தில் ஆதிக்கம் செலுத்துவதானது சட்டத்துறையின் வகிபங்கினை

மட்டுப்படுத்தியுள்ளது. மேலும் பொதுக்கொள்கையின் தன்மையினை தீர்மானிப்பதிலும் நிறைவேற்றுத்துறை இன்று ஆதிக்கம் செலுத்துகின்றது.

**சிவில் சமூகத்தின் வகிபங்கு**

சிவில் அமைப்புகள் என அறியப்பட்ட சிவில் சமூக அமைப்புக்கள் சமூகப் பிரச்சினைகள் தொடர்பாக பிரஜைகள் ஒன்றுக்கூடி பேசுவதற்கும், விவாதிப்பதற்கும், அதற்கான தீர்வுகளை தேடுவதற்குமான அவகாசத்தினை வழங்கியுள்ளது. இன்று சிவில் அமைப்புகள் பல்வேறுப்பட்ட சமூகப் பிரச்சினைகளை தீர்ப்பதில் பிரஜைகளுடன் இணைந்து கூட்டிணைந்த அணுகுமுறையினை கையாளுகின்றன. பிரஜைகள் செயலூக்கத்துடன் ஈடுபடும் அமைப்புக்களை சிவில் அமைப்புகள் என குறிப்பிடலாம். இவை கொள்கை உருவாக்க செயன்முறையில் முக்கிய பங்குதாரர்களாக காணப்படுகின்றன. சிவில் சமூக அமைப்புக்கள் கொள்கை செயல்முறையின் ஒவ்வொரு சட்டத்திலும் பங்கேற்கின்றார்கள்.

அண்மைக்காலங்களில் சிவில் அமைப்புகளின் அரசியல் பங்கேற்பு போக்குகள், கூட்டுச் செயல்பாடுகள் மற்றும் பொதுப் பிரச்சினைகள் அல்லது பொதுக்கொள்கை தொடர்பாக மக்களை அணிதிரட்டல் என்பன வெளிப்படையாக இடம்பெறுகின்றன. உலகம் முழுவதும் இன்று புதிய வடிவிலான சிவில் செயற்பாடுகள் எழுச்சி பெற்றுள்ளன. அவை பெரிய அளவில் பங்கேற்புடன் கூடிய முறைசாரா, உள்ளூர் சார்ந்து, பிரச்சனைகளை மையப்படுத்தியதாக பரந்த வலை பின்னல்களை அடிப்படையாகக் கொண்டதாக காணப்படுகின்றன.

இன்று அரசியல் சமூகம் ஒன்றில் வாழும் பிரஜைகள் அல்லது பொது அமைப்புக்களில் அங்கத்தவராக இருக்கும் பிரஜைகள் வெறுமனே பார்வையாளர்களாக செயலூக்கமற்று இருக்க விரும்புவதில்லை. அவர்கள் தீர்மானம் எடுத்தல் செயன்முறையில், கொள்கை வகுப்பில் அதன் வெளியீடுகளை தீர்மானிப்பதில் துடிப்புடன் செயல்படுவதற்கு அதிகம் ஆர்வம் காட்டுகின்றார்கள். அந்தவகையில் பொதுக்கொள்கை செயல்முறையில் சிவில் சமூகத்தின் வகிபங்கினை பல வடிவங்களில் காணமுடியும்.

**அவற்றின் பணிகளை பின்வருமாறு வரையறுக்கலாம்.**

பொது மக்களின் பிரச்சினைகளை அரசியல் மற்றும் கொள்கை நிகழ்ச்சி நிரலுக்கு கொண்டு வருதல் மற்றும் சமூகத்தினை பாதிக்கும் சமூகப் பிரச்சினைகளை கொள்கை உருவாக்க சபைகளுக்கு கொண்டு வருவதில் இவர்களின் பங்கு முக்கியமானது. இதற்காக கோரிக்கைகள் விடுத்தல், ஆர்ப்பாட்டம், பரப்புரை மற்றும் ஆதரித்து பிரச்சாரம் செய்தல் போன்ற உத்திகளை கையாளுகின்றன. சம்பந்தப்பட்ட பங்குதாரர்கள் தனிப்பட்டவர்கள் மற்றும் நிறுவனங்களுக்கிடையில் கூட்டங்களை ஒழுங்கு செய்து அவற்றை வசதிப்படுத்தல், அதன் ஊடாக பொதுப்பிரச்சனைகளுக்கு தீர்வு காண முயற்சித்தல், வேறுபட்ட சமூகங்களின் மனக்குறைகளை ஒன்று திரட்டுவதில் அவற்றைக் கொள்கை செயன்முறைக்கு கொண்டு செல்வதில் சிவில் அமைப்புகள் செல்வாக்கு செலுத்துகின்றன.

அரசாங்கத்தால் தீர்க்கப்படாத பிரச்சனைகளை தீர்ப்பதற்காக சம்பந்தப்பட்ட தரப்பினரைக் கொண்டு வட்டமேசைக் கூட்டங்களை நடத்தி சகலரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்மானங்களுக்கு வசதி அளிக்கின்றனர்.

அரசாங்கத்தினை கண்காணித்தல் :- சிவில் சமூக அமைப்புக்கள் அரசாங்கத்தின் செயல்பாடுகளை கண்காணிப்பதுடன் அது தொடர்பாக மக்களுக்கு அறிவூட்டி மாற்று செயல்பாடுகள் குறித்தும் ஆராய்கின்றனர். இதனை மக்களுடன் கூட்டுணைந்து மேற்கொள்கின்றன. இதன் மூலம் மக்கள் நலக்கொள்கைகளுக்கு அழுத்தம் கொடுக்கின்றன.

குடியுரிமையின் பிரயோகத்தினை மற்றும் சிவில் கலாச்சாரத்தினை தூண்டுதல் :- இவ்வமைப்புகள் சிவில் சமூக செயற்பாட்டுக்கு அவசியமான விழுமியங்களை, நெறிமுறைகளை, சூழ்நிலைகளை உருவாக்குகின்றன.

தகவல்களைப் பரப்புதல் :- சிவில் அமைப்புகள் அரசாங்கத்தின் செயல்பாடுகள்/ செலவீனம்/கொள்கைகள்/ சட்டங்கள் தொடர்பாக தகவல்களை திரட்டி அவற்றை பிரஜைகள் மற்றும் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் பகிர்ந்து கொள்வதுடன், அவற்றின் சமூக தாக்கத்தினையும் ஆராய்ந்து வெளிப்படுத்துகின்றன. இச்செயற்பாடுகள் பொதுக்கொள்கைகளை மறுசீரமைக்க வழிசெய்கின்றன.

பொதுக்கொள்கை செயன்முறையில் சிவில் சமூக அமைப்புகளின் மேற்கூறிய வகிபங்கு கொள்கைப் பரப்புரை, மதிப்பீடு மற்றும் பொது மக்களுக்கு கொள்கை தொடர்பான விழிப்புணர்வினை வழங்குதல் என்பவற்றுடன் மட்டுப்படுத்தப்படுகின்றது. ஆயினும் கடந்த சில தசாப்தங்களில் சிவில் அமைப்புகள் மேற்கூறிய கட்டுப்பாடுகளைத் தாண்டி பொதுக்கொள்கை அமுலாக்கத்தின் ஒரு பங்குதாரராக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இதனை நவீன அரசாங்கங்கள் காணமுடியும்.

இதற்குப் பகுதியளவிலான காரணம் என்னவென்றால் இன்றைய அரசாங்கம் பல்வேறு மட்டுப்பாடுகளுக்கு உள்ளாகியுள்ளது. குறிப்பாக மனிதவளம், பௌதீகவளம் மற்றும் நிதி வளத்தினை குறிப்பிட முடியும். இதன் காரணமாக சமூகத்தின் சகல பிரச்சினைகளையும் அரசாங்கத்தால் தீர்க்க முடியாமல் உள்ளது. ஆனால் உலகில் பல நாடுகளில் அரசு சார்பற்ற நிறுவனங்கள் கொள்கை அமுலாக்கத்தின் ஒரு பங்குதாரராக அரசாங்கத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இத்தகைய அரசாங்க, அரசு சார்பற்ற நிறுவனங்களின் கூட்டிணைந்த செயற்பாடுகளை வறுமை ஒழிப்பு, சுகாதாரம், சுற்றாடல் பாதுகாப்பு, காலநிலை மாற்றம் போன்ற விடயங்களில் காண முடியும். சிவில் சமூக அமைப்புக்கள் சமூகத்தில் சாதி, அரசியல், இன, மத, பால்நிலை அடிப்படையில் ஒதுக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகளை கொள்கை செயல்முறைகளை கொண்டு வருவதில் முக்கிய பங்காற்றுகின்றன. அத்தகைய அமைப்புக்கள் நாட்டில் சகல பாகங்களிலும் செயற்படுவதுடன் மிகவும் செல்வாக்கு மிக்கவையாக காணப்படுகின்றன.

சில சிவில் அமைப்புக்கள் அரசாங்கத்தால் தீர்க்க முடியாத உலகப் பிரச்சினைகளை மக்களை அணிதிரட்டி தீர்க்க முற்படுகின்றன. இதற்கு காரணமாக புவி வெப்பமடைதல், கால நிலை மாற்றம், மனித உரிமை மீறல் போன்றவற்றை குறிப்பிடலாம்.

**முடிவுரை** – பரீட்சார்த்திகள் பொதுக்கொள்கை செயன்முறையில் சட்டத்துறை மற்றும் சிவில் சமூக அமைப்புக்களின் வகிபங்கினை ஒப்பீடு செய்து முடிவுரையினை எழுதலாம். உதாரணமாக பொதுக்கொள்கை செயன்முறையில் சட்டத்துறையின் நிலை வலுவிழந்து செல்வதனையும் மாறாக நிறைவேற்றுத்துறை மற்றும் சிவில் சமூக அமைப்புக்கள் ஆதிக்கம் மிக்க சக்திகளாக மாறி வருவதனையும் காண முடிகின்றது. இதற்கு பொதுப்பிரச்சினைகளின் சிக்கலான தன்மை, வளத்தட்டுப்பாடுகள், நாளந்தம் உருவாகி வரும் புதிய சமூகப் பிரச்சினைகள், அதிகரித்து வரும் இன, மத, மொழி, சாதி போன்ற பிரச்சினைகள் மற்றும் அவசர தீர்மானங்களின் அவசியம் போன்ற பல காரணிகள் இதற்கு பங்களிப்பு செய்ய முடியும்.

**10. பின்வரும் தலைப்புக்களில் எதேனும் இரண்டுக்குச் சிறுகுறிப்பு எழுதுக.**

**(I). மோதல் தீர்வு செயன்முறை** **(10 புள்ளிகள்)**

- பொதுவாக மோதல் தீர்வு என்பது ஒரு நீண்ட செயன்முறை ஆகும். ஒரு மோதலின் முழுமையான தீர்வு என்பது கடினமாக இருந்தாலும் மோதலைக் கையாள்வதற்கு ஏனைய வேறு செயன்முறைகள் காணப்படுகின்றன. அவையாவன: (1) முன்னெச்சரிக்கை செய்தல் (2) மோதலைத் தடுத்தல் அல்லது தவிர்த்தல் (3) மோதல் முகாமைத்துவம் (4) மோதல் நிலைமாற்றம் (5) மோதலுக்குப் பின்னரான சமாதானத்தினைக் கட்டியெழுப்புதல் (6) மோதல் தீர்வு என்பனவாகும்.

**(1) முன்னெச்சரிக்கை செய்தல்:**

- இது 1970 மற்றும் 1980களில் வளர்ச்சியடைந்த ஒரு எண்ணக்கருவாகும். இதன் அடிப்படைக் கருத்து யாதெனில் சாத்தியமான மோதல்களை முன்கூட்டியே முன்னெச்சரிக்கை அறிகுறிகளால் அடையாளம் காண முடியும் என்பதாகும். இவ்வாறு ஆரம்ப கட்டத்திலேயே அவற்றை அடையாளங்கண்டு தெரிவிப்பது மோதல்களைக் கையாளுவதற்கான சிறந்த வழியாகும்.

**(2) மோதலைத் தடுத்தல் அல்லது தவிர்த்தல்:**

- மோதல்களைத் தடுப்பதன் நோக்கம் சாத்தியமான அல்லது வளர்ந்து வரும் மோதல்கள், அவற்றிற்கான காரணங்கள், இடங்கள் மற்றும் செயற்பாட்டாளர்களைக் கண்டறிந்து அவை ஏற்படுவதைத் தடுக்க அல்லது மோதல் உருவாகின்ற ஆரம்ப கட்டத்திலேயே அவற்றைத் தீர்க்க நடவடிக்கை எடுத்தலாகும்.
- மோதலின் முன்னெச்சரிக்கை அறிகுறிகளைக் கண்டறிவது மோதலைத் தடுப்பதற்கான ஒரு முக்கியமான உபாயமாகும். மோதலைத் தடுப்பதற்கு இரண்டு அணுகுமுறைகள் காணப்படுகின்றன. அவையாவன (அ) சுமாராகத் தடுத்தல் (ஆ) ஆழமாகத் தடுத்தல் என்பனவாகும்.

**(3) மோதல் முகாமைத்துவம்:**

- மோதல் முகாமைத்துவம் என்பதற்கு இரண்டு அர்த்தங்கள் காணப்படுகின்றன.
- ஒரு மோதலை முழுமையாகத் தீர்ப்பதற்கு நீண்ட காலம் எடுக்குமாதலால் மோதல் முகாமைத்துவம் அதன் வன்முறை மற்றும் அழிவுகரமான விளைவுகளை கட்டுப்படுத்துவதன் மூலம் மோதலின் பரவல் மற்றும் தீவிரத்தை கட்டுப்படுத்த முயல்கிறது. இது மோதலின் பிரதான மூல காரணிகளுக்கு தீர்வுகளைத் தேட முயற்சிப்பதில்லை. இது அடிப்படையில் மோதலை எதிர்மறையான ரீதியிலேயே நோக்குகின்றது. எனவே மோதலின் எதிர்மறைக் கூறுகளைக் கட்டுப்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

- இரண்டாவது அர்த்தம் மோதலை எதிர்மறையாகப் பார்க்கவில்லை. மாறாக முரண்பாடானது மாறுபட்ட மற்றும் பொருந்தாத எதிர்பார்ப்புகளுக்கும் இலக்குகளுக்கும் இடையிலான ஒன்றாகவே காணப்படுகிறது எனக் குறிப்பிடுகின்றது . எனவே, மோதல்களை அமைதியான மற்றும் ஜனநாயக கட்டமைப்பிற்குள் தங்களை வெளிப்படுத்திக் கொள்ள அனுமதிப்பதும் அதன் இறுதித் தீர்வுக்கு வழிவகுக்கும் பாதையில் அதை வழிநடத்துவதும் அவசியமானதாகும். இரண்டு அணுகுமுறைகளும் மோதலைத் தடுக்க முயல்கின்றன.

### (4) மோதல் நிலைமாற்றம்:

- உள்நாட்டு யுத்தங்கள் மற்றும் இன மோதல்கள் போன்ற பாரிய சமூக-அரசியல் மோதல்களுக்கு மோதல் நிலைமாற்றம் மிகவும் பொருத்தமானது. இத்தகைய மோதல்கள் பொதுவாக நீடித்த மற்றும் வன்முறையான இயல்பைக் கொண்டவை ஆகும்.
- இத்தகைய நீடித்த மற்றும் வன்முறை மோதல்களை ஒரு தரப்பின் வெற்றி அல்லது வெறும் சமாதான உடன்படிக்கை மூலம் ஆக்கபூர்வமாக தீர்க்க முடியாது என்றும் மாறாக மோதலுக்குள்ளேயே மோதல் நிலைமாற்றம் செய்வதற்கான செயன்முறை தேவைப்படுகிறது எனவும் மோதல் நிலைமாற்றக் கோட்பாடு கருதுகின்றது.
- பீட்டர் வாலன்ஸ்டீன் என்பவர் மோதல் நிலைமாற்றம் என்பது மோதலின் வரலாற்று செயன்முறையின் மூலம் உருவாக்கப்பட்ட அறிவின் விளைவு என்று எடுத்துக்காட்டுகிறார். எனவே வெற்றிகரமாக மோதலை நிலைமாற்றுவதற்கு (அ) மோதலுக்கான தரப்பினரிடையே (ஆ) மோதலுக்கு வழிவகுக்கும் காரணங்களில் மற்றும் (இ) மோதலின் மூலம் கட்சிகள் அடைய விரும்பும் நோக்கங்களில் மாற்றங்கள் அவசியமாக இடம்பெற வேண்டும். மோதல் நிலைமாற்றம் பல வழிகளில் நடைபெறலாம். அவையாவன (i) செயற்பாட்டாளர்களின் நிலை மாற்றம் (ii) பிரச்சினைகள் மற்றும் நிகழ்ச்சி நிரலில் நிலைமாற்றம் (iii) ஒழுங்கு விதிகளில் நிலைமாற்றம் (iv) கட்டமைப்பு நிலைமாற்றம் என்பனவாகும்.

### (5) மோதலுக்குப் பின்னரான சமாதானத்தினைக் கட்டியெழுப்புதல்:

- இந்த எண்ணக்கருவும் இன மோதல் மற்றும் உள்நாட்டு யுத்தம் போன்ற பாரிய சமூக-அரசியல் மோதல்களுக்கு மிகவும் பொருத்தமானதாகும்.
- ஒரு சமாதான உடன்படிக்கை அல்லது மோதலில் இராணுவ ஈடுபாட்டை முடிவுக்குக் கொண்டுவருதல் போன்றன மோதலைத் தீர்ப்பதற்கான அத்தியாவசிய முன்நிபந்தனைகளை மட்டுமே வழங்கும் என்றும் இதன்பின்னர் மோதல்கள் மீண்டும் நிகழாமல் தடுப்பதில் புதிய சவால்கள் காணப்படுகின்றன என்றும் இது குறிப்பிடுகின்றது.. இரண்டு வகையான சவால்கள் மற்றும் நடவடிக்கைகள் காணப்படுகின்றன. அவையாவன (அ) நீண்ட மற்றும் நடுத்தர கால சவால்கள் மற்றும் கொள்கைகள் (ஆ) குறுகிய கால சவால்கள் மற்றும் கொள்கைகள் என்பனவாகும்.
- இவற்றில் முக்கியமானவை பொருளாதார, சமூக, அரசியல் மீள் கட்டமைப்பு மற்றும் சீர்திருத்தங்கள் ஆகும்.

### (II). இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை தொடர்பான விமர்சனங்கள் (10 புள்ளிகள்)

- இலங்கையின் 1978 அரசியலமைப்பு அதன் ஆரம்ப காலத்திலிருந்தே கடுமையான விமர்சனங்களுக்கு உள்ளானது. அவற்றுள் இலங்கையின் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையின் குறைபாடுகள் தொடர்பாக முக்கியமான விமர்சனங்கள் முன்னிலைப்படுத்தப்பட்டன.
- பெரும்பாலான விமர்சனங்கள் அதன் ஜனநாயகமற்ற அரசியலமைப்பு கட்டமைப்பைப் பற்றியே காணப்படுகின்றன.
- ஜனநாயக ஆட்சி மற்றும் அரசியலை மீண்டும் ஏற்படுத்துவதற்காக 1978 அரசியலமைப்பின் நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிக்க வேண்டும் அல்லது சீர்திருத்த வேண்டும் என்று அரசியல் கட்சிகள், சிவில் சமூகம் மற்றும் பொதுமக்கள் மத்தியில் பரவலான நம்பிக்கை காணப்படுகின்றது.
- முக்கியமான விமர்சனங்களாக பின்வருவன குறிப்பிடப்பட்டன:

(i) சமநிலைத் தலையீடுகள் இல்லாமல் ஒரு தனி நபரிடம் அதிகாரம் குவிந்திருத்தல்.

(ii) நிறைவேற்று ஜனாதிபதி என்பது அரச அதிகாரத்தின் மைய நிறுவனமாகவும் மற்றும் அந்த பதவியை வகிப்பவர் அரசாங்கத்தின் மிகவும் சக்திவாய்ந்த அரசியல் பதவியில் இருப்பவராகவும் காணப்படுகின்றார். நிறைவேற்று ஜனாதிபதி எந்த ஒரு ஜனநாயக ரீதியிலான சமநிலைத் தலையீடுகளுக்கும் உட்படுத்தப்படவில்லை.

(iii) ஜனாதிபதி அரசியல் நிர்வாகத்தின் தலைவராகவும் மற்றும் ஐந்தாண்டு காலத்திற்கு தனித்தேர்தலில் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுபவராகவும் காணப்படுகின்றார். இதுவும் அவர் கொண்டிருக்கின்ற அசாதாரணமான அதிகாரம் மிக்க பதவிக்கு ஆதாரமாக காணப்படுகின்றது.

(iv) அரசியலமைப்பின் 30வது சரத்து ஜனாதிபதியானவர் அரசின் தலைவராகவும் நிறைவேற்றுத்துறையின் தலைவராகவும் அரசாங்கத்தின் தலைவராகவும் மற்றும் ஆயுத படைகளின் தலைமைத் தளபதியாகவும் காணப்படுகின்றார் என குறிப்பிடுகின்றது. ஜனாதிபதியால் அந்த அதிகாரங்கள் மற்றும் செயற்பாடுகளை நிறைவேற்றுவதில் நிறுவனரீதியாக எவ்விதமான கட்டுப்பாடுகளும் காணப்படவில்லை.

(v) ஜனாதிபதி பாராளுமன்றத்திற்கு மட்டுமே பொறுப்புள்ளவர். அவர் அமைச்சரவையின் தலைவராக இருந்தாலும் அவர் பதிலளிக்க வேண்டிய அவசியமில்லை. அமைச்சரவைக்கு எதிராக சட்டமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்டாலும் அது ஜனாதிபதியை எவ்விதத்திலும் பாதிக்காது.

(vi) இலங்கையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையின் நேரடி விளைவு அது பாராளுமன்றத்தின் நிலைப்பாட்டை மிகவும் பலவீனப்படுத்தியுள்ளதாகும்.

(vii) பாராளுமன்றத்தை கலைப்பதற்கான அதிகாரங்கள்: ஜனாதிபதி அவ்வப்போது பிரகடனத்தின் மூலம் பாராளுமன்றத்தை கூட்டலாம், ஒத்திவைக்கலாம் மற்றும் கலைக்கலாம். கடந்த காலங்களில் இந்த அதிகாரத்தை துஸ்பிரயோகம் செய்யும் ஜனாதிபதிகள் கடும் விமர்சனத்திற்கு உட்பட்டுள்ளனர்.

(viii) அமைச்சரவையின் மீதான அதிகாரங்கள்: அமைச்சரவையின் அமைச்சர்களின் எண்ணிக்கை மற்றும் அத்தகைய அமைச்சர்களுக்கான விடயங்கள் மற்றும் செயல்பாடுகளை ஒதுக்குதல் போன்றவற்றை ஜனாதிபதியே தீர்மானிக்கிறார். (சரத்து 44,45.46). கடந்த காலங்களில் ஜனநாயகத்திற்கு விரோதமான இலக்குகளை அடைய ஜனாதிபதிகள் இந்த அதிகாரத்தையும் துஸ்பிரயோகம் செய்துள்ளனர்.

(ix) ஜனாதிபதிகள் நீதித்துறையின் சுதந்திரத்திலும் குறுக்கீடு செய்துள்ளனர். இது இலங்கையின் நிறைவேற்று ஜனாதிபதி முறையின் மற்றொரு அம்சம் என விமர்சகர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

(x) இந்த விமர்சனங்கள் இலங்கையில் நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்கான வலுவான விவாதத்திற்கு வழிவகுத்துள்ளன.

## (III). உலக அரசியலின் புதிய போக்குகள் (10 புள்ளிகள்)

- உலக அரசியலில் தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் புதிய போக்குகள் தோன்றியுள்ளன. அவையாவன

1. பல்துருவ அதிகார சமநிலை முறைமை:

- இரண்டாம் உலகப் போரின் முடிவில் அமெரிக்க மற்றும் சோவியத் ஒன்றியத்திற்கு இடையேயான பனிப்போர் உறவு சர்வதேச சமூகத்தில் சர்வதேச முறைமையை போட்டித்தன்மை மிக்க இரண்டு பெரிய முகாம்களாக பிரிக்கின்ற இருதுருவ அதிகார சமநிலையை ஏற்படுத்தியது,
- 1990 களில் சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சிக்கு பிறகு கம்யூனிசத்திற்குப் பிந்தைய உலகம் ஆரம்பத்தில் ஒரு துருவ உலகநிலை உருவாகும் திசையில் நகர்ந்ததாகத் தோன்றியது.
- 1990களுக்குப் பிறகு உலகளாவிய சமூகத்தில் ஒரு மாற்று உலக முறைமை நிறுவப்பட்டது. கிழக்கு ஆசிய நாடுகள் பொருளாதார ரீதியாக பலம் வாய்ந்த நாடுகளாக உருவெடுத்தன. ஆசியான் ஒரு பிராந்திய பொருளாதாரக் கூட்டாக உருவெடுத்தது. ஐரோப்பிய ஒன்றியம் ஐரோப்பாவின் பொருளாதார மற்றும் அரசியல் அதிகார சக்தியின் வெளிப்பாடாக உருவானது.

- BRICS நாடுகள் வளர்ந்து வரும் பொருளாதார சக்திகளிடையே புதிய ஆற்றல்மிக்க கூட்டணியாக உருவெடுத்தன. AUKUS மற்றும் QUAD ஆகியவை புதிய கூட்டாண்மையாகவும் வெளிப்பட்டன. சர்வதேச முறைமை பல அதிகார முகாம்களாக உருவாகத் தொடங்கியது, இது புதிய பல துருவ அதிகார சமநிலை முறைமையை நிறுவுவதைக் குறிக்கிறது.

2. மாற்று சர்வதேச தொடர்புகள்:

- நவீன உலக முறைமை சர்வதேச சமூகத்தில் உருவாகும் மக்களின் மாற்று தொடர்பாடல் வலையமைப்பையும் கொண்டிருக்கின்றது. இந்த தொடர்பாடல்கள் இராஜதந்திரம் மற்றும் வெளிநாட்டு விவகாரங்கள் போன்ற .முறையான வழிகளைப் பயன்படுத்துவதில்லை.
- இணைய வலையமைப்புகள்: சர்வதேச சமூகத்தில் மிகவும் மென்மையான மற்றும் கட்டுலனாகாத அதிகார உறவுகளை வளர்ப்பதற்கு மாற்று தேசிய மற்றும் சர்வதேச வலையமைப்புகள் தோன்றியுள்ளன . “அரபு வசந்தம்“, பல ஏனைய சர்வதேச சமூக இயக்கங்கள் மற்றும் முக்கியமான நிகழ்வுகள் இணைய சர்வதேச வலையமைப்புகளினூடாக நிறுவப்பட்டன. இது சமகால உலகமயமாக்கல் உலகில் முற்றிலும் புதிய நிகழ்வு ஆகும்.

3. புதிய சமூக இயக்கங்கள்:

- சர்வதேச அரசியல் மற்றும் சமூக நடவடிக்கைகளை அணிதிரட்டுவதில் புதிய சமூக இயக்கங்களும் ஒரு மாற்று சக்தியாக உருவாகியுள்ளன. அவர்களின் குறிக்கோள்களும் நலன்களும் மரபு ரீதியான சமூக இயக்கங்களின் நிகழ்ச்சி நிரலில் இல்லாத பிரச்சினைகளை உள்ளடக்கியுள்ளது.
- மனித உரிமைகள், பெண்களின் உரிமைகள், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, சிறுபான்மையினரின் உரிமைகள் போன்ற பிரச்சனைகளில் உலகெங்கிலும் உள்ள குடிமக்களை அவர்கள் அணிதிரட்டுகிறார்கள்.
- புவி வெப்பமடைதல், குடிநீர் பற்றாக்குறை, வறட்சி மற்றும் இயற்கை பேரழிவுகள், சுகாதார பிரச்சனைகள், எச்ஐவி / எய்ட்ஸ் மற்றும் கோவிட் -19 போன்ற தொற்றுநோய்களிலிருந்து எழும் புதிய சுற்றுச்சூழல் சவால்கள் இதற்கு உதாரணங்களாகும்.

4. அமெரிக்காவிற்கும் சீனாவிற்கும் இடையிலான புவிசார் அரசியல் போட்டி:

- உலகளவில் மேற்கத்திய ஆதிக்கம் குறைந்து வரும் நிலையில் பனிப்போருக்குப் பிறகு உலகின் இரண்டாவது சக்திவாய்ந்த நாடாக சீனா தோற்றம் பெற்றுள்ளது. இரு நாடுகளும் குறிப்பாக தொழில்நுட்பம் மற்றும் இராணுவத் துறைகளில் அதிக தன்னிறைவு பெற முயற்சிப்பதன் மூலம் மூலோபாய போட்டியில் தீவிரமாக ஈடுபடுவதற்கான வாய்ப்புகள் அதிகமாக காணப்படுகின்றன.

5. உக்ரைன் மோதல்:

- ரஷ்யா மற்றும் உக்ரைனின் புதிய தாக்குதல்களால் உக்ரைனில் மோதல் நீடிக்கிறது. வளர்ந்து வரும் பொருளாதார அழுத்தங்கள், இராணுவப் பின்னடைவுகள் மற்றும் இராணுவத் தலைமையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் என்பன காணப்பட்ட போதிலும் ரஷ்யா தனது நோக்கங்களிலிருந்து விலகிச் செல்வதில் ஆர்வம் காட்டுவதாகத் தெரியவில்லை.

6. உலகளாவிய பொருளாதார மந்தநிலை:

- உலகளாவிய பொருளாதார வளர்ச்சி மெதுவாக காணப்படுகின்றது மற்றும் பல நாடுகளின் பொருளாதாரங்கள் இதனால் பாதிக்கப்படும் என்பதை அனைவரும் ஒப்புக்கொள்கிறார்கள். உலகளாவிய பொருளாதார மந்தநிலை பல அரசாங்கங்களை அதிக வரிகளை அறிமுகப்படுத்த வழிவகுக்கிறது. பல நாடுகளில் வேலையின்மை மற்றும் இணைய வழி குற்றச் செயல்கள் உள்ளடங்கலான குற்ற செயல்களும் அதிகரித்துள்ளன.

## (IV). ஜனநாயக ஆட்சி முறையும் இலங்கையின் அனுபவங்களும் (10 புள்ளிகள்)

- ஜனநாயக ஆட்சியில் இலங்கையின் அனுபவம் கலவையான ஒன்றாக காணப்படுகின்றது. இது சாதனைகள், பின்னடைவுகள் மற்றும் மறுமலர்ச்சி செயற்பாடுகள் என்பவற்றை உள்ளடக்கியதாகும்.
- நவீன ஜனநாயகத்திற்கான மாற்றம் பிரித்தானிய காலனித்துவ ஆட்சியின் கீழ் ஏற்பட்டது. 19ஆம் நூற்றாண்டில் பிரதிநிதித்துவக் முறை மிகக் குறைந்த அளவே அறிமுகப்படுத்தப்பட்டது. 1833இன் கோல்புருக் சீர்திருத்தங்களின் கீழ் பொருளாதார மற்றும் சமூக தாராளமயமாக்கல் தொடங்கப்பட்டது.
- 1931இன் டொனமூர் சீர்திருத்தங்கள் இலங்கையின் ஜனநாயகமயமாக்கல் செயற்பாட்டில் ஒரு முக்கிய திருப்புமுனையாக அமைந்தது. டொனமூர் சீர்திருத்தங்கள் இலங்கைக்கு சர்வஜன வாக்குரிமை மற்றும் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட சட்டமன்றம் என்பவற்றை அறிமுகப்படுத்தியது.
- டொனமூர் காலத்தில் துடிப்பான சிவில் சமூகத்தின் செயற்பாடகள் குடிமக்கள் மத்தியில் அரசியல் விழிப்புணர்வினை ஏற்படுத்தியது. தேசியவாத மற்றும் தொழிற்சங்க இயக்கங்கள் செயற்பாட்டிலுள்ள சிவில் சமூகத்தின் முக்கிய கூறுகளாக இருந்தன, இது ஜனநாயகமயமாக்கல் செயன்முறையின் முக்கிய அம்சமாக காணப்பட்டது.
- 1947இன் சோல்பரி அரசியலமைப்பு அடிப்படையில் தாராளவாத ஜனநாயக ஆட்சி முறையை நிறுவியது. இது ஒரு புதிய ஈரங்க சட்டமன்றம், சட்டமன்றத்திற்கு பொறுப்பான அமைச்சரவை அரசாங்கம், சட்டத்தின் ஆட்சி முறை, சுதந்திரமான நீதித்துறை, சிறுபான்மை பாதுகாப்பு மற்றும் வரையறுக்கப்பட்ட அரசாங்கத்தை அறிமுகப்படுத்தியதோடு பிரதிநிதித்துவ ஜனநாயக முறையையும் தொடர்ந்தது. ஆயினும் சோல்பரி அரசியலமைப்பில் உரிமைகள் மசோதா காணப்படவில்லை.

- 1950களில் சிங்கள- தமிழ் இனப் பதற்றம் அதிகரித்த போதிலும் 1970கள் வரை இலங்கையின் ஜனநாயக முறைமை சுமூகமாகச் செயற்பட்டது.
- இந்த நிலை 1970களின் முற்பகுதிக்குப் பின்னர் மாறியது. மறைந்திருந்த சமூக மற்றும் அரசியல் பதற்றம் 1971 இல் இளைஞர் கிளர்ச்சியின் வடிவத்தில் முதலில் வெளிப்படத் தொடங்கியது.
- 1950களில் தொடங்கிய சுயாட்சிக்கான தமிழ் தேசிய இயக்கம் 1970களின் பிற்பகுதியில் பிரிவினைவாத இயக்கமாக தன்னை வளர்த்துக் கொண்டது. பின்னர் 1980களின் முற்பகுதியில் அது உள்நாட்டுப் போராக மேலும் வளர்ந்தது. இவ்வாறாக 1980களுக்குப் பின்னரான காலப்பகுதி இலங்கையின் ஜனநாயக ஆட்சி பெரும் பின்னடைவைக் குறித்து நின்றது.
- 1978ம் ஆண்டு அரசியலமைப்பு இலங்கையின் ஜனநாயக ஆட்சியை பலவீனப்படுத்துவதற்கும் பங்களித்தது. அது இலங்கையின் அரசியலமைப்பு ஆளுகையை வெஸ்ட்மின்ஸ்டர் மாதிரியான பாராளுமன்ற அரசாங்கத்திலிருந்து விலகி பிரெஞ்சு மாதிரியிலான ஜனாதிபதி முறையுடன் கூடிய ஒரு கலப்பு அரசியலமைப்பு முறையை ஸ்தாபித்ததன் மூலம் மாற்றியது.
- புதிய ஜனாதிபதி முறை நிறைவேற்று அதிகாரத்தின் கீழ் சட்டமன்றத்தை கொண்டு வந்தது. இறுதியில் சட்டமன்றம் மற்றும் நீதித்துறை இரண்டையும் ஜனாதிபதி கட்டுப்படுத்தினார். ஜனாதிபதி பதவி எவ்விதமான சமநிலைத் தலையீடுகளுமின்றி அரச அதிகாரத்தின் மைய நிறுவனமாக காணப்பட்டது. .
- ஜனநாயக ஆட்சியில் ஏற்பட்ட இந்த பின்னடைவுகளுக்கு மத்தியில் 1978 அரசியலமைப்பின் ஒரு முக்கிய அம்சமாக மக்கள் தங்கள் உரிமைகள் மற்றும் சுதந்திரங்களைப் பாதுகாப்பதற்கும் நீதித்துறைப் பரிகாரத்தினைத் தேடுகின்ற வகையில் அடிப்படை உரிமைகள் அத்தியாயம் ஒன்று கொண்டுவரப்பட்டது.
- 'ஜனநாயக பின்னடைவு' காலப்பகுதியின் போதெல்லாம் இலங்கையின் அரசியலின் ஒரு முக்கிய அம்சமாக 'ஜனநாயகத்தின் மீளெழுச்சி' அவ்வப்போதும் தொடர்ச்சியாகவும் ஏற்பட்டு வந்துள்ளது.
- அரசியலமைப்பு சர்வாதிகாரம், உள்நாட்டுப் போர், அரசியல் வன்முறை மற்றும் இராணுவமயமாக்கல் ஆகியவற்றுக்கு மத்தியில் இலங்கையின் ஜனநாயகம் மறைந்துவிடவில்லை ஆனால் பலவீனமாக காணப்பட்டது,
- ஜனநாயக நிறுவனங்கள் தப்பிப்பிழைத்தன மற்றும் மக்கள் ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை கொண்டிருந்தனர். வன்முறை மற்றும் முறைகேடுகள் காணப்பட்டிருந்தாலும் தேர்தல்கள் முறையாக நடத்தப்பட்டன. உள்நாட்டுப் போருக்கு மத்தியில் ஒப்பீட்டளவில் அமைதியான முறையில் அரசாங்கங்கள் மாற்றப்பட்டன.
- ஜனநாயக நிறுவனங்கள், விழுமியங்கள் மற்றும் செயன்முறைகளில் தொடர்ந்து மக்கள் நம்பிக்கையை வெளிப்படுத்தினர். தேர்தலில் மக்களின் பங்கேற்பு தொடர்ந்தும் அதிகமாக இருந்தது. ஜனநாயக அரசியல் சீர்திருத்தங்களுக்கான வலுவான விவாதம் சமூகத்தில் வெளிப்பட்டது.
- 1978 அரசியலமைப்பையும் அதன் ஜனாதிபதி முறையையும் சீர்திருத்தி அதற்கு பதிலாக பாராளுமன்ற அரசாங்கத்தை கொண்டு வருவது இந்த ஜனநாயக இயக்கத்தின் முக்கிய அம்சமாக காணப்பட்டது.



Downloaded from Past Papers Wiki - Extensive collection of Past papers, Notes and much more!

**(V). இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையின் அண்மைக்காலப் போக்குகள் (10 புள்ளிகள்)**

- இலங்கையில் ஆட்சி மாற்றத்துடன் அண்மைக்கால வெளியுறவுக் கொள்கையில் மறுசீரமைப்புகளும் ஏற்பட்டுள்ளன.
- 2015 க்குப் பின்னர் இலங்கையின் வெளியுறவுக் கொள்கையில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டுள்ளது. அதன் முக்கிய போக்கு மற்றும் வெளியுறவுக் கொள்கையின் முக்கிய நோக்குநிலையாக பொருளாதார இராஜதந்திரத்தை வலியுறுத்துதல் காணப்படுகின்றது. இவ்வாறு பொருளாதார காரணிகள் இலங்கையின் உலகளாவிய மற்றும் பிராந்திய ரீதியிலான பலதரப்பு மற்றும் இருதரப்பு உறவுகளில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.
- தற்போது இலங்கையின் வெளியுறவுக் கொள்கையானது சர்வதேச பொருளாதார அதிகார சமநிலையில் ஏற்படும் மாற்றங்களுக்கு அதிகமாக பதிலளிக்கிறது. சர்வதேச நாணய நிதியம் (IMF), உலக வங்கி அல்லது புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுக்கான சர்வதேச வங்கி (WB/IBRD), உலக வர்த்தக அமைப்பு (WTO), சர்வதேச நிதி கூட்டமைப்பு (IFC) மற்றும் உலக பொருளாதார மன்றம் (WMF) ஆகியவற்றுடனான நெருக்கமான தொடர்பு மூலம் இது இடம்பெறுகிறது.
- அதே நேரத்தில் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் சீனா போன்ற புதிய பொருளாதார முன்னணி நாடுகளின் தோற்றத்தால் உலகில் புதிய பொருளாதார அதிகார சமநிலை வலியுறுத்தப்படுகிறது. உலக அதிகார சமநிலை அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் சீனாவின் ஆதிக்கத்தில் உள்ளது என்பதை இலங்கை அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறது.
- இலங்கையின் தற்போதைய அரசாங்கத்தின் வெளியுறவுக் கொள்கையானது மேற்கத்திய நாடுகளுக்குச் சார்பானதாகத் தோன்றினாலும் UNP அரசாங்கம் கடந்த காலத்தை விட இந்தியாவுடன் அதிக புரிந்துணர்வு மற்றும் ஒத்துழைப்புக் கொள்கையை முன்னெடுத்து வருகிறது. சீனாவுடனான பொருளாதார ஒத்துழைப்பும் ஒரு குறிப்பிடத்தக்க அளவில் இடம்பெறுகின்ற போக்கு காணப்படுகின்றது.
- முந்தைய SLPP அரசாங்கத்தின் வெளியுறவுக் கொள்கையானது கலாச்சார மற்றும் கருத்தியல் காரணிகளின் அடிப்படையில் ஆசியா சார்ந்த வெளியுறவுக் கொள்கையினையுடைய பிராந்தியவாதத்தின் தாக்கத்திற்கு உட்பட்டிருந்தது.
- முடிவாக இலங்கையின் வெளியுறவுக் கொள்கையானது உலகின் ஏனைய நாடுகளை முன்னோக்கிப் பார்க்கும், இணைந்து செல்லும் ஈடுபாடுள்ள ஒன்று என்று கூறலாம். இது இருதரப்பு, பிராந்திய, உலகளாவிய புவிசார் - அரசியல் மற்றும் பொருளாதார சூழலின் யதார்த்தமான சமகால மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டது.

PAST PAPERS WIKI


(60) www.PastPapers.wiki (60)




2024 A/L Tamil Past Paper Book (Tamil Medium)

රු 850.00

or 3 X රු 283.33 with KOKO




2024 A/L Political Science Past Paper Book (Tamil Medium)

රු 1,200.00

or 3 X රු 400.00 with KOKO




2024 A/L Islamic Past Paper Book (Tamil Medium)

රු 850.00

or 3 X රු 283.33 with KOKO




2024 A/L Islamic Civilization Past Paper Book (Tamil Medium)

රු 850.00

or 3 X රු 283.33 with KOKO




2024 A/L Geography Past Paper Book (Tamil Medium)

රු 1,000.00

or 3 X රු 333.33 with KOKO




2024 A/L Art Past Paper Book (Tamil Medium)

රු 500.00

or 3 X රු 166.67 with KOKO




2024 A/L SFT Past Paper Book (Tamil Medium)

රු 800.00

or 3 X රු 266.67 with KOKO




2024 A/L ICT Past Paper Book (Tamil Medium)

රු 900.00

or 3 X රු 300.00 with KOKO




2024 A/L ET Past Paper Book (Tamil Medium)

රු 850.00

or 3 X රු 283.33 with KOKO




2024 A/L BST Past Paper Book (Tamil Medium)

රු 800.00

or 3 X රු 266.67 with KOKO




2024 A/L Agricultural Science Past Paper Book (Tamil Medium)

රු 1,100.00

or 3 X රු 366.67 with KOKO




2024 A/L Common General Test Past Paper Book (Tamil Medium)

රු 600.00

or 3 X රු 200.00 with KOKO




2024 A/L Business Studies Past Paper Book (Tamil Medium)

රු 850.00

or 3 X රු 283.33 with KOKO




2024 A/L Accounting Past Paper Book (Tamil Medium)

රු 1,000.00

or 3 X රු 333.33 with KOKO




2024 A/L Economics Past Paper Book (Tamil Medium)

රු 900.00

or 3 X රු 300.00 with KOKO




2024 A/L Chemistry Past Paper Book (Tamil Medium)

රු 1,000.00

or 3 X රු 333.33 with KOKO




2024 A/L Biology Past Paper Book (Tamil Medium)

රු 750.00

or 3 X රු 250.00 with KOKO




2024 A/L Physics Past Paper Book(Tamil Medium)

රු 1,050.00

or 3 X රු 350.00 with KOKO



**LOL STORE PVT LTD** Copyright ©2023

We Using Safe Payment For

Easy Monthly Installments | KOKO | CASH ON DELIVERY | VISA